ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ளு மாசி-மீ 7-உ (18—2—1934) | மலர் 13.

தொழிலாளர் வாழ்வு.

"பண்டித மோதிலால் நேரைப்பறிகொடுத்தோமே" என்ற மெட்டு.

(தோழர் ப. ஜீவானந்தம்)

பல்லவி.

ஏழைத்தொழிலாளர் வாழ்வு
இன்பம் சூழ்கவே
இன்பம் சூழ்கவே—புவித்-
துன்பம் வீழ்கவே (ஏழை)

(பாட்டு)

வாழையடி வாழையாக வந்தவீணர் கூட்டம் போக
வாழ்வடையப்பாடுபட்டு வாடுகின்றவர்
வாடுகின்றவர்—திண்டாடுகின்றவர் (ஏழை)

[தொகையறா]

புளிக்கின்ற கூழுக்கும் எறிக்கின்ற வெயில்தனில்
புழுவாய்த் துடித்துழைக்கிறார்
பொந்துண்டு பாம்புக்கு வளையுண்டு நண்டுக்குப்
புகலின்றியே தவிக்கிறார்.
அரிக்கின்ற காசுக்கு உதைக்கின்ற உதையும்
அழுதழுதுமே தின்கிறார்.
அடிமைபால் கவலைபால் கடையராய் வறியராய்
ஆறாத்துயருண்கிறார்.
களிக்கின்ற பணக்காரர் கொழுக்கின்றதைக்கண்டும்
கர்மத்தை நொந்தழுகிறார்
கருத்துண்டு கைபுண்டு உருப்படுவமென்னாது
காலமெல்லாந்தொழுகிறார்
இளிக்கின்ற பல்லோடு பழிக்கின்ற செல்வரிடம்
இரந்திரந்தே மெலிகிறார்.
எச்சிலிலை மீதிலே குக்கலொடு சண்டையிடும்
இழிவடைந்தே நலிகிறார்.

(பாட்டு)

பாட்டாளி மக்கள் தொல்லை
பார்க்கச்சற்றும் சகிக்கவில்லை.
கூட்டாளியாகில் அவர் கோரும் க்ஷேமமே
கோரும் க்ஷேமமே—தரும்—கோடி லாபமே (ஏழை)

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந்நூல்கள்:—

		ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை	...	2	0
தமிழ்த் தென்றல்	...	2	0
முருகன் அல்லது அழகு	...	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	...	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	...	2	8
என்கடன் பணி செய்து கிடப்பதே	...	0	8
சைவத்தின் சமரசம்	...	0	8
சைவத்திறவு	...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானரும்	...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	...	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	...	0	8
நாயன்மார்	...	0	3
சைவ சமய சாரம்	...	0	1
இமயமலை அல்லது தியானம்	...	0	6
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	...	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்	...	0	4
முருகன் அருள் வேட்டல்	...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அமுத சுரபி.

சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினுலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட்பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3— 8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—
பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழி கேட்லாக் இனம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை	0—6—0
5.	மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
8.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	0—6—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் [illegible] ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவ[illegible] கிரயம் ரூ. 4—0—0

விலாசம்:—
மானே[illegible]த்தகாலயம், ஈரோடு.

வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம குஷ்ட மேகங்களுக்குஅனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்வந்திரிஔஷதசாலை பழனி. S.I.

முன்னேற்றம்.

பிரிட்டீஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய்நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

"குடி அரசு" புதிய வால்யூம்.

—*—

நமது "குடிஅரசு" பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு
"புரட்சி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.
தபால் செலவு வேறு.

பணம் முன்னதாக அனுப்பி விடவேண்டும். இல்லாவிட்டால் சவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

'பிரசண்டமாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை.

உள்நாடுவருட்சந்தா ரூ. 1—0—0
வெளிநாடு .... ரூ 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

போல்ஷ்விக் அரசாட்சி
எல்லா தேசங்களிலும் நன்மை பயக்குமா?

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பார்ட்ரண்டு ரஸ்ஸலின் பதில்.

தோழர் பார்ட்ரண்டு ரஸ்ஸல் ஸ்காட் நியரிங்கை மறுத்துப் பேசியதின் சாராம்சமாவது:- "எனக்கு தோழர் ஸ்காட்நியரிங் வைத்திருக்கும் வேலை மிகக் கடினமான வேலை. நம்முடைய தொழில் நாகரீகம் பல விஷங்களை உற்பத்திசெய்கின்றதென்றும், அவ்விஷங்களை எரிவர அப்புறப்படுத்தி சிகிச்சை செய்யாவிடின் மனித முயற்சியால் ஏற்பட்ட இந்த மேற்கு தேசங்களின நாகரீகம் வெகு சீக்கிரம் க்ஷீணிக்குமென்று நானே பலதடவை புத்தகங்களில் எழுதியிருக்கின்றேன். தோழர் ஸ்காட் நியரிங் என் வார்த்தைகளைக் கொண்டே என்னைச் சுட்டிக்காண்பிப்பதுமல்லாமல் உங்களை உற்சாஹப்படுத்த வேண்டிய காரியத்தையும் எனக்குக் கொடுத்திருக்கின்றார்.

நாம் பேசவேண்டிய சமாசாரம் என்ன? மேற்குதேச நாகரீகம் சமீபத்தில் சண்டைகளாலாவது, இன்னும் மற்றகாரணங்களாலாவது நாசமடையுமா? என்பது தற்பொழுது நாம் விசாரிக்கவேண்டிய கேள்வியல்ல. நாம் வெகு அபாயகரமான ஸ்திதியிலிருக்கின்றோமென்றும், ஆராய்ச்சியால் ஏற்பட்ட கல்வியை நன்கு உபயோகப்படுத்தாமலிருந்தால் நம் நாகரீகம் நாசமடையுமென்றும் நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் நாம் பேசவேண்டிய கேள்வி: நம் நாகரீகமே நாசமடையக்கூடிய அபாயகரமான கலவரநாள்களிலாவது, மற்று எக்காலத்திலாவது சோவியத் ராஜாங்கமுறையை நாம் கையாளுவோமா? எப்பேர்பட்ட கலவரம் ஏற்பட்டாலும் சரி, ஏற்படாமற்போனாலும் சரி, சோவியத் அரசாங்கமுறையை மேற்குதேசங்கள் கையாளமாட்டா என்பது திண்ணம்.

தோழர் ஸ்காட் நியரிங் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) சொல்லியபடி அரசாங்கமுறை பொருளாதார முறையையும், சமூகவிருத்தியையும் ஒத்திருக்கின்றதென்று சொன்னார். சரி அதை ஒப்புக்கொள்வோம். போல்ஷ்விக்காரர்கள் ராஜீய இயந்திரத்தை ருஷ்யாவில பிடித்துக்கொண்டபொழுது ருஷ்யா கைத்தொழில், தற்காலத்தில் நம் தேசங்களில் கைத்தொழிலிருக்கும் ஸ்திதியைவிட வெகு வித்தியாசமாக விருந்ததல்லவா? அங்கே முதலாளித்வம் அப்பொழுதுசிறுபாலன. கைத்தொழிலெல்லாம்குடிசைக்கைத்தொழில்கள். மிஷின்களும், இங்குபோல் நுட்பமான இயந்திரங்களும் கிடையா. நீங்கள் என்னை நம்பவேண்டாம். லெனினை (Lenin) வாசியுங்கள். புதிய பொருளாதார முறை (New Economic Policy) கையாள வேண்டுமென்று அவர் பேசியதைப் படியுங்கள். ருஷ்யாவில குடிசைக்கைத்தொழில்களும்,வேளாள விவசாயமும் முடிகொண்டிருப்பதைப்பற்றி அவர் விசனிக்கின்றார். ருஷ்யா மேற்குதேசங்களின் மிஷின் முறைகளைக் கையாளாது பண்டைக்கால முறைகளைப் பின் பற்றுவதைக் கண்டிக்கின்றார். ஆகையால் நாம் தோழர் நியரிங் சொல்வதை ஒத்துக்கொண்டால் ருஷியா பொருளாதார ஸ்திதிக்குத்தகுந்த கவர்ன்மெண்டு நம் பொருளாதார ஸ்திதிக்கு தகுந்த கவர்ன்மெண்டைவிட வெகு வித்தியாசமாக விருக்கவேண்டுமென்பதற்கு ஐயமில்லை.

இங்கிலாந்திலும், ஆலிவர்க்ராம்வல் (Oliver cromwell) ராஜிய பாரம் சோவியத் அரசாட்சி முறையைத்தான் பின்பற்றியது. அது அக்காலத்தில் இங்கிலாந்து பொருளாத அபிவிருத்திக்கு ஒத்திருந்தது. சிலர் ருஷியாவின் பால முதலாளித்வம் இங்கிலாந்தில் அக்காலத்தில் இல்லையென்று சொல்லலாம். ரயில்கள் கிடையாது. எண்ணையும் சுரங்கங்களுமில்லை. ஆனால் வாசிக்கவும்,எழுதவும் தெரியாத ஒரு பெரிய ஜனத்தொகை இருந்தது. பூமிக்காரன், தொண்டுசெய்யும் ஏழை என்ற பழய பிரிவினை க்ஷீணித்துக்கொண்டு வந்தது. ஒரு மத்திய வகுப்பு இருதிரத்தாருக்கும் இடையே விருத்தியடைந்து கொண்டுவந்தது. தவிரவும் தற்பொழுது ருஷியாவில் இருப்பது போல் க்ராம்வேலுக்கடியில் சாமியார்களடங்கிய ஒரு பெரும் சைன்யமிருந்தது. (Anarmy of Saints) ருஷியாவில் அச்சைன்யத்தை சிகப்பு சைன்யமென்று கூப்பிடுகிறார்கள். பெயர்தான் மாறுதல்.

க்ராம்வெல்லின் சாமியார் சைன்யத்தை ருஷியாவின் சிகப்புசைன்யத்திற்கு ஒப்பிட்டேன். அந்த சைன்யத்தை சேர்ந்தவர்கள், புஜபலத்துக்காவது, குறிபார்த்து நன்கு சுடும் வல்லமைக்காகவாவது சேர்க்கப்படவில்லை. சிலதத்வங்களை பூரணமனதுடன் ஒப்புக்கொள்வதற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். க்ராம்வெல்லின் சாமியார் சைன்யம் வெகு தீவிர பியூரிடர்களை (Puritans)க் கொண்டு எப்படி ஆரம்பிக்கப்பட்டதோ அம்மாதிரியே ருஷியா சிகப்பு சைன்யம் தீவிர பொதுவுடமை கக்ஷிக்காரர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும் எப்படி. போல்ஷ்விக் கக்ஷியினா அவர்கள் தேசத்துக்குச் சற்றும் தகாத ஜார்சாம்ராஜ்யத்தை கவிழ்க்கப் புறப்பட்டனரோ: அதே மாதிரி தற்கால முதலாளித்வத்தை விட வெகு கேவலமான அரசாட்சியை தொலைக்கத்தான் க்ராம்வெல்லின் சாமியார் சைன்யம் புறப்பட்டது.

ஆகையால் தோழர் நியரிங் சொன்னதையே ஒப்புக்கொண்டு நாம் ஆராய்ந்தால் ருஷியாவின் பொருளாதார சமூகவிருத்திக்குத் தகுந்த கவர்ன்மெண்டு, பலவிதங்களில் அதிகநாகரீகத்தை அடைந்திருக்கும் நம் சமூகத்துக்குத்தகுந்ததாயிருக்க முடியாது. நான் நம் தேசங்களில் புரட்சி ஏற்படாது என்று சொல்ல வரவில்லை. ஒரு தேசம் சண்டையில் தோல்வி அடைந்தால் நிச்சயம்தற்காலத்தில் புரட்சி ஏற்படும். அம்மாதிரி புரட்சி ஏற்படின் பின்புவரும் கவர்ன்மெண்டு ருஷிய கவர்ன்மெண்டு மாதிரியிருக்குமென்று மட்டும் நான் நம்பவில்லை.

தோழர் நியரிங் ருஷிய கவர்ன்மெண்டைப்பற்றி விஸ்தரிக்கும் போது அந்தக் கவர்ன்மெண்டைக் கிராமத்திலிருந்தும், தொழிற்சாலையிலிருந்தும் வரும் பிரதிநிதிகளால் நியமிக்கப்பட்ட கவர்ன்மெண்டென்று சொன்னார். நான் அதை ஒப்புக்கொள்ள தயாராகவில்லை. இந்த எலெக்ஷனெல்லாம் போலி எலெக்ஷன்கள் எலெக்ஷன்களில் எல்லோருக்கும் தெரியும்படியாக ஓட்டுக்கொடுக்க வெண்டும். தவிரவும் ஒவ்வொருவரும் ஓட்டு செய்யவேண்டும். ஓட்டுசெய்யாவிடிற் கையைத்தூக்கவேண்டும். தவிரவும் கவர்ன்மெண்டிற்கு எதிர்க்கக்ஷியினர் கூட்டங்கூடுவதற்குக்கூட இடம் அகப்படுவதில்லை. தினசரி பத்திரிகைகள் நடத்தமுடியாது.

ஆகையால் இந்த எலெக்ஷன்களைப்பற்றி நாம் கவனிக்க வேண்டாம். நான் இப்படி தேர்தல்கள் நடத்தப்படுவதைப்பற்றி அவதூறாகச் சொல்லவில்லை. இங்கு எலெக்ஷன்கள் பணக்காரர்கள் டமாரமடிப்பதுபோல் நடப்பதும் தெரிந்தவிஷயம். நம்கேள்வி: ருஷியாவில் நடந்திருப்பதை நாம் பின்பற்ற முடியுமா?

திரு. நியரிங் கார்ல் மார்க்ஸை (Karl Marx) பின்பற்றி பொருளாதார காரணங்கள் மட்டுமே சமூக அமைப்பை நிச்சயிக்கின்றன என்று சொன்னார். நான் அதை ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை. மதத்தால் ஏற்படும் நம்பிக்கைகள், வர்க்கக் காரணங்கள், புராதன கோட்பாடுகள் இவை எல்லாம் சமூக அமைப்பைப்பாதிக்கின்றன. உதாரணமாக ருஷிய நாகரீகத்தையும். சீன நாகரீகத்தையும் ஒத்துப்பார்ப்போம். இரு தேசங்களுக்கும் பொருளாதார முறையிலசற்றும் வித்தியாசங்கள் கிடையாது. ஆனால் என்னவித்தி

யாசமானநாகரீகம்! ருஷிய நாகரீகம் 1917-க்குமுன்புமதப்பற்றும், மனிதஉயிரைத்துரும்பாகக்கருதும் ராஜாங்க அதிகாரம் ஒருங்கே கூட்டப்பட்ட நாகரீகம். (Highly centr alised) சீனர் நாகரீகமோ சற்றும் மதப்பற்றில்லாத, ஆராய்ச்சிக்கேற்ற, ராஜாங்க அதிகாரம் ஓங்காத நாகரீகம். இதற்குக் காரணம் என்ன? தேசிய குணநிசயமும், நூற்றாண்டுகளாக பொதுஜனங்களின் வாழ்க்கையுமே.

நாம் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன்பு, ருஷியாவில் தற்பொழுது 6-லக்ஷம் போல்ஷ்விக்காரர்களால் செய்யப்படும் காரியத்தை செய்திருந்தால் அதிகபலன் கிடைத்திருக்கும், ஆனால் அந்த காரியம் இச்சமயத்தில் சற்றும் பொருத்தமில்லை. இருநூற்றைம்பது வருடங்களில் நம் வாழ்க்கையும் தேசியக் குணங்களும் மாறிவிட்டன. 18-ம் நூற்றாண்டின் நம்பிக்கையற்ற நுட்ப ஆராய்ச்சியும் 19-ம் நூற்றாண்டின் பூரண நம்பிக்கையும், சந்தோஷமும் நம் மனப்பான்மையை மாற்றிவிட்டன.

போல்ஷ்விக் கக்ஷிக்காரர்கள் தாங்கள் சாஸ்திரப்படி நடக்கின்றவர்களென்றும், இயற்கைச் சாஸ்திரங்களுக்கு மாறாக நடக்கின்றவர்களென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் சரியான சாஸ்திரி என்பவன் யார்? தான் சொல்லும் வார்த்தைகளை நன்குணர்ந்தவனும், சிறிது சிறிதாக ஆராய்ச்சியால் ஏற்படும் நியாயங்களை அவசரப்பட்டுக் கோர்க்காதவனும், பரிக்ஷார்த்த தத்வங்களை மட்டும் நம்புகிறவனும், சிறிது தெரிந்தவுடன் வெகு கீர்த்தியான கல்பனைகளை ஏற்படுத்த ஆசைப்படாதவனும் தான் பெரிய சாஸ்திரி.

ஆனால் மார்க்சைப் பின்பற்றி சரித்திர முழுவதும் பொருளாதார காரணத்தால்தான் ஏற்பட்டது என்று சொல்பவர்கள் சாஸ்திரிகளாகமாட்டார்கள். மார்க்ஸ் சொன்னதுபோல் உலகம் ஒரே மாதிரிதான் முதலாளித்வத்திலிருந்து ருஷ்யாவைப்போல் போல்ஷ்விக்காரர்கள் கையிலகப்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. மனிதனின் புத்தியும், வாழ்க்கையும் எண்ணிறந்த விமரிசையுள்ளது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனைப்போலில்லை. இருவர் ஒரே பொருளாதார நிலைமையில் இருந்திருந்தபோதிலும் நடத்தையிலும், வாழ்க்கையிலும் மிக வித்தியாசப்படலாம். அம்மாதிரியேதான் இரண்டு தேசங்கள். இரண்டும் ஒரே பொருளாதார நிலைமையிலிருக்கலாம். ஒன்று க்ஷீணிக்கலாம், ஒன்று விருத்தியடையலாம்.

மார்க்ஸின் உபதேசம் வெகு லகுவாயிருக்கிறது. உலகமும், உலகத்தில் நடக்கும் வைபவங்களும் அவ்வளவு லகுவாக நாம் கருதமுடியாது. உலக முன்னேற்றத்தைப்பற்றி வெகு அழகாகவும், விமரிசையாகவும் பிரசங்கத்தைக் கேட்டால், நாம் இம்மாதிரி அதிசீக்கிரத்தில் முன்னேறுவோமென்று கூறிய பழைய ஞானிகளைப்பற்றிச் சற்று சிந்திப்போம்.

ஒரு பெரிய கலவரத்துக்குப் பின் ஓர் 'ராமராஜ்யம்' வரப்போகின்றது என்று பிதற்றுபவர் சாஸ்திரியல்ல. ருஷ்யாவில் நடந்ததே நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் நான் சொல்வதை விளக்குகின்றது. ருஷ்யாவில் 1917-ம் வருடத்துக் கிளர்ச்சிக்குப் பின்பு பெரிய புனருத்தாரணம் நடக்கப் போவதாகச் சொன்னார்கள். நான்கு வருடம் பூரணப் பொதுவுடமையைக் கையாண்டபின் அவர்கள் அப் பூரணப் பொதுவுடமையைச் சற்று சாந்தப்படுத்தவேண்டியிருந்தது. நான் பொது உடமை வேண்டாம் அல்லது பலிக்காது என்று சொல்வதாக எண்ணக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஜனங்கள் தயாராகவிருக்கவேண்டுமென்றும் அப்படித் தயாராகுவது பல நாட்கள் பிடிக்குமென்றும்தான் நான் வாதாடுகிறேன்.

ருஷியாவைப் போல்ஷ்விக்காரர்கள் பிடித்துக்கொண்டவுடன் சில வருடங்களுக்குப் பழைய ஜார் சக்கரவர்த்தி [Czar] அரசாண்டதுபோலவே ஆளவேண்டியிருந்தது. கவர்ன்மெண்டு சாரணர்களை உபயோகித்தும், போலீஸ்காரரைக்கொண்டு நாகரீக சட்டங்களுக்கு மாறாக அரஸ்டு செய்தும், ஜெயிலில் தங்கள் எதிரிகளை அகாரணமாகத் துன்புறுத்தியும், ஜனங்களைத் துப்பாக்கி மூலமும், வெடிகுண்டுமூலமும் பயமுறுத்தி ஆண்டும் வந்தனர். தற்காலத்தில் அது மாறிவிட்டது என்று நான் ஒப்புக்கொள்கிறேன். புதிய பொருளாதார முறையைக் கையாண்ட பின்பு அவ்வளவு நிர்ப்பந்தங்களில்லை.

தோழர் ஸ்காட்நியரிங் ருஷியாவில் எல்லோருக்கும் நியாயமும், சமதர்மமும் கிடைப்பதற்கு அதிக ஹேதுவிருக்கின்றதென்று சொல்லுகின்றார். அந்த மனப்பால் மிகவும் சிறப்பானதென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆயினும் ருஷியாவில் தற்பொழுது கூட அது முற்றிலும் நடைமுறையில்லை. பொருளாதார முறையில் மிகவும் வியக்கத் தக்க விதங்களில் சமதர்மம் ஓங்கியிருக்கின்றது. ஆனால் ராஜீய முறையில் சமதர்மமில்லை. [Political Justice] ராஜீய முறையில் சமதர்மமில்லாததால் சிலரிஷ்டப்பட்டால் பொருளாதார முறையில் கூட சமதர்மமில்லாமல் செய்யக் கூடுமல்லவா?

ஆகையால் ராஜீய வாதிகள் நியாயபுத்தியிலும், தேசபக்தியிலும் பொதுஜனக் கைங்கர்ய வாஞ்சையிலும்தான் போல்ஷ்விக் முறை நம்பி நடத்தப்படுகிறது. ஆனால் ராஜீய வாதிகளைப்பற்றி நமக்குக் கொஞ்சம் தெரியும். ராஜ்யவாதிகள் ராஜீய வாதிகள்தான், மேற்கு தேசங்களிலும் சரி, கிழக்குத் தேசங்களிலும் சரி அவர்களெல்லாம் ஒரே ஜாதி. அதுதான் ஓர் பெரும் கஷ்டம். அக்காரணத்தால்தான் எனக்குக் கலவரத்தாலும், அமைதியில்லாத முறைகளாலும் ஏற்படும் நன்மைகளைப் பற்றி நம்பிக்கையில்லை.

மேலும் ருஷியாவிற்கும், நமக்கும் ஓர் பெரிய வித்தியாசம். ருஷியாவில் ஓர் உபயோகமற்ற அரசாங்கமும், ஓர் உபயோகமற்ற பிரபு கோஷ்டியின் அரசாட்சியுமிருந்தன. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அதிகாரமுள்ள அரசரும் கிடையாது. மேலும் ராஜாங்க முறைகளில் தேர்ச்சிபெற்ற நிகவும் சாதுர்யமுள்ள பிரபுத்வமும் உயிருடனிருக்கின்றது. இவர்களில் பலர் தங்கள் புத்தியினாலும், சாதுர்யத்தினாலும், நிறைவேற்றும் ஜவாப்தாரித் தனமுள்ள பெரும நிர்வாகிகளாயிருக்கின்றனர். ஆகையால் ருஷ்யா போல்ஷ்விக்காரர்களைப்போல் இவர்களை நாம் ஆரம்பத்திலேயே வேண்டுமென்றால் நாம் இலகுவில் அதைச் செய்யமுடியாது, மைனாரிட்டியாகவிருந்துகொண்டு இந்தத் தேர்ச்சியடைந்த சாதுர்யம் வாய்ந்த பிரபுத்வத்தை தோற்கடிக்கமுடியாது. ஜனங்களின் மனப் பான்மையைத்தான் நாம் முதலில் மாற்றவேண்டும்.

ருஷ்யாவில் அது வேண்டியிருக்கவில்லை. ஜனங்களுக்கு அங்கு ஒன்றும் தெரியாது. மேலும் நூற்றாண்டு நூற்றாண்டுகளாகக் கொடுங்கோல் அரசாட்சியின் கீழிருந்ததால் அவர்களுக்குப் பலாத்கார அரசாட்சி முறையைப்பற்றி அவ்வளவு ஆக்ரோஷமில்லை. ஆனால் நாம குடியிருக்கும மேற்கு தேசங்களிலோ பலர் படிப்பாளிகள். ராஜீப முறைகளைத் தினே தினே சாப்பிடும் நேரங்களில் பரிசோதிப்பவர்கள். சுயேச்சைப் புத்தியுள்ளவர்கள், மனச்சாட்சியின் விதிகளில் நம்புகின்றவர்கள். பத்திரிகைகளின் சுயேச்சையை பூஜிக்கின்றவர்கள்.

ருஷ்யாவில் சோவியத் அரசாட்சி புகுந்துள்ள தீவிர வாதிகளின் அரசாட்சி ஒரே மனித அரசாங்க முறையிலிருந்து குடியரசு அரசாங்க முறைக்கு ஜனங்கள் பழக்கப்படும்வரையில் இந்தப் புத்தியுள்ள சிலரின் அரசாட்சி நன்மையை அளிக்கும். ஆனால் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் அதுபலிக்காது. இந்த ஜனங்கள் அரசாங்க முறைகளில் தேர்ச்சியடைந்தவர்கள். இங்கு பலாத்காரமாக ராஜீயத்தைப் பிடிக்க முயன்றால் ருஷியாவைப்போல் போல்ஷ்விக்பொதுவுடமைக்கட்சியினரிடத்தில் ராஜ்யம் அகப்படாது. இத்தாலியைப்போல்பேஸிஸ்டு [Fascist] கட்சியினர் கையிலகப்படும். இந்த பேஸிஸ்டு கட்சியினரை ஆட்டி வைப்பவர்கள் யார்? நான் முன் சொன்ன சாதுர்யமுள்ள புத்தியில் சிறந்த நிறைவேற்று ஜவாப்தாரித்தனமுள்ள நிர்வாகிகள் தான். அவர்களுக்குத் தங்கையிலிருந்த பழம் பாலில் நழுவி விழுந்தாற்போலாகும்.

படிக்கவும் எழுதவும் பெரும்பான்மையோருக்கு தெரிந்த தேசத்தில் ருஷ்யமுறை கையாளுவது பிரயோஜனமில்லை. ருஷியாவில் தற்காலத்தில் நடந்துவரும அரசாட்சி முறையை சற்று மதப்பற்றுள்ள முறையென்றே நான் சொல்லுவேன். குருஸ்துவுக்குப் பதிலாக அவர்கள் மார்க்ஸைக் கொண்டாடுகிறார்கள், நான் மார்க்ஸ் சொல்லுவதுபோல் பொருளாதார காரணங்கள மனிதனின் நடத்தையைப் பெரும்பாலும் தீர்மானிக்கின்றது என்றே சொல்லுவேன். ஆனால் பொருளாதாரக் காரணங்கள மட்டுமே மனிதனை ஆட்டி வைக்கின்றதென்று நான் சொல்லுவதற்குத் தயாராக வில்லை.

ஆகவே இக் காரணத்தால்தான் போல்ஷ்விக்காரர்கள் சாஸ்திரரீதியாகவில்லையென்று சொல்லுகின்றேன், அவர்கள் வேதம்மார்க்ஸின் புத்தகம். மாகஸின் வேதவாக்கு எக்காலத்திலும், எக் காரணத்தைக்கொண்டும் மாற்ற முடியாது. மார்க்ஸின் காலத்திற்குப் பின் மனித வாழ்க்கையைப் பற்றி பல சமாசாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் அவையெல்லாம மார்க்ஸ் வேத புத்தகத்தில் இல்லை, ஆகையால் அவை மனித வாழ்க்கைக்கு முக்யமில்லை. இருபதாம நூற்றாண்டில் ரோமி

தொடர்ச்சி 17-ம பக்கம் பார்க்க

தோழர் நீலாவதியின் கேள்விகள்.

தோழர் காந்தியின் பதில்.

நான் ஒரு பொதுவுடமைக்காரனே! ஆனால்.........?

(நமது நிருபர்)

திருச்சிக்கு 10-2-34 அன்று தோழர் காந்தி அவர்கள் விஜயம் செய்திருந்தபொழுது அன்றைய டாக்டர் டி. எஸ் எஸ். ராஜன் பங்களாவில் அன்று பகல் 1-30 மணிக்கு திருச்சி சுயமரியாதைச்சங்க உப தலைவர் எஸ். நீலாவதி அவர்களுடன் தோழர்களான ராமசுப்பிரமணியம், கே. என் வாசுதேவன், எ. சுப்பிரமணியம், எ. நடராஜன், டி. சம்பந்தம், பிரான்சிஸ்சி அபிமன்னன் எம். சிங்காரம் ஆகிய இன்னும் சில தோழர்களுடன் சென்றிருந்தார்கள். 35 நிமிஷங்கள் சம்பாஷணைகள் நடைபெற்றது. 28 கேள்விகள் கேட்கப்பட்டது. தோழர் காந்தியார் இராட்டையில் நூல் நூற்றுக்கொண்டே பதில் சொல்லிக்கொண்டிருந்தார். நீண்ட நேரம் ஆகி விட்டது. என்பது காரணமாய் இன்னும் சில கேள்விகள் விடப்பட்டன. அச் சமயம் அங்கு சம்பாஷணை நடக்கும்பொழுது தோழர்களான மீராபென், தாக்கர், சி. ராஜகோபாலாச்சாரியார், டி. எஸ். எஸ், ராஜன், டி. வி. சாமிநாத சாஸ்திரி ஆகியவர்கள் இருந்தார்கள். தோழர் நீலாவதி அவர்கள் காந்தி அவர்களிடம் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் கூறிய பதிலும்:—

1. கேள்வி:-தீண்டாமை ஒழிப்பதில் விருப்பமில்லாதவர்களிடமிருந்தும், அனுதாபமில்லாதவர்களிடமிருந்தும் உங்களுக்குப்பணம் வசூலிக்கப்படுகிற தென்பதை நீங்கள் அறிவீர்களா? அப்படியானல் அது முறையா?

பதில்;- தீண்டாமை ஒழிப்பதில் ஆர்வமற்றவர்களிடமிருந்தும் பணம் வசூல் செய்யப்படுவதை நான் அறியேன் எனக்காகக் கொடுக்கப்படும் பணங்களெல்லாம் தீண்டாமை ஒழிப்பதற்கு மனப்பூர்வமாக ஆதரவளிக்கின்றவர்களிடமிருந்தே வருவதாக நான் நினைத்தேன் என் கொள்கைக்கு முரண்பட்டவர்களிடமிருந்து நிர்ப்பந்தத்தின்பேரில் பணம் வசூலிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

2. கேள்வி:- உங்களுடைய பிரசங்கங்கள் எல்லாவற்றிலும் அடிக்கடி நீங்கள் கடவுளைப்பற்றியும், அவரது தன்மையைப் பற்றியும் அழுத்தமாகக் கூறுவதின் அபிப்பிராயமென்ன? அவ்வாறு கூறுவதால் ஏழை மக்களின் நன்மைக்கு அது பயன்படக் கூடுமென்று கருதுகின்றீர்களா?

பதில்:- ஆம் எனக்கு ஆண்டவன் ஒருவன் உண்டு என்ற மனப்பூர்வமான நம்பிக்கையிருப்பதனுல் அதை எல்லோருக்கும் எடுத்துக் கூறுவதில் நன்மை பயக்குமென்று கருதுகின்றேன்.

2. (a) கேள்வி:- கடவுளிடத்தில் நம்பிக்கையற்றவர்களை கடவுளை நம்புமாறு நீங்கள் வற்புறுத்துவது முறையா?

பதில்:- என் மனதில் தோன்றியதைஇவ்வுலகிலுள்ள எல்லோருக்கும் எடுத்துக் கூறுவது முறை என்றும், அவ்வாறு கூறுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது என்றும் நான் கருதுகின்றேன்.

3. கேள்வி:- கடவுளிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட நீங்கள் அவனன்றி ஓர் அணுவும் அசைவதில்லை என்ற கொளகையை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

பதில்:- ஆம் அழுத்தம் திருத்தமாக ஒப்புக்கொள்ளுகின்றேன். இவ்வுலகில் நடப்பது ஒவ்வொன்றும் அவன் ஆஞ்ஞையின் பேரிலேயே நடக்கின்றது.

3. (a) கேள்வி:- அப்படியானல் மதங்கள் தோன்றிய காலங்கள் தொட்டு இன்று வரை நாஸ்திகர்களையும் அக் கடவுள் படைப்பானேன்?

பதில்:- நாஸ்திகர்களையும் கடவுள் படைத்தானென்பது முற்றிலும் உண்மையே ஆனல் அவர்கள் ஆஸ்திகர்களாகவும், நாஸ்திகர்களாகவும் மாறுவது அவரவர்களைப் பொறுத்தது.

4. கேள்வி:- நீங்கள் தொழிலின் பேரிலேயே ஜாதி பிரிக்கப்பட்டிருக்கிறதென்று அடிக்கடி கூறுகின்றீர்களல்லவா?

பதில்:- ஆம்

4. (a) கேள்வி:- அப்படியானல் ஜாதியிலேயே ஒன்று உயர்வாகவும், ஒன்று தாழ்வாகவும் கருதப்படுவதனால் தொழில் முறையிலும் உயர்வு தாழ்வு கருதப்படவேண்டுவது அவசியந்தானே?

பதில்:- ஜாதியில் உயர்வு தாழ்வு இருக்க வேண்டுமென்று கூறுவதை நான் அடியோடு வெறுப்பதோடு அப்பேதத்தை ஒழிப்பதற்காகத்தான் பாடுபட முன்வந்திருக்கிறேன். சமபந்தி போஜனம் செய்வதாலும், கலப்பு மணம் செய்வதாலும், ஜாதி கெட்டுவிடுமென்று நான் கூறுவதில்லை. ஆனல் ஜாதிக் குரிய தொழிலை ஒருவன் புறக்கணிப்பானேஆனல் அவன் ஜாதி கெட்டவனாகிறான், தொழிலில் உயர்வு தாழ்வு இருப்பதாகக் கருதுவது மடத்தனமே யாகும்.

5. கேள்வி:- நீங்கள் பீகாரில் நடந்த பூகம்பதத்திற்குககடவுளுடைய கோபமே காரணமென்று கூறினீர்கள் இதை நீங்கள் Serious உண்மையாகவே கருதுகின்றீர்களா?

பதில்:- ஆம், பீகாரில் நடந்த பூகம்பத்திற்குக் கடவுளுடைய கோபந்தான் காரணமென்பது என்னுடைய அபிப்பிராயம். நான் கூறுவது அனைத்தையும் உண்மையாகவே கருதிக் கூறுகிறேன்.

5. (a) அப்படியானல் சைனு, ஜப்பான் முதலிய நாடுகளில் நடந்த பூகம்பத்திற்குக் காரண மென்ன?

பதில்:- அந் நாட்டு மக்கள் செய்த தீமையே தான் அதற்கும் காரணமாயிருக்க வேண்டும்.

5. (b) கேள்வி:- இந்தியாவில் பீகாரில் மாத்திரம் பூகம்பம் உண்டானேன் அது சென்னையில் உண்டாகாதிருப்பானேன்?

பதில்:- அது கடவுளுடைய சித்தம் கடவுளுக்கு பூகோள சாஸ்திரத்தில் கட்டுப்பாடு அதிகமில்லை.

6. கேள்வி:- வர்ணாச்சிரம தர்மப்படி ஒரு பிராமணப் பெண்ணை ஒரு வைசியன் விவாகம் செய்துகொள்ளலாமா?

பதில்:- இதற்கு பதில் உங்களது நான்காவது கேள்வியிலேயே கூறியிருக்கின்றேன். கலப்பு மணம் செய்வதனுல் வர்ணாசிரம தர்மம் கெட்டுப் போவதில்லை என்பதுவே எனது திடமான நம்பிக்கை.

7. கேள்வி:- இந்து மதத்தைப் பலப்படுத்துவதற்காக நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு பிரசாரம் செய்து அதன் பயனுய் அரசியல் சுதந்திரம் அடைய வேண்டுமென்று நினைப்பதைப்போல்கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் அவரவர்கள் மதத்தைப் பலப்படுத்த ஆரம்பித்து விட்டால் சகோதர தத்துவம் வெறி பிடித்த இருமதத்தினரிடையே எவ்வாறு நிலவக் கூடும்?

பதில்:- இந்து மதத்தைப்பலப்படுத்தி அதை அரசியல் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள நினைத்திருப்பதாக நீங்கள் கருதுவது தவறாகும். நான் இந்து மதத்தைப் பரிசுத்தப்படுத்த முயல்கின்றேனேயல்லாது பலப்படுத்த முயலவில்லை. இவ்வாறு நான் இந்து மதத்தைப் பரிசுத்தப்படுத்துகின்ற வகையில் மற்ற மதங்களும் பரிசுத்தமடையுமென்பது என்னுடைய நம்பிக்கை.

7. (a) கேள்வி:- அது எப்படி சாத்தியமாகும்?

பதில்:- அது சாத்தியமான காரியமென்பது தான் எனது அபிப்பிராயம்.

8. கேள்வி:- நீங்கள் இயந்திர வளர்ச்சியை ஆதரிக்கின்றீர்களா?

பதில்:- இல்லை.

8. (a) கேள்வி:- அப்படியானல் நூதன முறையில் அதிகமாக நூல் நூற்கக்கூடிய ஓர் ராட்டையைக்கண்டுபிடிப்பவர்களுக்குலக்ஷரூபாய் இனும் கொடுப்பதாகக் கூறினீர்களே? அது ஓர் இயந்திர சாதனமல்லவா?

பதில்:-இல்லை.

8. (b) கேள்வி:- இப்பொழுது நடைமுறையில் இருக்கின்ற இயந்திரங்களில் எவை எவை நாம் ஆதரிக்கலாமென்று நீங்கள் கூறக்கூடுமா?

பதில்:- நூல் நூற்கும் இந்த இராட்டினம் சிங்கர் தையல் மிஷின் முதலியவை.

8. (c) கேள்வி:- ஒரு மணிக்கு ஒரு சர்ட்டு தைக்கும் சிங்கர் தையல் மிஷினைவிட ஒரு மணிக்கு நூறு சர்ட்டுகள் தைக்கும் ஒரு சிங்கர் தையல் மிஷின் கிடைக்குமேயானல் அதை ஏற்றுக்கொள்வதில் உங்களுக்கு என்ன தடை?

பதில்:- தடையொன்றுமில்லை. ஆனல் சிங்கர் தையல் மிஷின் ஒரு குடிசைக்குள்ளும் இருந்து வசதியாக வேலை செய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.

8. (d) கேள்வி:- எந்த இயந்திரமாயிருப்பினும் ஒரு குடிசைக்குள்ளிருந்து செய்யக்கூடியதாயிருப்பின் அதை ஏற்றுக்கொள்ள உங்களுக்குத் தடையில்லையே?

பதில்:- பல ஆயிரம் மக்களின் வயிற்றில் மண்ணைப் போடும் இயந்திரம் எதுவாயிருந்தாலும் அதை நான் ஆதரிக்கத் தயாராயில்லை.

8, (e) கேள்வி:- 8-மணி நேரம் சரீர சிரமத்தோடு இயந்திரத்தின் உதவியில்லாமல் வேலைசெய்து 8-அணு பெறும் ஏழைகளுக்கு இயந்திரங்களின் உதவியைக்கொண்டு நான்கு மணி நேரத்திலேயே அதிக சிரமமில்லாது அதே கூலியைப் பெறுதல் இயந்திரத்தின் நன்மையால் ஆகக்கூடியதென்பதை நீங்கள் எவ்வாறு மறுக்கக்கூடும்?

பதில்:- நீங்கள் கூறும் இத் திட்டம் நடைமுறையில் லாபகரமாயிராது. அதனல் முதலாளிகளுக்கு நஷ்டமே ஏற்படும். ஏனென்றால் விலையுயர்ந்த இயந்திரங்களை வாங்கி 2 மணிநேரம், 4 மணிநேரம் மட்டும் வேலையைச்செய்வதால் மற்ற நேரங்களெல்லாம் இயந்திரத்திற்கு வேலையில்லாது வீணுகப்போய் விடுகிறது.

8. (f) கேள்வி:- இதனல்பணம் படைத்த முதலாளிகளுக்கே யன்றி ஏழைகளுக்கு எந்த விதத்தில் நஷ்டம்?

பதில்:- இருவருள் எப்படியோ

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க,

ரூஸோவின் சரிதம்.

[மதுரை எஸ். சைது அஹமது]

பேனா, வாளைக்காட்டிலும் அதிக வல்லமை வாய்ந்தது என்றார் ஒரு மேனாட்டு மேதாவி. எத்தனையோ அறிஞர்கள் தங்களுடைய எழுத்து வன்மையால் அரசாங்கங்களைக் கவிழ்த்திருக்கிறார்கள்; பெரும் புரட்சிகளைத் தோற்றுவித்திருக்கிறார்கள்; பொது மக்களுடைய எண்ணங்களை அசைத்து ஆட்டி இருக்கிறார்கள்; சிறியார்களைப்பெரியார்களாக்கி இருக்கிறார்கள். பெரியார்களைச் சிறியார்களாக்கி யிருக்கிறார்கள். அமெரிக்காவில் எழுதப்பட்ட 'அங்கிள் டாம்ஸ் காபின்' [Uncle Tom's Cabin] என்னும் நாவல், நீக்ரோ அடிமைகளை விடுதலை செய்வதற்காகப்பெரிய உள்நாட்டு குழப்பத்தை உண்டு பண்ணியது. 'மார்க்ஸ்' எழுதிய நூல் இன்றைய ருஷியாவின் நிலைமைக்கும், ருஷ்யப்புரட்சிக்கும் காரணமாகும். 'வால்டேர், ரூஸோ' என்பவர்களால் இயற்றப்பட்ட புத்தகங்கள் பிரஞ்சுப் புரட்சியைத் தோற்றுவித்தன. எண்ணங்கள் அபாரசக்திவாய்ந்தவை அவைகளால் ஜனங்களுடைய நிலைமை தலை கீழாக மாறி யிருக்கிறது. இத்தகைய வல்லமை வாய்ந்த எண்ணங்களை வெளியிட்டுபிரான்சு தேசத்துப் புரட்சியை உண்டாக்கியவர்களில் ரூஸோவும் ஒருவர். அவர் பெரிய இராஜீய ஞானி. அவருடைய புத்தகங்களைப் பிரான்சு தேசத்து மக்கள் ஆரஞ்சிப் பழங்களை வாங்குவதைப்போல் வாங்கினார்கள். 'சன்யாட்சென்' என்னும் வீரரால் சைனா சுதந்திர மடைந்ததைப்போலும் 'ஜக்லுல் பாட்சா'வால் எகிப்து இன்பமடைந்ததைப்போலும், திவாலராவால் ஐர்லாந்து சுயேச்சை பெற்றது போலும், வாஷிங்டனால் அமெரிக்கா பூரண விடுதலை அடைந்ததைப்போலும், பிரான்சு நெப்போலியனால் கொடிய அரசர்களின் உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு சுபிட்சம் அடைந்தது. நெப்போலியனுக்குப் பக்கத்துணையாயிருந்த வைகளில் ரூஸோவின் நூல்களும் சில வாகும்.

ரூஸோ பிறப்பதற்கு முன் ஐரோப்பா கண்டத்திலுள்ள நாடுகளில் கிறிஸ்து மதப் பித்தம் அதிகரித்திருந்தது. மதத்தின் பெயரால் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள் செய்த அக்கிரமங்கள் கணக்கிலடங்காதவை. மத குருவாகிய போப்பும், இதரகுட்டிப்பாதிரிகளும் இட்டதுதான் கட்டளை. இது போதாதென்று அரசர்களும், பணக்காரர்களும் ஏழைகளை இம்சித்து வந்தனர். மக்கள் எல்லா சுதந்திரங்களையும் இழந்து, மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து, அடிமைகளுக்கும் கேவலமாய் விலங்கினத்துக்கும் தாழ்ந்தவர்களாய் காலத்தைக் கடத்தி வந்தனர்.

இத்தகைய நிலையில், ரூஸோ 1712வது வருஷத்தில் பிறந்தார். இவருடைய தந்தை 'ஜினிவா' நகரத்தில் காலத்தை அளக்கும் கருவிகள் தயார் செய்பவர். சிறுவயதில் ரூஸோ கல்வி கற்காது, எத்தொழிலும் பழகாது நன்னெறியற்றவர்களோடு சுற்றித்திரிந்து கொண்டிருந்தார். இதனால் அவர் ஆரோக்கியம் குன்றி மனோவியாகூலத்தில் மூழ்கியிருந்தார். இத்தனை கஷ்டங்களைப்பெற்றிருந்த போதிலும் யாரையும் லட்சியம் செய்யாது வாழ்ந்து வந்தார்.

அவர் நூல்கள் இயற்றத்தொடங்கியவுடன், அவருடைய தீவிர எண்ணங்களைக்கண்டு அரசர்களும், முதலாளிகளும், மத குருக்களும் நடுநடுங்கினர். பொது ஜனங்களோ அத்தியந்த அன்போடு அவரை ஆதரித்தனர்.

அவர் நூல்களில் அரசர்கள் ஆகாயத்தைப்பொத்துக்கொண்டு 'பொத்'தென்று பூமியில் குதித்து விடவில்லை யென்றும், மனிதர் யாவரும் சரிசமமானவர்களே யென்றும், ஒருவருக்கிருக்கும் சுதந்திரங்கள் எல்லோருக்கும் இருக்க வேண்டுமென்றும் எழுதினார். கிறிஸ்து மதத்திலுள்ள அக்கிரமங்களை தீவிரமாகக் கண்டித்தார். ஆயிரக் கணக்கான நூல்கள் மணிநேரத்தில் வியாபாரமாயின.

'நீஹெலாயிஸா' என்ற நாவலே அவருடைய நூல்களில் முதலாவதாகும். பிரான்சு தேசத்தில் மாத்திரமின்றி ஜெர்மனியிலும் அவருடைய கீர்த்தி பரவிற்று.

பெண்கள் அவருடைய கைப்பட்ட காகிதத்தை முத்தமிடவும், அவர் நீர் அருந்திய பாத்திரத்தில் நீர் அருந்தவும் ஆசைப்பட்டனர். அவருடைய எழுத்துக்கள் மக்களுடைய நெஞ்சில் எழுச்சியையும், வீரத்தையும் மூட்டி விட்டன. 1762 வது வருஷத்தில் அவர் 'சோஷல்கான்ட்ராக்ட்' என்ற நூலை எழுதினார். அதுதான் அவருடைய நூல்களில் முதன்மையானதாகும். ஜனங்களுடைய சித்தமே சட்டமாகும். எவ்வரசாங்கத்தில்மக்கள் விருப்பம் குறைகிறதோ, அப்போது அவ்வரசாங்கத்தை அழித்துத் தங்கள் இஷ்டம்போல் வேறு அரசாங்கத்தை அமைக்கலாம்; பிரஜைகளுக்காகவே அரசாங்கமே யொழிய அரசாங்கத்துக்காகப் பிரஜைகள் இல்லை என்பது அவருடையராஜீயதத்துவம். ஒருகிறிஸ்துவனுக்குக் குழந்தையாய்ப் பிறந்ததினால அதுவும் கிறிஸ்து மதத்திலேயே இருக்க வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் கூடாது என்று முழங்கினார்.

இத்தகைய தலை கீழ்ப் புரட்சியை உண்டாக்கும் அவர் நூலகளைபறிமுதல் செய்யவும் அவரைக் கைதுசெய்யவும் அரசாங்க ஆணை ஏற்பட்டது ரூஸோ உடனே பிரான்சு நாட்டை விட்டு வெளி யேறினார். அவர் எந்த எந்த தேசத்துக்குப் போனாரோ, அந்த அந்த தேசத்து அரசர்களும், பாதிரிகளும் அவரைக் கைது செய்யும்படி உத்திரவு போட்டனர். ஆகவே அவர் ஒரு இடத்தில் நிலைத்திராமல் எட்டு வருஷங்கள் நாடோடியாகத் திரிந்தார். பிறகு தன் நாட்டில் வசிக்கலாமென 'பிரஷ்யா' அரசன் அனுமதித்தான். 'பிரடரிக்-தி-கிரேட், என்னும் அவ்வரசன் பரந்த நோக்குடையவன், ரூஸோவுக்கு வேண்டிய உதவிகள் செய்வதாகவும் வாக்களித்தான். ஆனால் ரூஸோ அவ்வரசனுக்கு எழுதிய கடிதத்தில் 'நான் அரசர்களுக்கு விரோதமானவன்' அவர்களைக் கண்டித்து எழுதியுள்ளேன். இன்னும் எழுத உத்தேசித்திருக்கிறேன். ஆகையால் உங்களுடைய உதவி எனக்குத் தேவையில்லை. அரசர்களிடமிருந்து ஒரு சல்லியும் கைநீட்டி பெறமாட்டேன். எனக்கு சம்பாதித்துக் கொள்ளத் தெரியும் என்று குறிப்பிட்டார். கடைசியாக 'மோடியர்' என்ற கிராமத்தில் ஒரு சிறிய குடிசையைக் கட்டிக்கொண்டு தன்னுடைய வாழ்க்கைத் துணைவியோடு வசிக்கலானார். அவருடைய புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுபவர் மாதம் ரூ 16 அனுப்பிக் கொண்டிருந்தார். அத்துடன் அவரும், அவருடைய வாழ்க்கைத் துணைவியுமாக ஜரிகை தயார் செய்து விற்று மாதம் 5 அல்லது 6 ரூ சம்பாதித்து வந்தனர்.

அந்த சிறிய குடிசையிலும் எளிய வாழ்க்கை நடத்த விடாது கிறிஸ்துவ மத குருக்கள் துரத்தியடித்தனர். ரூஸோவுக்கு நாஸ்திகனென்னும் பட்டஞ் சூட்டி பாமர ஜனங்களிடையே அவருக்கு விரோதமாக ஆவேசத்தைக் கிளப்பி அவரை வெளிக் கிளம்பும்படிச் செய்தனர். ரூஸோ அதைவிட்டு ஒரு தீவில் வசிக்கச் சென்றார். அத்தீவிலுள்ள அரசாங்கத்தாரும் பதினைந்து நாட்களில் வெளியேறவேண்டுமென அவருக்கு உத்திரவிட்டார்கள். ரூஸோ அதையும் விடுத்து எங்கேயோ புறப்பட்டுப போகும் வழியில் பாரிஸ் நகரில் தங்கினார். பொது ஜனங்கள் இடித்துத் தள்ளிக்கொண்டு அவரைப்பார்க்க வந்தார்கள். அரசர் ரூஸோவுக்கு விரோதமாயிருந்தாலும் மந்திரிகள் அவரை ரகசியமாக வந்து கண்டுதரிசித்தனர்.

இருபது நாட்களுக்குப் பின் ரூஸோ இங்கிலாந்து சென்றார் அங்கே வித்வான்களும், பொது மக்களும் குதூகலத்துடன் வரவேற்று கௌரவமளித்தனர். அங்கும் பலபேரோடு சச்சரவேற்படவே மீண்டும் பிரான்சுக்குத் திரும்பினார்.

அப்போது பிரான்சு தேசத்தில் ரூஸோவுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டுப் போயிருந்தது தலைவர்களும், பொதுஜனங்களும் ரூஸோவின் பால் கொண்டுள்ள அத்தியந்த அன்பைக் கண்டு அரசர் அவர் விவகாரத்தில் தலையிடுவதை மறந்தார். ரூஸோவும் பிரான்சிலேயே தங்கினார். கடைசியாக ஆரோக்கியங் குன்றி அவர் 1778ம் ௵ ஜூலை ௴ 2ந் தேதி 'எர்மினன்வில்லி' என்னும் கிராமத்தில் காலமானார். அவர் சவத்தைப் புதைக்க கிறிஸ்தவக் கோவில்களில் ஒரு மத குருவும் இடந்தரவில்லை. சவத்தைப் புதைக்கவும் ஒரு மதாச்சாரியும வரவில்லை. ரூஸோவின் சிநேகிதர்களாகக் கூடி ஒரு தீவில் அவரை அடக்கஞ் செய்தனர்.

ரூஸோ வைத்த நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து ஜனங்களுடைய உள்ளத்தில் கொதிப்பை உண்டாக்கி அதன் பயனாய் பெரும் புரட்சி யொன்று பிரான்சில் தோன்றியது. அவர் இறந்த 16 வருடங்களுக்குப் பின் அரசர் அழிந்து அவர் கொள்கைகளை அனுசரித்த ஆட்சி தோன்றியபோது, பொதுஜனங்கள் விருப்பத்தின் படி பீரங்கிகளின் முழக்கத்துடனும், வாத்திய கோஷங்களுடனும், ஜெய கீதங்களுடனும் அவர் எலும்புகளை தீவினின்றும் எடுத்து வந்து பாரிஸ் நகரத்தில் பெரிய மகான்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்தில் அரசாங்கத்தார் புதைத்தனர்.

ரூஸோவின் உடல் அழிந்துபோய் விட்டாலும, அவருடைய எண்ணங்கள் இன்னும் உயிரோடிருக்கின்றன. அவைகள் என்றென்றும், மனிதர் ஹிருதயங்களில் உயிருள்ளவையாக விளங்கும். இன்று ரூஸோ உயிருடனிருந்தால் தன்னுடைய கொள்கை உலக முழுதும் பரவி விளங்குவதைக் கண்டு ஆனந்த மடைவார். அவர் எழுதிச் சென்ற ஒவ்வொரு வார்த்தையும் பெரும் மந்திரங்களாக தற்போது விளங்குகின்றன. பழைய மந்திரங்களுக்குப் பதிலாக உலகமெங்கும் இப்போது இவைகள் தான் ஜபிக்கப்படுகின்றன.

கொழும்பு

கடந்த (6-2-33) செவ்வாய்கிழமை இரவு கொழும்பு கொள்ளுபபட்டி ஸ்டேசன்ரோடு 3 நபர் சிகரத்தின் கண் கொழுமபு சுயமரியாதைச் சங்க ஆதரவின்கீழ் தோழர் எ. எஸ். ஜான் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் சு. ம. சங்கத்தலைவர் தோழர். என். எஸ். எம். ஆறுமுகம் அவர்கள் தொழிலாளர்களின் பரிதாபநிலை என்பதுபற்றி அறியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

(ஒரு நிருபர்)

காங்கிரஸ் ஸ்தம்பிப்பு.

(தோழர் T. N. இராமச்சந்திரன்)

[சமீபத்தில் சிறையினின்று விடுதலை பெற்ற பிரபல காங்கிரஸ்காரர் ஒருவர் பம்பாய் "அட்வகேட்" பத்திரிகையில்— காங்கிரசின் ஸ்தம்பிப்பைக் குறித்து மிக நீண்ட கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். அதில் காங்கிரசின் 14 வருஷ நடவடிக்கைகளைக் குறித்து—ஆராய்ச்சி பூர்வமான—ஆணித்தரமான—விளக்க—கண்டன வாதங்களும்; காந்தியத்தின் பிற்போக்குத் தத்துவங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.]

நடந்த மகாயுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட எல்லையற்ற பொருளாதார வீழ்ச்சியினால் உண்டாக்கப்பட்ட நம் இந்தியநாட்டில் அமைதியின்மையின் வலிமையினால், இந்திய தேசிய காங்கிரஸ் சபையானது வெறும் அரசியல் பதவிகளுக்காக மட்டுமே படித்த வகுப்பார்கள் கோரிவந்த போராட்ட முறையிலிருந்து, வண்மை பொருந்திய பொதுஜன இயக்கமாக மாறியது. ஆனால் இந்தியதேசீய காங்கிரசின் மாறுதலுக்கேற்ப அதனுடைய தலைமை ஸ்தானம் மாறுதலடையவில்லை. கடந்த 14 வருஷங்களாக காங்கிரஸ் ஸ்தாபனமானது முன்னுக்குத்தள்ளப்பட்டும் பின்னுக்கு இழுக்கப்பட்டும் வரும்காக்ஷி நாம் அறிந்ததே. இந்த துக்ககரமான நிகழ்வுகளுக்குக் காரணம் அதனுடைய தலைவர்கள் பாழான மிதவாத பழைய முறைகளை அடியோடு கைவிடாததேயாகும். இதற்கு எடுத்துக்காட்டுகள் காங்கிரஸ் சரித்திர சம்பவங்களில் அடிக்கடி நிகழ்வுற்ற நெருக்கடிகளே போதுமானதாகும். ஒவ்வொரு தடவைகளில் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்தும் காங்கிரசானது அதனுடைய தீங்கான கட்டுப்பாட்டிலிருந்து விடுபட முடியவில்லை. ஏனெனில் புதிய காலத்தின் உத்வேகத்திற்கேற்ப அதனுடைய தலைவர்கள் புதிய திட்டங்களை வகுத்து அதன்படி நடக்க விரும்பாததேயாகும். 1919-௵ 'ஒத்துழையாமை' இயக்கத்தின் பேரால் ஏற்பட்டிருந்த பெருத்த பொதுஜன எழுச்சியானது நாளடைவில் தகுதியற்ற (Incompetant) தலைவரால்; தான் சொன்னபடி ஆடும் ஒத்துழைப்பு சக்தியில் மீண்டும் வீசி எறியப்பட்டது. இவ்விதமாகவே தலைவர்கள் இயக்கத்தோடு வேகமாகவும் மெள்ளமாகவும் விளையாடலானார்கள். தலைவர்கள் மீது காங்கிரஸ் ஊழியர்கள் கொண்டுள்ள குருட்டு பக்தியின் மனோபாவங்கள்; காங்கிரஸ் தலைவர்களுடைய தகுதியற்ற தன்மை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னருங்கூட, அவர்கள் அந்தஸ்தையும் அதிகாரத்தையும் கொண்ட அவர்கள் பதவிகளை மீண்டும் பெறுவதில் அவர்களுக்கே உதவி செய்கிறது.

இன்றையதினம், காங்கிரஸ் அதனுடைய சரித்திரத்திலேயே ஏற்பட்டிராத மோசமான நெருக்கடியில் உழன்றுகொண்டிருக்கிறது அதனுடைய பழைய தலைவர்களே அவசியமான ஒரு காரியத்தை துணிந்து செய்ய நழுவிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இயக்கத்தை உயிரற்று விழவும் விட்டுவிடுகிறார்கள். காலக்கிரமத்தில் காங்கிரசினுடைய போக்குகள், ராஜீய முறைகள் மாற்றப்பட்டாக வேண்டும். இல்லாதவரையில் முழுஸ்தாபனமும் சீக்கிரத்திலோ அல்லது சற்று தாமதத்திலோ நாசமாய்-பாழாய் போய்விடுமென்பது உறுதி.

காங்கிரஸ் தலைமை பதவியாளர்களின் பிற்போக்கான நாடகங்களை ஈண்டு எடுத்தெழுதுவது, காங்கிரஸ் இயக்கத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொருவர்களுக்கும் தங்கள் பழைய தலைவர்களின் ஆதிக்கத்தை உதறித்தள்ளுவதில் உதவிபுரியவும், ஆண்மையும் வீரமும் ஆற்றலும் கொண்ட புதிய தலைவர்களைதேர்ந்தெடுக்கவும், மற்றும்காங்கிரஸ்எப்பேற்பட்டராஜீய முறைகளையும் முற்போக்குகளையும் மேற்போட்டுக்கொள்ள வேண்டுமென்பதையும் நிர்ணயிக்க பேருதவியாக இருக்கும். அடிமைப்படுத்தப்பட்ட இந்தியமக்களின் விடுதலையைக்குறிக் கோளாகக் கொண்டு தேசீய போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முக்கியஸ்தர்கள் தற்கால தேசீய தலைவரின், உண்மையற்ற வெறும் போக்கை இதுவரை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தவறுகளுக்கும் ராஜீய முற்போக்குகளுக்கும் காரணமான 'பொதுஜன மதிப்புக்கொண்ட தோற்றங்களை'க் கண்டிக்கத் தவறிவிடவில்லை. சரித்திரசம்பந்தமாக தேசீய இயக்கங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு உள்ள முக்கிய காரணங்களை வெட்ட வெளிச்சமாக்கியதோடு அதன் விடுதலை மார்க்கத்தையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் அவர்களுடைய கருத்துக்கு பொதுஜனங்கள் செவி சாய்க்கவில்லை. (பொதுஜன மதிப்புக்கொண்ட தோற்றங்களின்) பிற்போக்கான ஆதிக்கமே இதற்குக்காரணம், என்றாலும் மக்களுடைய எண்ணங்கள் எழுச்சிகள் எல்லாம்மே லோங்க வேண்டும். உண்மையாகவேகாங்கிரஸ் இயக்கத்திற்கு வெற்றியும் ஏற்பட வேண்டுமானால் மக்கள் எழுச்சி எழிலுறவேண்டியதே.

1920-ம்௵காந்திஜிக்கு அபரிமிதமான அதிக செல்வாக்கு இருந்தது. அதுசமயம் அவருடைய வேதாந்த காரணத்தைப்பற்றியோ விவேகபுத்தி நுட்பத்தைப்'பற்றியோ யாரும் சந்தேகித்துஎதுவும்துணிந்துகேட்கதைரியபடவில்லை. பட்டாளிமக்களுடைய வாழ்க்கையின்நலனுக்காகவும், தேசீய விடுதலையின் போராட்ட வெற்றிக்காகவும் அவாக்கொண்ட மக்கள் சிலர் எவ்வித பிரதி வந்தனத்தையும் எதிர்பார்க்காமலே பேருழியம் செய்தார்கள். ஆரம்பமுதல் காந்தீயம் காங்கிரஸ் இயக்கத்திற்கு சாபக்கேடாக இருந்தது தெரிந்த விஷயமே. காந்தியார்தான் முக்கியமான முன்னேற்ற இயக்கத்தில் ஒரு பிற்போக்கான கொள்கையை புகுத்தியவராவர். அந்தக்காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தை கொண்டு செலுத்தும் சக்தி அவருக்குமட்டுமே இருந்திருக்கக்கூடும். பொதுஜன இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் மக்கள் விழிப்புறுதகாலத்தில்— பெருவாரியான மக்கள் அறியாமையின் அந்தகார இருளில்ஆழ்ந்திருந்தகாலத்தில்- அரசியல் அபிலாஷைகளுக்காக "பகுதி மதத்தோற்றத்தோடு ஒன்று" இருக்கவேண்டி இருந்தது இயற்கைதான். அந்தக் காலத்திற்கு ஒரு மகாத்மா பொருத்தமானவராகவே இருந்திருக்கக்கூடும். மற்றொரு முறையில் இதனைப் பரிசீலனை செய்துபார்க்குமிடத்து அந்த இயக்கம் தன் தலைமைப் பதவிக்கு ஒரு மகாத்மாவை ஏற்படுத்திய அந்தப் பிற்போக்குகள் அறியாமைகள்- குருட்டுத்தனங்களே தான் அதனுடைய வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாகிவிட்டன என்றும் கூறலாம்- இவற்றையெல்லாம் தாண்டினால்தான் இயக்கத்திற்கு வெற்றி ஏற்படக்கூடும். இந்த முற்கூறிய தடைகளெல்லாம் மகாத்மாவே ஓர் உருவாக வடிவுகொண்டு வந்திருக்கிறார் எனலாம்- ஆகவே தக்க முடிவான லட்சியத்தை காங்கிரஸ் அடைய முன்னேறிச்செல்லவேண்டுமானால் துணிந்த நோக்கமுடையவர்கள் தலைவரைவிட அதிகம் அவசியம் மீறிவிட வேண்டியதே நிபந்தனையாகும்.

ஆகவே இந்தியமக்களுடைய சமுதாய முன்னேற்றத்தை குறியாகக் கொண்ட ஓர் அரசியல் ஸ்தாபனத்தின் தகுதியற்ற தன்மையை— (பொருளாதாரத்துவம் உள்பட) காந்தீயத்தின் பிற்போக்கான இயற்கை வேதாந்தத்தை— வெளிப்படுத்த வேண்டியதுதானே- சரித்திர உண்மைத் தத்துவத்தோடு கஷ்டப்படும் மக்களுடைய பிரச்சனையை கண்முன் நிறுத்தி கவனிக்குமிடத்து மகாத்மாவின் வெளிப்புறம்பானதத்துவத்தை மதிப்பிடக்கூடும். அதுவும் இந்திய விடுதலைக்காக ஆண்டவனால் அனுப்பப்பட்ட வரப்பிரசாதம் என்கிற முறையினாலல்ல- ஆனால் காங்கிரஸ் இயக்கத்தாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அதன் பொருத்தமான ஆரம்பகாலத்தலைவர் என்ற முறையிலேயே என்போம். எல்லா பிற்போக்கான விஷயங்களும் ஓர் உருவே வடிவாகக்கொண்டவர் மகாத்மா. ஆகவேதான் அவர் காங்கிரஸ் இயக்கத்திற்கு ஒரு பெரும்பாராங்கல் போன்ற முட்டுக்கட்டையாகும். மகாத்மாவின் தலைமையின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் முன்னேறவேண்டுமானால் மகாத்மாவோடு எதிர்த்துபோராட வேண்டியதுதான்.

இந்த நிலைமை சமீபத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. இறுதியாக இன்று காந்தீயம் முறிபட்டுவிட்டது- மகாத்மாமீது அளவுகடந்த பிரேமை கொண்டு அவரது எந்த விஷயங்களிலும் சிறிதும் மாறுபடாதிருந்த காந்தி பக்தர்கள் இந்த ஒரு வருஷத்திற்குள்ளாக அவரை அடியோடு வெறுக்கவும் அவருக்கு இன்றைய பரமவிரோதிகளாகவும் ஆகிவிட்டார்கள்- தோழர் கே. எப். நாரிமன் போன்றவர்கள் காந்தீயத்தின்மீது எடுத்துக்காட்டிய குற்றச்சாட்டுகள் நீங்கள் அறிந்ததே; என்றாலும் இன்னும் ஒரு சிலர் காந்தியின் அரசியல் தலைமைப்பதவியை ஏற்று அவர் சொல்படி நடப்பதில் கண்மூடித்தனமாக பின்பற்றுபவர்கள் சிலர் இருக்கிறார்கள்- நாம் காந்தீயத்தின் தலைமைப்பதவியைக் கொண்ட அரசியல் திட்டத்தை இனி வளரவிடக்கூடாது- ஆகவே காங்கிரசின் காந்தீயத்துவத்தை கண்டனம் செய்வது அவசியமாகிறது- நாம் முன்னேற்றம் என்னும் பாதையில் செல்வதற்கு முன்பாக நம்மைச்சூழ்ந்திருக்கும் காந்தீயமென்னும் காரிருளை போக்கிவிடவேண்டும்- இன்றை அரசியல் நிலைமையானது ஒரு பெரிய துக்ககரமாண விஷயமாகும்- நாம் காலக்கிரமத்தில் சரியான வேலையை செய்தால் தான் காங்கிரசால்நாட்டில் ஏற்படப் போகும் பேராபத்தைத் தடுக்கமுடியும்.

பழங்கால முக்கிய காங்கிரஸ் சம்பவங்களை நாம் பரிசீலனை செய்வோம்- அகமதாபாத் காங்கிரஸ் காலத்திலேயே ஒத்துழையாமை இயக்கத்தின் பலஹீனம்-அதனின் ராஜீய முறைமையின் முற்போக்கற்ற தன்மை வெளிப்படலாயிற்று. அந்தக் காலத்திலேயே காங்கிரஸ் ஒரு உருப்படியான வேலைத் திட்டத்தைத் அமைத்து மக்களை ஒன்று சேர்த்து வேலை செய்திருக்கக்கூடும்- காந்தியின் சட்டமறுப்பு முறைகளுக்குப் பதிலாகக் காங்கிரஸ் மக்களுடைய அவசிய அவ

சரபொருளாதாரக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதேசீயபோராட்ட முறையைக்கைக் கொண்டிருக்கலாம்- எந்த மக்களின் விழிப்பால் காங்கிரசு பொது ஜன இயக்கமாகமாறியதோ; அவர்களுடையஅவசியகோரிக்கைகளுக்காகக்கூட காங்கிரஸ்போராடாதுப் றக்கணித்ததும்-பொதுஜனங்களின் விழிப்பை மேலோங்கவிடாது காங்கிரசுத் தலைவர்கள் பாழ்படுத்திப் பின்னணியில் தேங்கித்தேங்கி நின்று நாட்டின் நலனுக்கு தீங்கு விளைத்ததும் என்னே கொடுமை! கொடுமை!!

இதற்குசில மாதங்களுக்கு பின்புதான்காங்கிரசின் காரியநிர்வாகக்கமிட்டிக் கூட்டம் காந்தியின் சர்வாதிகாரித்துவத் தலைமையின் கீழ் வலிமைமிகுந்த பொது ஜன இயக்கத்தைப் பர்டோலி தீர்மானத்தால் கலைத்துவிட்டது. இந்தக் கொடுமையான முறையைக் கையாண்டதானது பெரும் அக்கிரமமாகும். தாங்கமுடியாத கொடுமைகளிலிருந்து மக்கள் புரட்சி செய்ய, விட்டுவிடக் கூடாதென்கிற காங்கிரசின் தலைமையாளர் துணிந்து மேற்கண்ட கொடிய முறையைப் பலவந்தப்படுத்தி நிறைவேற்றினர்-

இதிலிருந்து-இந்த வெட்ககரமானதும் நாசகாலப் புத்தியைக் கொண்டதுமான இக் காரியத்தைக் கவனிக்குமிடத்து, காங்கிரசுத் தலைவர்கள் எவருடைய நன்மைகளை உயரியதாகக் கருதுகினறார்களென்பது விசதம்: நிலச்சுவான்தாரர்களுக்காகவும்-முதலாளிகளுக்காகவும் அனுசரணை கொண்ட அந்தப் பர்டோலி முடிவை நினைவு கூர்ந்து கவனித்து-அவர்கள் இன்றையதினம் ஏழைகளுக்காக இரக்கம் காட்டுவதாகக் கூறும் போக்கிரித்தனத்தை ஆலோசியுங்கள்- கொடுமைப்படுத்தப்பட்டவர்களின் பொதுஜன எழிச்சையைத்தலைநிமிரவிடாது பெரும் துரோகம் செய்த பர்டோலித் தீர்மானக் காத்தா காந்தியை-காநதிப் பித்த வெறியர்கள் மதிகலங்கி இன்னும் பின்பற்றுவது என்னே வெட்கக் கேடு. இதுமட்டுமோ? வாயில்லாப் பூச்சிகளின் பெரும் பாதுகாப்பாளன் என்று அவர் தற்பெருமை பேசிக்கொள்வதும்; காந்திய பக்தர்கள் குருட்டுததனமாக அவரைப் பின்பற்றும முறையில் அவரை "உலகத்தின் மாபெரும் சோஷியலிஸ்டு" என்று கதறுவதும் என்னே! என்னே!! காந்தியத்தின் பித்தம்!!!

காங்கிரசு கிலாபத் இயக்கத்தை ஆதரித்து ஒரு அவசரக் காரியத்தை உத்தேசித்ததாகும். ஆனல் அரசியலையும், மதத்தையும் ஒன்ருக்கியதினுல் பயமிருந்து வந்தது- பின்னுல் ஆரம்பகாலத்திலேயே கொடிய இந்து-முஸ்லீம் கலகங்கள் உண்டாகியது, இது இந்து முஸ்லீம் ஒற்றுமையின வெறும் பித்தலாட்டத்தைப் பிரசங்கப்படுத்திவிட்டது. விரும்பப்படாத பர்டோலியின் உத்திர்வானது பெரும் பாதகத்தோல்வியானது, வகுப்புவாதக் கலகத்தை ஏற்படுத்தியது. ஒற்றுமைக் கர்த்தர்கள் எவ்வழி, என்ன செய்வது, என்று ஏங்கித் தவித்தனர். அவர்கள் ஒற்றுமைப் பாதையின் வழியைக் கூடக் கடந்துசெல்ல முடியாது. மக்களுடைய அவசிய அவசர பொருளாதாரக் கோரிக்கைகளைக் கொண்ட பொதுமக்கள் கூட்டுறவுத் தேவையாக இருந்து, அரசியலில் மதத்தைப் புகுத்தியதினுல் பக்தியோடு விரும்பிய இந்துமுஸ்லீம் ஒற்றுமை ஒரு வெறும் கனவாகவும்-முடியாத காரியமாகவும் ஆகிவிட்டது-

இந்துக்களைப் போலவே முஸ்லீம்களுக்கும் தங்களுடைய மதத்தில் நம்பிக்கையும், பெருமையும் கொள்ள உரிமை இருக்கும்பொழுது முழு இந்துமதத் தத்துவங்கொண்ட காந்தீயக் காங்கிரசில் அவர்கள் எவ்வாறு சாந்தியோடு இருக்கக்கூடுமென்பதை நாம் எதிர்பார்க்கமுடியும்? நாம் நம்முடைய முறைகளில் ஒற்றுமையைக் கோறினேம் அதை முஸ்லீம்கள் மறுத்துவிட்டதற்காக அவர்களை நாம் குற்றம் சுமத்த முடியாது,

பர்டோலி முடிவினுல் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சித் தாழ்வுக்குப் பின், காங்கிரசில் உண்டான பிரிவுகளின் சக்தியை இன்றைய நிலைமையில் பரிசிலனை செய்வது மிக உபயோககரமானதாக இருக்கும். இப்பொழுது ஏற்பட்டிருப்பதுபோலவே அப்பொழுதும் காந்தியின் அரசியல் தலையைப் பதவியோடு போராட்டம் இருந்துவந்தது இப்பொழுது இருப்பதுபோலவே 'எதிர்ப்புக்காரர்கள்' ஒருபடிகூட முன்னேறிச் செல்வதற்கும், அடிப்படையான நல்ல வேலைகளை செய்து காங்கிரசின் நெருக்கடியைச் சமாளிக்கவும் முற்படவில்லை; தெளிவான ஆக்கவேலையைக்கொண்ட பொதுஜனமுறையைக் கையாடவில்லை. ஆனல் எதிர்ப்புக்காரர்கள்" சீர்திருத்தம் என்றபிற்போக்குமுறைக்குத் திரும்பலானர்கள். 100-க்கு 98-பேருக்கு சுயராஜ்யம் என்ற சி. ஆர். தாசின் அடிப்படையான திட்டம் காங்கிரசில் ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தை ஊட்டியது. காந்தீய அரசியல் எல்லைக்கு அப்பால் செல்ல விரும்பியோர் சுயராஜ்யக் கட்சி வலையில சிக்கினர். அவர்கள் பின்னர் மோதிலால் நேருவின் ஞான அரசியலை ஒத்துக் கொண்டார்கள். நெருக்கடியான அந்தக் காலத்தில் நிகழ்ந்த சரியான காரியங்களை உணரவேண்டியது அவசியமாகும். "எதிர்ப்புத் தலைவர்கள்" சீர்திருத்தப் போக்குடையவர்களானதும் மாறுதல் வேண்டாதவர்கள் சாந்தத்தைக் கைகொண்டதானது பலமாகக்கண்டிக்கவேண்டியதாகும். கயா காங்கிரசானது ஒரு அஸ்திவாரமுள்ள வேலைத்திட்ட முறையை ஏற்படுத்திக்கொள்ளத் தவறியதானது-ஒருபுரத்தில் காந்திய அமைதித் தன்மையையும், மறுபுரம் புதியஉருக்கொண்ட மிதவாதத் தன்மையின் தோற்றத்தையும் உண்டாக்கியது.

(இன்னும் வரும்)

திருச்சியில் சமதர்மப் பிரசாரம்.

காந்தியின் வர்ணச்சிரம மதப்பிரசாரக்கண்டனம்.

வேசியர் விடுதிகளில் ஹரி ஜனங்கட்கு என்ன வேலே?

திருச்சி சுயமரியாதைச் சங்கத்தின் ஆதாரில் 9-2-34யன்று மாலை 6மணிக்கு இவ்வூர்டவுன் ஹாலுக்கு முன்பாக தோழர்அபிமன்னன அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள்-

அதுசமயம் தோழர்கள்:- அ- பொன்னம்பலம், கே- வி- அழகர்சாமி, எஸ. நீலாவதி, ஆகியவர்கள் "காந்தியின் மதப் பிரசாரத்தையும்" பண முடிப்பைப்பற்றியும் "சமதர்மத்திட்டமே மக்கட்கு விடுதலை யுண்டாக்கும்- என்று விளக்கமாகப் பேசினர்- சிலரால் கேட்கப்பட்ட கேள்விக்கும் தக்க பதில் கூறப்பட்டது- தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது-

சண்முகநாத புரத்தில் பொதுவுடமைப் பிரசாரம்.

"காந்தீயமும்—சமதர்மமும்"

சண்முகநாதபுரம் சமதர்தர்ம சங்கத்தின்ஆதரவில் 13-2.34யன்று மாலை 6மணிக்கு இவ்வூர் பழய ஊரணிக் கரைப்பக்கத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது-

அதுசமயம் தோழர் அ- பொன்னம்பலம் அவர்கள் "பொதுவுடமை லட்சியத்தின் மேன்மையையும் 'காந்தீயத்தின் பிற்போக்கும்' 'சமதர்மத்திட்டத்தினுல் தான் மக்கள் துயரம் ஒழியும்" என்பதாக நீண்ட விரிவுரையாற்றினர் இரவு 8-30மணிக்கு கூட்டம்இனிதுமுடிவடைந்தது.

தேவகோட்டையில் சமதர்மப் பிரசாரம்.

பூரி சங்கராச்சாரி பிரசாரம்

காரைக்குடி உண்மை நாடுவோர் சங்கத்தின் ஆதரவில் 14-2 34ந் தேதி யன்று தேவகோட்டை பெண்கள் ஆஸ்பத்திரிக்குப் பக்கமுள்ள திடலில மாலை 6 மணிக்கு அட்வகேட் தோழர் எஸ் லட்சுமிரதன் பாரதி அவர்கள எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் பூரி சஙகராச்சாரியின் வைதீக மதப் பிரசாரத்தைக் கண்டித்தும் மக்களிடம மூட நம்பிக்கையை வளர்தது பொருளைக் கொள்ளையடிக்கும் புரட்டையும் எடுத்து விளக்கிக் காட்டி சமதர்ம லட்சியத்திற்கு காந்தியின் ஹரிஜனப் பிரசாரம் மிகமிகப் பிற்போக்காயிருக்கின்றது. என்னும் விரிவுரையாற்றினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 8-30 மணிக்கு முடிந்தது.

முதலாவது மாகாண சமதர்ம மகாநாடு.

4-3-34ல் மன்னர்குடி அருளஜோதி கிருபாநிதி எலக்டிரிக் தியேட்டரில் நடைபெறும்.

வரவேற்புத்தலைவர் தோழர். எம். தர்மலிங்கம், தாலூக்காபோர்டு மெம்பர், திருத்துரைப்பூண்டி. மகாநாட்டிற்குத்தோழர்கள கே. முத்துச்சாமி வல்லத்தரசு பி எ. பி. எல்., எம். எல். சி- ரேஷனலிஸ்டு ஆசிரியர் எஸ் இராமனுதன் எம். எ. பி. எல்., எஸ் குஞ்சிதம் பி. எ. எல். டி., எஸ். குருசாமி, பி. எ. கே. எம். பாலசுப்ரமணியம் பி. எ. பி. எல்., எஸ். நீலாவதி ராமசுப்ரமண்யம் மற்றும் நமது இயக்கத் தோழர்கள் பாலரும் விஜயம் செய்வார்கள். மகாநாட்டிற்கு அனுப்பும் தீர்மானங்களும், பிரதிநிதிகள் ஜாப்தாவும் முன்னமையே அனுப்பி வைக்க கோறுகிறேம்.

வரவேற்புக் கட்டணம் ரு 2
பிரதிநிதிகள் ,, ,,
விசிட்டர்கள் ,, அணு 8

காரியதரிகிகள்.
கே சோங்கண்ணு
K. R. G. Pal.

சென்னை வியாசர்பாடி சமதர்ம இளைஞர் கழகத் திறப்புவிழா.

4-2-34 ஞாயிறு மாலை 5 மணிக்கு தோழர் எஸ். ராமநாதன் எம். எ. பி. எல். அவர்கள் தலைமையில் நடக்க வேண்டிய மேற்படி திறப்புவிழா அவசரவேலையால் சேலம் சென்றுவிட்டபடியால் தோழர். எம். சிங்காரவேல் பி. எ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் எஸ். குஞ்சிதம் பி. எ. எல். டி. அவர்கள் கழக திறப்புவிழா வாற்றி நீண்டநேரம் பேசியபின் தோழாகள் ஆர். டி. அய்யாக்கண்ணு, எஸ். குருசாமி நாராயணி ஆகியவர்கள் சமதர்ம இயக்க சாராம்சததை இளைஞர்கள் மனதில் பதியுமாறு பேசிய பின் தோழர் அமிர்தவாசகம் அவர்கள் வந்தனங்கூற கூட்டம் சுமார் 8 மணிக்கு கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறர்.

தோழர் ஜவகர்லாலுக்கு தண்டனை.

பண்டி ஜவகர்லால் அவர்களை இராஜ நிந்தனை குற்றம் செய்ததாக 12-2-34ந்தேதி கைது செய்யப்பட்டு கல்கத்தா பிரதம மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு 16-2-34ல் இரண்டு வருட வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

காந்தி நாடகம்.

[காம்ரேட்]

காந்திஜீ சுற்றுப் பிரயாணஞ்செய்வது ஹரிஜன இயக்கத்திற்கு ஆதரவுதேட. 'ஜாதி' இந்துக்களின் மன மாற்றம் பிரதானலட்சியம். பண வசூல் ஒரு தனித்திட்டம். மேல் ஜாதிக்காரர்களென்போர் பிராயச்சித்தம் செய்து தீர வேண்டுமென்பது அவருடைய தீர்ப்பு. கோவில் நுழைவால் நூற்றுக்குத்தொண்ணூறு பங்குத் தீண்டாமை விலகு மென்கிறார், தீண்டாமை ஒழிப்பிற்கே உயிரைவைத்துக் கொண்டிருக்கிறார். அரசியல் சுயேச்சையெல்லாம அப்புறம்தான். அதற்கும் அவருக்கும் இன்று யாதொரு சம்பந்தமுமில்லை.

ஃ ஃ ஃ

கொள்ளை கொள்ளையாகக் கூட்டம். தேனை எறும்புகள் மொய்ப்பது போல காந்திஜீயை ஜனங்கள் மொய்க்கிறார்கள். செம்மறிஆடுகள் போல் பொதுஜனங்கள் மந்தைமந்தையாகச் சென்று தரிசிக்கிறார்கள். 'நீமூர்த்தி நான் மூர்த்தி' யென்று அவருடைய காலைதொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்ள ஒருவர்க்கொருவர் அடித்துக்கொள்வது சர்வ சாதாரண நிகழ்ச்சி. பட்டதாரிகளிலும் பிரபலஸ்தர்களிலும் ஆண் பெண் களில் அநேகர் அடியற்ற நெடுமரம்போல் காந்திஜீயின் காலடியில் விழுந்து தங்கள் பக்திப் பெருக்கைக்காட்டிக் கொள்ளும் அற்புதக்காட்சி படம் பிடிக்கத்தக்கது. இந்த நிகழ்ச்சிகளின் பிறப்பிடம் கலி தீர்ந்து கடைத்தேறலாம் என்ற தெளிந்தெடுத்த களிமண் நம்பிக்கை.

ஃ ஃ ஃ

வேடிக்கை பார்க்கப் போகிறவர் உண்டு. வியாபாரத்திற்காகப் போகிறவர் உண்டு. விஷயத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறவருமுண்டு. எந்த வகையாலோ கூட்ட மட்டும் ஆயிரக்கணக்கில் கூட்டி விடுகின்றது.

ஃ ஃ ஃ

பத்திரிகை பொது ஜனாக்கு. பொதுஜனங்களின் க்ஷேம லாபங்களே பத்திரிகைகளின் குறிக்கோளாயிருக்க வேண்டும். மகா ஜனங்களுக்காய் 'வக்காலத்து' வாங்கிப் பேசுவது தான் பத்திரிகைத் தொழில். ஆனால், காந்திஜீ தும்மினாலும் இருமினாலும் கொட்டை எழுத்தால் பிரமாதப் படுத்தி வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கின்றன, இன்று பெரும்பாலானபத்திரிகைகள். காந்திஜீயின் தின சரி நடைமுறை முதல் நிமிஷ வேலைத்திட்டம் வரையில் பத்திரிகைகளால் டமாரமடித்து முழக்கப்படுகின்றன. எதிர் கட்சியின் அபிப்பிராயமும் நடை முறையும் அநேகமாக வேண்டுமென்றே இப்பத்திரிகைகளால் மறைக்கப்படுகின்றன. இதுதான் முதலாளி ஆதிக்கத்தின் லட்சணம். செப்படி வித்தைக்காரன் மாங்கன்று ஒரு முறை பழந்தரும்- சதா சர்வ காலமும் ஜால வித்தை செல்லுபடியாகாது. பொஜன விழிப்பில் பொய்யும் புரட்டும் ஏமாற்றும் மோசடியும் நிர்மூலமாகு மென்பது திண்ணம்

ஃ ஃ

ஊர்தோறும், நகரந்தோறும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் காந்திஜீக்குப் பணம் வசூலாகிறது. நிர்ப்பந்தத்தால் "உதடு பழுஞ்சொரிய உள்ளே வயிறெரிய" ப்பணம் கொடுக்கிறவர் சிலர். தயவு, தாட்சண்யத்தைத் தட்டாமல், பணம் அளிக்கிறவர் சிலர். சமயோஜித நிபுணர்கள் சந்தர்ப்பத்தைக் கொடியாகப் பிடித்துக் கொண்டு "ஒன்று விதைத்து ஒன்பது அறுவடை செய்யும்" உத்தேசத்தில் கொடுக்கிறார்கள். விடாக்கண்டர்களான பண வசூல் குழாம் அரிக்கிற அரிப்பு சகிக்க முடியாமல் சனி யொழியட்டு மென்று கொடுத்துத் தொலைப்பாருமுண்டு. மனித சமதத்துவத்தைப் பச்சைசாவியாகக் கருதுகிறவர்கள் தீண்டாமை விலக்குக்கும் தகைகளுக்கும 'ஸ்நானப்பிராப்தி' கூடயில்லாதவர்கள், பறையர் பள்ளரை புனிய மிளாதினால் தோலையுரித்துக் கொடுமைசெய்து கொண்டிருக்கிறவர்கள், ஒடுக்கப் பட்டவரைநாயினுங்கடையாகப் பாவிக்கும் ஜாதி வெறயர்கள் இந்த நினுசுப்பேர் வழிகள் தான்- ஹரிஜன இயக்கத்திற்கு இன்று பொருளதவுகிறவர்களில் மெஜாரிட்டி. இவர்கள் கொடுக்கிறதெல்லாம் காந்திக்கும் வந்து கேட்கிற மனிதர்க்குமாக.

ஃ ஃ ஃ

ஸ்தலஸ்தாபனங்கள் உபசாரப் பத்திரங்கள் படித்துக்கொடுக்கின்றன. பற்பல சங்கத்தார், வாசகசாலையார், வியாபாரக் கூட்டத்தார், பெண் கழகத்தார், நாடசபையார் மற்றும் பலர் காந்திஜீக்கு நல்வரவேற்புக் கூறுகிறார்கள். ஆனால் வந்தவர் போனவர்க்கெல்லாம் வரவேற்பு, பிரிவு உபசாரம் கொடுப்பது லோக்கல் போர்டுகளின் நிரந்தரக் கொள்கையாகும். ஆஸ்திகனுக்கும், நாஸ்திகனுக்கும், தேச பக்தனுக்கும் தேசத்துரோகிக்கும் உபசாரஞ் செய்யும் ஸ்தலஸ்தாபனங்களுக்கு விவஸ்தை யேது? மற்ற வரவேற்புக் கூட்டத்தாரில் பலருக்கும் தீண்டாமை விலக்குக்கும் தென்கோடிக்கும் வடகோடிக்குமுள்ள சம்பந்தந்தான் இருந்து வந்திருக்கிறதென்பதைஅனுபவ பூர்வமாகஅறிவோம்-திடீரென இவர்களுக்கு ஞானோதயமாகி விடவில்லை. பெரும் பாலோர் காரியப் புலிகள்- அவ்வளவு தான்.

ஃ ஃ

சுற்றுப்பிரயாணத்தைத் திருப்திகரமாக முடிக்கும் பொறுப்பைத் தோள்மேல் போட்டுக்கொண்டிருக்கும் கூட்டங்கள் இரண்டு- ஒன்று பட்டதாரிகளையும் பணக்காரர்களையும் கொண்டது-மற்றொன்று உணர்ச்சியும் ஊக்கமும் பொருந்திய வாலிபர்களைக் கொண்டது. முதற் கூட்டம் இதற்கு முன்னும் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டதில்லை-இனி மேலும்பாடுபடப் போவதில்லை-அது அவர்களுக்குத் தேவையும் இல்லை- அவர்கள் ஆர்ப்பாட்டமும் இந்தச் சுற்றுப் பிரயாணத்தோடு அரோஹராதான். இரண்டாவது கூட்டமாகிய வாலிபர்க் கூட்டம் உண்மையும் உழைப்பும் கொண்டதாயினும் இதில் அநேகர் ஹரிஜன இயக்கத்தில் மாறுபட்ட அபிப்பிராய முடையவர்களென்பது எமக்கு நன்றாகத் தெரியும். வந்த காந்திஜீயைக் கௌரவப்படுத்த வேண்டு மென்பதுதான் அவர்கள் ஒரே நோக்கம். காந்திஜீயின் பிரயாணமும் முற்றுப் பெறும். தீவிர வாதிகளான வாலிபர்களின் ஹரிஜனப்பிரசாரமும் முற்றுப்பெறும்.

ஃ ஃ

ஒரு சில காந்தி பக்தர்கள் உண்மையாகவே ஹரிஜன இயக்கம் நன்மைசெய்யுமென்று நம்புகிறார்கள். அவர்கள் நாளே நாளேறத்தான் தங்களுடைய உழைப்பு வியர்த்தமாவதை உணரக்கூடும். ஆனால் பெரும்பாலான வாலிபர்களும் பணக்காரர்களும் காந்திஜீயின் சுற்றுப் பிரயாணம் முடிந்ததும் தங்களுடைய போக்கை மாற்றி விடுவார்களென்பது சர்வ நிச்சயம் வாலிபர்கள் சமதர்மதிற்கே தங்கள் வாழ்வைத் தத்தம் செய்யப் போகிறார்கள். பணக்காரர்கள் தங்கள் சொந்தக் காரியங்களிலேயே சொகுசாகப் பொழுது போக்கப் போகிறார்கள்.

ஃ ஃ

இன்று பணம் வசூலிப்பவர், கூட்டம் கூட்டுபவர், பணங்கொடுப்பவர், வரவேற்புக் கொடுப்பவர், கூட்டத்திற்கு வருபவர் பத்திராதிபர்கள், பிரசாரகர்கள் இவர்களில் பெரும்பாலோர் 'உள்ளொன்று புறம் பொன்றாக, நடிக்கிறார்கள். ஆகவே காந்திஜீயின் ஹரிஜன இயக்கச் சுற்றுப்பிரயாணம் ஒரு நாடகமே. அவருடைய வருகை ஆடம்பர பூதிகளை மலியச்செய்ததோடு, பிற்போக்கான கொள்கைகளை உரஞ்செய்யும் பாதகத்தையும் விளைக்கிறது. சமதர்மிகள் இத்தகைய கேடு சூழும் நாடகத்தைப்பகிஷ்கரிக்க வேண்டியது கடமையன்றோ?

திருச்சி தாழ்த்தப்பட்ட வாலிபர் சங்கம்.

நிர்வாகஸ்தர் தேர்தல்.

29-1-34ந் தேதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சி தேவதானத்தில் மேற்படி சங்க நிர்வாகஸ்தர் தேர்தல் நடைபெற்றது. அதுசமயம் லால்குடி தாலூகா போர்டு மெம்பர் கே. சி. சிங்காரம் தலைமை வகித்தார். அதுபோது கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்:-டி. வி. சன்னாசி.

உபத்தலைவர்கள்:- கே. சி. சிங்காரம், எம். சிங்காரம்.

காரியதரிசிகள்:- எஸ். அபிமன்னன், கே. மாரியப்பன்.

நிர்வாக அங்கத்தினர்கள்:- எம். பெருமாள், ஆர். எம். தங்கவேலு, எஸ். முனியாண்டி, என். பி. சின்னையா, டி. எஸ். பாணி. வி. சாமி, கோபால்சாமி.

பேரா இந்து மகாஜன சங்கம், ஈப்போ.

17-12-33ந் தேதி காலை 10 மணிக்கு ஈப்போ நகரில் பேரா இந்து மகாஜனசங்கச் சார்பாக திருவாளர் ரா. ரெங்கசாமி அவர்களின் தலைமையின் கீழ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அதுசமயம் மலாயா நாட்டில் நடைபெறும் தைபூசம், சித்திராபவம், ஆடிப்பூரம், வைகாசி விசாகம், பங்குனி-உத்தரம், இன்னும் மற்றுமுள்ள உற்சவங்களில், காவடியெடுப்பதென்ற அனாசாரங்களைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது என ஷை சங்கக்காரியதரிசி அறிவிக்கிறார்.

தியாகராயர் வாசகசாலையின் பொதுக்கூட்டம்.

5-2-34 திங்கள் மாலை சுமார் 6-மணிக்கு திருச்சி வரகனேரி அந்தோணியார் கோவில் தெருவிலுள்ள தியாகராயர் வசாகசாலைத் தலைவர் தோழர் எ. தன்சாமி அவர்கள் தலைமை வகித்தார். பல முக்கியஸ்தர்களும் வாசகசாலையிலுள்ள அன்பர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். அதுசமயம் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

1930-ஆம் நமது வாசகசாலைத் துவக்கப்பெற்று இன்றுவரை நமது சமூகத்திற்கு வேண்டிய பல நன்மைகளிலும் ஈடுபட்டு வேலை செய்திருக்கிறது. இன்னும் நமது வாசகசாலை அதிக விருத்தியுடன் வேலை செய்ய வேண்டிய வழியில் வேலை செய்வதற்காய் எல்லோருடைய உதவியையும் எதிர்பார்க்கிறது என்ற தீர்மானம் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டு தலைவர் முடிவுரைக்குப் பிறகு கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

புரட்சி

ஈரோடு 1934௵ பிப்ரவரி௴ 17-உ

இக்காலத்திலுமா பண்டை நாகரீகப் பெருமை?

:0:

பண்டைக் காலத்தில் நமது பாரத நாட்டில் தமிழர்களின் நாகரீகம் எப்படி இருந்தது என்னும் விஷயத்திலும், பாஷையானது எப்படி தனித்து விளங்கிவந்தது? என்னும் விஷயத்திலும் மக்கள் எப்படி வாழ்ந்து வந்தார்கள் என்னும் விஷயத்திலும் இன்னும் பலவாறான விஷயத்திலும் நமது வித்வ சிகாமணிகளும், பண்டித மணிகளும் பேசித் தங்கள் அரிய காலத்தையும், புத்தியையும் செலுத்தி தற்போதைய மக்கள் நிலைமைக்குத் தங்களால் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தவர்களாக நினைத்துக்காலங் கடத்தி வருகிறார்கள். இது இந்தக்காலத்தில் நம் நாட்டு மக்களுக்கு எவ்வளவு முற்போக்கையுண்டு பண்ணுமென்பதையும் நம்மக்களுக்குத்தற்காலத்தில் எவ்விதமான உணர்ச்சியும், ஊக்கமும், நினைவும் வேண்டியிருக்கிறது? என்பதையும் யோசித்தால் நமக்கு வேண்டியது இதுவா? என்பது விளங்காமல் போகாது.

நம்நாட்டாரும் மற்ற நாட்டாரோடு சமவாழ்வு, சம அந்தஸ்து, சம உரிமை இல்லாமல் உழன்று பசி, தரித்திரம், நோய், அற்பமான வருவாய், சுதந்திரமற்ற அடிமைவாழ்வு முதலிய கொடும் வியாதிகளின் மிகுதியால் அவதிப்பட்டு அல்லலுற்று வாழ்ந்து வரும் இக்கெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்ன செயவேண்டு மென்பதும், இத்தகைய இழிந்த நிலைமைகளுக்கு அடிப்படையான மூலகாரண மென்னவென்பதைச் சிந்தித்து ஊன்றியோசிப்பார்களேயானல். இவ்விதமான பண்டைப் பெருமைகளால் வீண் காலக்ஷேபம் செய்யமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

ஏனெனில் தற்சமயம் நமது மக்களுக்கு மற்ற நாட்டு மக்களுக்கு அமைந்துள்ள வாழ்க்கைகளுக்குச் சமமாகவேனும் நமது மக்களின் வாழ்க்கைகள் அமையவேண்டுமாயின் முதலில் நமக்குள் சமத்துவத்தைப் பரப்பிவரவேண்டியதே இன்றியமையாததாகுமென்பதை யாவரும் மறுக்கத்தகாதவைகளில் முதன்மையாகுமென்பது நமது உறுதியாகும். அத்தகைய சமத்துவத்திற்கு நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் முதலியவேறுபாடுகளை வேருடன் கல்லி எறிந்து தீரவேண்டும். இவைகளுக்குப் போதிய அறிவு வளர்ச்சிக்கேற்ற விஷயங்களைக் கல்வியின் மூலமாகவாவது அது துரிதத்தில் முடியாமற் போகுமாயினும் பிரசாரமூலமாகவேனும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாத்தியமான முறைப்படியாவது நமது மக்களுக்குப் புகட்டிவரவேண்டுமென்பதையாவது யாவரும் செய்து வரவேண்டிய கடமைக்குட்பட்டிருக்க நமது பண்டைத் தமிழிலும், நாகரீகத்திலுமா இன்று நமது ராஜதானியில் சிறுபான்மைத் தொகுதியோரான ஒரு முகமதிய கவர்னரும், மைசூர், திருவாங்கூராகிய இரண்டு பெரிய சுதேச ராஜ்யங்களுக்கு இருமுகமதிய திவான்களும வாழ்ந்து வருகிறார்கள் என்பதை யோசித்தால் விளங்காமற் போகாது. நமது சமூகம் பெரும்பான்மையான எண்ணிக்கையிலிருந்தும் நமக்குள்ள ஜாதிமத வேறுபாடுகளின் முக்கிய காரணத்தாலன்றோ நமது கவர்ன்மெண்டாரும் நம்மை ஒரு சமூகமென்று அழைக்கவும்கூட மறுத்து நம்மை மகமதியரல்லாதார என்று ஒரு அனுமதேயப் பேர்வழிகளைப் போல் அழைக்கவும் அந்தப்பெருமை அழியாதிருக்க அவர்கள் சட்டம் முதலிய தேர்தல் தஸ்தாவேஜுகளிலும் அழியாமல் பதித்தும் வைத்திருக்கிறார்கள். நம் மீது நமது கவர்ன்மெண்டாருக்கும், மற்றுமுள்ளவர்களுக்குமுள்ள மதிப்பைக்காட்டுவதற்கு அதுவே போதுமான அத்தாக்ஷியாகும். இப்படி நமது பெரும்பாலான மக்களின்உழைப்பிலும், நமது வரிப்பணத்திலும் ஆதிக்கம் செலுத்திவருகிற சர்க்காரும், அன்னிய மதத்தினரும் இன்னும் சொல்லப்புக்கால் அந்நிய நாட்டினரும் கூட நம்மைக் கேவலமாக எண்ணி, மதித்து எளனம் செய்து புறக்கணித்து வரும் இந்தசமயத்திலும் கூடவா நமது பண்டைத்தமிழும், நாகரீகமும் நம்மை அத்தகைய இழி தன்மையிலிருந்து உத்தரித்துவிடப் போகிறதென்பதை மறுமுறையும் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். இங்கு மகமதியர்களில் ஒருவரை நமது ராஜதானிக்கு கவர்னராகவும்மற்றுமிரு ராஜ்யங்களினுடைய திவான்பதவியை காட்டிஇருப்பது பொறாமைக்காக கூறியதாகபாவிக்காமல் அவர்கள் மதத்தில் பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை என்கின்ற கொள்கையின் முதிர்ச்சியால் அத்தகைய பெறுதற்கரிய ஸ்தானங்களை அடைந்தார்கள் என்று அவர்கள் கொள்கைகளைப் பாராட்டவே கூறியதாகுமே ஒழிய வேறுவிதமாக அல்லவென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

நமது பண்டைத்தமிழும், நமது பண்டை நாகரீகமும் சொல்லிக் கொண்டு வருவதின் போக்கைச் சிந்திக்கும்போது பள்ளிப்பிள்ளைகளின் பழய பெருமைகளைப் பேசிக்களிக்கும் சம்பிரதாயத்தையொக்குமே ஒழிய வேறல்ல. அதாவது ஒரு தனவந்தன் வீட்டுப்பையன் குதிரையின்மீது சவாரிசெய்து பள்ளிக்கு வந்துகொண்டிருக்கும்போது ஒரு கிழிந்ததும், அழுக்கடைந்துள்ளதுமான ஆடையைத் தரித்துக்கொண்டிருக்கும் ஒரு ஏழைப்பையன் ஷை தனவந்தரின் பையனைப் பார்த்துவிட்டு எங்கள் தாத்தா கூட இதைவிட ஒரு உயர்ந்த குதிரைமீதுதான் எப்போதும் சவாரி செய்வாரென்று சொல்லி மகிழ்வதை யொக்கும். தாத்தா குதிரை சவாரிசெய்த இருப்பிடத்தில் ஏற்படக்கூடிய காய்ப்புகூட இவனிருப்பிடத்தில் உண்டான்றல் அதுவுமிராது. இம்மாதிரியான பிரயோசனமற்ற விஷயங்களால் மக்களுக்கு ஏற்படும் பயனென்னவென்பதே நமது கேள்வி இந்த வித்வசிகாமணிகளும் பண்டித மணிகளும் இப்படியாக பழந்தமிழ்ன்நாகரீகத்தையும் பண்டைத்தமிழின் மாண்பையும் பற்றி ஒரு பக்கம், பேசிவருகையில் மற்றொரு பக்கம், சனாதனிகள் கூட்டம் போட்டுக்கொண்டு ராஜப்ரதிநிதியவர்களிடம்தங்கள் ஜாதிமத வேறுபாடுகளில் சர்க்கார் தலையிடக்கூடாதென கேட்டுக்கொள்ளப் போவதும் அத்தகையக்கூட்டங்களுக்கு துணைப்படையாக நமது ஜில்லாப் போர்டு தலைவரும் வைசிராய் சட்டசபை மெம்பருமான ஒரு செல்வாக்குள்ள தமிழ் மக்களின் மாபெருந்தலைவரெனப் படுவோரும் சென்று வந்ததுடன் ஷை சனாதனிகள் கூடி கோவையில் கூட்டிய ஒரு சனாதனிகள் கூட்டத்திற்கும் தாம் வரமுடியாமைக்கு வருந்துவதாகவும் ஷை கூட்டத்தில் தமக்கிருக்கும் ஆர்வத்திறகும் அபிமானத்திற்கும் அறிகுறியான வாழ்த்துக் கடிதமும் விடுத்திருப்பதும் நடைமுறைகளில் காணப்படுகிறது.

மற்றொரு பக்கம் தோழர்காந்தியார்வருணாச்சிரம தர்மத்துக்குள் புகுத்தப்பட்ட ஹரிஜன சேவையின் பேரால் அவர்களை ஷை கட்டுத் திட்டங்களிலிருந்து மீளாதபடி முன்னேற்றப் பணம் திரட்ட திக்விஜயம் செய்து வருவதுமாக நிகழ்ந்து வருகிறது.

இவ்வித நிகழ்ச்சியால் மக்கள் சமத்துவத்திற்கு வழிஏற்படாதென்றும், ஆகையால் தங்கள் வரவு இத்தருணம் இம்முறையில் நலவரவாகாது என அதைப் பகிஷ்கரிக்க நாங்கள் உறுதி கொண்டு முன்வந்திருக்கிறோம். அதன் அறிகுறிக்காக எங்கள் கையில் இதோ கருப்புகொடி பிடித்துக் கொண்டிருக்கிறோமென்பதை மூடப் பழக்கங்களிலாழ்ந்துஉழலும் மக்கள்மனதிற் படும் டியாக நமதியக்கத்தவர்கள்முன்வந்தால், அதுவுங்கூட சமாதானக் குறைவை உண்டாக்கும் என்கிற பாணத்தைப் பிரயோகிக்கும்படி சர்க்காரைத் தூண்டிவிட சிற்சில சுயநலக் கூட்டங்களும் அக்கூட்டங்களின் முறைகளால் தாங்களும் முன்னேற முயலும் சில தமிழர்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ள முயலுகிற இக்காலத்திலும் கூட நாம் மக்களுக்குள் வேற்றுமைகளை உண்டு பண்ணக் கூடிய முறைகளை கண்டிக்காமலிருக்க முடியாதென்பதைச் சொல்லப் பின் வாங்கமாட்டோம்.

ஆகையால இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் நமது சுயமரியாதைஇயக்கத்தவர்கள் நமது முழுமனதையும், சக்தியையும், காலத்தையும் விநியோகித்து நமது லக்ஷியத்தைக் கொள்கைகளையும் மூலைனிலும் பன்மடங்கு அதிகரித்துத்தாங்கி வளர்த்து மக்களுக்குள்பயன்படத்தக்கமாதிரியில நடைமுறையில் வெற்றிகரமாக நடத்திக்காட்டும் வண்ணம் திட்டங்கள் வகுக்க ஏற்படுத்தப்பட்ட காலத்தில், ஷை இடத்துக்கு விஜயம் செய்து காரியங்களை நடத்திவைக்க வேணுமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

திருத்தம்.

முதற்பக்கத்தில் வரும் பாட்டிலுள்ள தொகையறுவில் நாலாவது வரியிலுள்ள 'உதையும்' என்பதை 'உதையையும்' என்றும், எட்டாவது வரியிலுள்ள எச்சிலில என்பதை எச்சிலிலே யென்றும் திருத்திப்பாடுக

நமது தோழர்களுக்கு!

(ப. ஜீவானந்தம்)

ராஜநிந்தனைக் குற்றமென்ற பண்டாரத்தால் நமது தலைவர் சிறை வாசம் அனுபவிக்கிறார். மீண்டும் நம்மிடையில் அவரைக்காண சுமார் ஆறுமாதங்களாகும். ஒப்பவை விரும்பினர். ஆசை பூர்த்தியாகிவிட்டது. கொள்கையாளரை மடக்கிச் சிறையில் அடைத்து உணர்ச்சியை ஒடுக்க முயல்வது வீண். மாறாக உணர்ச்சி முதிர்ந்து முறுக்கேறும். தக்க திட்டம் அமைப்பதற்குச் சௌகரியங்கள்கிடைக்கும். தோழர் ஈ.வெ.ரா. அவர்கள் வெளியில் வந்தது ம் புத்துயிரோடு வேலைசெய்யட்டுமென்று அளிக்கப்பட்ட அரிய சந்தர்ப்பமே, அவருடைய சிறைவாசமென்று கருதி நாம் சந்தோஷப் படவேண்டும்,

ஃ ஃ

காந்தியின் தென்னாட்டுச் சுற்றுப் பிரயாண நாடகம் பெரும்பாலும் முற்றிற்று என்றே சொல்லலாம். காந்தி பக்தர்களின் ஆர்ப்பாட்டங்களும் வரவேற்புகளும் பண வசூல்களும் ஒருவாறு அஸ்தமித்து விட்டது. சேரிக்கும் அக்கிரகாரத்துக்கும் இடையில் கட்டப்பட்ட போலிப்பாலம் இடிய ஆரம்பித்தாயிற்று. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும். பிராமணீயப்புளுகு ஆஷாடபூதிப் புரட்டு, சுயநலப் புனைசுருட்டு, இவைகள் காந்தி புறப்பட்டு 'காந்தி மகாதமீய' திரை நீங்கியதும் வெட்ட வெளிச்சம்.

ஃ ஃ

தோழர்களே! நமது வேலை பகத்தானது. நாம் முதலாளி ஆதிக்கத்தையுடைத்து தொழிலாளராட்சியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். கர்ம பலனைக் கட்டோடு அறுத்து மத நம்பிக்கையையும் ஆஸ்திகப் பித்தத்தையும் தீயிட்டுப் பொசுக்க வேண்டியது நமது பொறுப்பு. காந்தீயமே—காந்தியின் தத்துவங்களே—மதம், ஆஸ்திகம், முதலாளித்வம் என்ற பயங்கரப் பிசாசுகள், இறுதியாக அடைக்கலம் புகுந்துள்ள பொது மக்களை மயக்கும் நச்சுக் கட்டிடம். நாம் தேசீயச் செல்வாக்குப் பெற்ற காந்தீயத்தைக் கிழித்தெறியும் துறையில் சிரமத்துடன் எதிர் நீச்சு நீந்துகிறோம்.

ஃ ஃ

மனோராஜ்யம் செய்யலாம், ஆனால் ஆளுகைக்குப்பயன்படாது. ஆகாயக் கோட்டை கட்டலாம், எதிரிகளிடமிருந்து நம்மைக்காப்பாற்ற உதவாது. வாயப்பந்தல் போடலாம். வெயிலையும் மழையையும்தடுக்காது. காயிதத் திட்டங்கள் பெரும்பாலும் குப்பைத் தொட்டியையே நிரப்புகின்றன. மனோராஜ்யம், வாய்ப் பந்தல், காயிதத்திட்டம் இவை அனாவசியமென்று யாரும் கூறிவிட முடியாது. இவை மதிக்கப்பட வேண்டுமானால்-வேலை பூர்த்தியடைய வேண்டுமானால் பலன் பூரணமாகக் கிட்ட வேண்டுமானால் காரியாம்சம் செயல் திறன் ஆகிய முதஉழைப்பு முக்கியஸ்தானம்பெற வேண்டும்.

ஃ ஃ

தனிப்பட்ட தர்க்கம் Private Discussion பிரசங்கம் பிரசாரம், பாட்டு, பத்திரிகை புஸ்தகம் சங்கம் ஸ்தாபனம் ஆகியவைகளாலேயே எந்த இயக்கத்தையும் பரப்ப முடியும். காந்தீய விஷம் பரவியதற்கும் இவைகள்தான் காரணம். சமதர்மம் பரவப் பரவ காந்தீயம் தேயும். ஆகவே, சமதர்மக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பரப்பு தற்குரிய சங்கங்கள் நூற்கள், பத்திரிகைகள் பிரசாரங்கள் இவற்றை அதிகப்படுத்துவதே நமது முன்னணி வேலை. இந்தப் பல்லவி பழைய பல்லவி என்பது மெய்தான். ஆனால் அவசியம் பூர்த்தி செய்யப்படும் வரையில் பேசப் பட்டுத்தானே தீரும்.

ஃ ஃ

இன்றைய சமூக அவசியம் (Social necessity) காந்தீயமல்ல, சோஷியலிஸமே. காந்தி 'ஒரு தனித் தலைவர்' என்ற தீர்மானம் மாறி, காந்தி பிற்போக்கான தலைவராகத் தீவிர வாதிகளுக்குப் படுகிறார். காந்தியை மகாத்மாவாகக் கண்ட கண்கள் இன்று காந்தியை சமதர்ம விரோதியாகப் பார்க்கின்றன. காந்தீயத்தின் சாயம் வரவர வெளுத்து வருகிறது. காந்தீயத்தின் குறைபாடுகள் பொது ஜனங்கள் முன்னால் புட்டு புட்டு காட்டப் படுகின்றன. அரசியல், பொருளாதார, சமூக, மதத்துறைகளில் காந்தியின் அபிப்பிராயங்களை மறுத்துப் புறக்கணிப்பவர்களின் தொகை பெருகி வருகிறது "சந்தர்ப்பத்தை பிடித்துக் கொள்வதில் மகாகெட்டிக்காரன்" என்று லெனினைப் புகழ்ந்தான் லூனச்சார்ஸ்கி. காந்தீயத்தை வீழ்த்தி சமதர்மத்தைப் பரப்புவதற்கு இந்த நல்ல சந்தர்ப்பத்தை உபயோகிப் பதில் எனது தோழர்கள் தீவிரமாக இறங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

ஃ ஃ

தமிழ் நாடு முழுவதிலும் சமதர்மத்தை லட்சியமாகக்கொண்ட சுயமரியாதைச் சங்கங்கள் சுமார் 120க்கு மேற்பட்டிருக்கின்றன என்பது தோழர்கள் அறிந்த விஷயம். ஒரு சங்கம் 6 மாதங்களில் மற்றும் 3 சங்கங்களை ஸ்தாபிப்பது பிரமாதமல்ல. இரண்டு மாதங்களில் ஒரு சங்கம்; முடியாத காரியமா? தோழர்களே! நாம் ஏகோபித்து நமது பிரயாசையை இவ்வழியில் திருப்பினால் நமது தலைவர் சிறைவாசம் முடிந்து வெளியில் வரும்பொழுது சுமார் 500 சங்கங்களை—மெய்யாகவே வேலைசெய்யும் 500 சுயமரியாதை சமதர்மச் சங்கங்களை—தலைவருக்குக் காட்டி நாம் செய்கை வீரர் என்பதை எதிரிகளும் உணரும்படி செய்வோமென்பது திண்ணம்.

ஃ ஃ

ரஷ்யாவில் 50000 பொதுவுடமைச் சங்கங்கள் இருக்கின்றன. 15 லட்சம் பொது உடமைக்காரர்களிருக்கிறார்கள். இவர்கள் தான் உலகம் வியக்கும் 'ஐக்கிய சமதர்ம சோவியத் குடிஅரசி'ன் அச்சாணியாக வாழ்கிறார்கள். 3 வருடத்திட்டத்தாலும், 5-வருடத்திட்டதாலும். 7 வருடதிட்டத்தாலும் புது உலகை நிர்மாணிக்கும் செய்கை வீரர்கள் இவர்கள். நாமும் இவர்கள் கூட்டமாயின் அடுத்த ஆறுவது மாதத்தில் வேலை செய்யும் 500 சங்கங்களைக் காண்போம்.

ஃ ஃ

கோயமுத்தூர் ஜில்லா சங்கம் நிறுவவும், தாலூகா, கிராம சங்கங்கள் ஏற்படுத்தவும், தோழர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி, டாக்டர் எம். கிருஷ்ணசாமி, சங்கரலிங்கம், கிஸன் முதலியோர் பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள். மதுரைஜில்லா முழுவதிலும் சங்கங்களேற்படுத்துவான் வேண்டி நமது தோழர்களான எ. எஸ். அருணாசலம், ஏ. எஸ். ஆனந்தம், வேணுகோபால், விநாயகமூர்த்தி முதலியவர்கள் ஜில்லா சங்கத்தை ஸ்தாபித்து வேலை செய்து வருகிறார்கள். தஞ்சை ஜில்லாவிலும் இம் முயற்சி தஞ்சை சங்கத்தாராலும், நாகை சங்கத்தாராலும், மாயவரம் சங்கத்தாராலும் நடைபெற்று வருகிறது. இன்னும் மற்ற ஜில்லாக்களிலும் இந்த ஆசையும் உணர்ச்சியும் இருந்து வருவதை நான் நன்கு அறிவேன்.

ஃ ஃ

தலைவர்கள் வழி காட்ட வேண்டியதிலும், வாலிபர்களின் கூட்டுறவே இப்பொழுது மிக மிக அவசியம், "தொழிலாளர் இயக்கத்தாலும் விவசாயிகள் இயக்கத்தாலும் வாலிபர் இயக்கத்தாலும், காந்தீயத்தை நாட்டை விட்டு ஓட்டவேண்டும்" என்றார் வங்கவீரர் லஜபதிராய். இவ்விஷயத்தை இளம் வீரரே தாக்கிப் பார்க்க வேண்டுமென்பது என் கோரிக்கை. புது மலர் போல் சக்தி நிரம்பியவர் வாலிபர்கள். அவர்கள் அகராதியில் 'முடியாது' என்ற சொல்லைக் காண்பதரிது. வாலிபரிடையே பிரசங்கிகளும் பிரசாரகர்களும் மலிய வேண்டும். ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் பெருகவேண்டும். மிக விரைவில் ஆயிரக்கணக்கான வாலிபர்கள் சேர்ந்த "சமதர்மத் தோழர் படை" இந்நாட்டில் அமைக்கப்படும் என்பதுயான் காணும் கனவு. கனவு நனவாகாமல் போகாது. வாலிபர்கள் தங்கள் கண்ணோட்டத்தை உழைப்பாளிகளிடம் திருப்ப வேண்டும்.

ஃ ஃ

சகோதரிதோழர்களுக்கு ஒரு வார்த்தை. இன்றைய சமூகத்தில் பெண் பாலரிடையில் சமதர்மத்தைப் பரப்புவதற்கு ஆண்களை விடப் பெண்களுக்கே சௌகரியங்கள் மெத்த உண்டு. ஆணும் பெண்ணும் ஒன்று பட்டு சமதர்மத்தைப் பரப்புவது மின்றி பெண்கள் பெண்களிடையில தனிக் கிளர்ச்சி செய்தல் அவசியம். நமது இயக்கத்தில் முன்னணியில் நிற்கும் ஆண்களின் தொகையோ ரொம்பக் குறைவு பெண்களையோ விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த நிலைமையை மாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு சமதர்மச் சகோதரிகளுடையது என்பதும் எனது துணிவான கருத்து.

தோழர் ஈ. வெ. இராமசாமி.

நமதியக்கத் தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஜாமீனில் விடுதலையாகி வந்துவிட்டதாக நினைத்து நமது தோழர்களில் பலர் ஏராளமான கடிதங்களை எழுதி வருகிறார்கள். தோழர் இராமசாமி ஜாமீனில் வெளிவரவில்லை கோவை சென்ட்ரல் ஜெயிலில் சுகமாக இருக்கிறார்.

தோழர் கண்ணம்மாள் ஜாமீனில் விடுதலை.

கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் அவர்களால் ராஜநிந்தனை குற்றம் செய்ததாக சென்ற 24-1-34ந் தேதி மூன்றுமாத தண்டனை யடைந்து வேலூர் சிறையிலிருந்த தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் 12-2-34ல் ஜாமீனில் விடுதலையடைந்து 13-2-34ந் தேதி காலை ஈரோடு வந்துசேர்ந்தார்.

அவர் நெஞ்சுவலியாலும், இருமலாலும், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். டாக்டர் எம். கிருஷ்ணசாமி சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார். இப்போது சிறிது சௌக்கியமாக யிருக்கிறார்.

நாடெங்கும் காந்தி பகிஷ்காரக் கூட்டங்கள்.

சேலததில் கருப்புக்கொடி ஊர்வலம்.

சுயமரியாதைக் காரர்கள். போலீஸ் காவலில் வைக்கப்பட்டனர்.

தோழர் காந்தி 14-2-34 தேதி சேலம் விஜயம் செய்யும்பொழுது காந்தியின் ஹரிஜனப் பிரசாரத்தைப் பகிஷ்கரிக்க மும்மரமாக வேலைகள் செய்வதாக பலகூட்டங்கள் மூலமாகவும், பகிஷ்காரப் பிரசுரங்கள் மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள மூலமாகவும் விளம்பரப் படுத்தப்பட்டது. போலீஸ் அதிகாரிகள் காலை 8 மணிக்கு தோழர்- நடேசனை சேலம் டவுன் ஸ்டேசனுக்கு அழைத்துச் சென்றனர்- அவரை அங்கேயே காவலில் வைத்துவிட்டனர்- சுமார் 8-30 மணிக்கு சிலர் கருப்புக்கொடியுடன் "காந்தீயம் வீழ்க" என்றும் "பார்ப்பனீயம் வீழ்க" எனக் கோஷித்துக்கொண்டுசெவ்வாய்ப்பேட்டை மெயின்ரோட்டிலிருநது, சேலத்திற்குப்போகையில்போலீசார் அவர்களையும் ஸ்டேஷனுக்குள் அழைத்து காவலில் வைத்திருந்தனர் இதனல் நகரில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது- பிறகு மாலை 2-30 மணிக்கு தோழர்கள் எ- எம்- பாலசாமி, திருப்பூர் டி- பி- ராமசாமி அவர்கள் தலைமையில் ஓர் பெரும் கூட்டம் கருப்புக்கொடிகளுடன் அரிசிப்பாளையம் சமதர்ம வாலிபர் சங்கத்திலிருந்து "தீண்டாமை வீழ்க" ஹரிஜனப் பெயர் ஒழிக, காந்தியம் வீழ்க வைதிகம் சாய்க, ஜாதி மதங்கள் மாணடொழிக, பாாபனக் கொடுமை ஒழிக, பணக்காரத்தன்மை ஒழிக, தொழிலாளர் ஆட்சி ஓங்குக, சாந்தி நிலவுக, புரட்சி தோன்றுக, சமதர்மம் ஓங்குக, என்று பெருத்த கரகோஷத்துடன் ஆரம்பித்து லீபஜார் மூலமாக சித்தரசசாவடிக்குவந்து, நேருக செவ்வாய்ப்பேட்டை பஜார் தெரு வழியாகவும், செர்ரீரோட் வழியாக சேலம் அக்கிரகாரம்சென்றுஅம்மாப்பேட்டை மெயின்ரோடிற்கு வரவே, ஒரு கோஷ்டியார் இதைத் தடுத்தார்கள்- அவர்களுக்குச்சமதர்ம இயக்கத்தின் லக்ஷியத்தையும், காந்தியத்தின் வைதிக, எறிந்து மதப்பிரசாரத்தையும் விளககிச்சொன்னபிறகு மெயின்ரோட் வழியாகவும், கதர்ககடை வழியாகவும், பஜார் ரோட்டில் ஊர்வலம் செல்லும பொழுது டவுன் ஸ்டேஷனுக் கருகாமையில வந்ததும் போலீசார் எல்லோரையும் உள்ளே அழைத்துச் சென்ருர்கள்- தோழர் பாலசாமி அவர்கள், சமதர்மிகள் காந்தியையும், காங்கிரசையும் கண்டிப்பதின் நோக்கதைப் பற்றி விளக்கி சொல்லியதோடுகூட காந்தி பகிஷ்காரப்பிரசுரங்களை அங்கு வந்திருந்த பேஜிஸ்ட்ரேட்டுக்கும், இன்ஸ்பெகடருக்கும் கொடுதார்- ஆனல் பகிஷ்காரக் கூட்டத்தினல் கலரம் நடக்கும் என்று தோழர்- காந்தியார் நகரை விட்டு சென்ற பிறகு சுமார் 9-மணிக்கு எல்லோரையும் விட்டுவிட்டார்கள்-

நாகப்பட்டினம்.

12-2-34 நாகை போலீஸ் ஸ்டேஷன்மைதானத்தில் ஓர் பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. நடராஜன் தலைமைவகித்தார் தோழர்எஸ்.வி.லிங்கம ப ஜீவானந்தம் ஆகியவாகள்காந்தியைப் பகிஷ்கரிப்பதேன், என்பதுபற்றிப் பேசினர்கள். உள்ளூர் காந்தி கக்ஷியினர் பலரும் வந்திருநதார்கள்- இரவு 9-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. பிறகு தோழர்கள் மாயவரம் சீயாழி முதலிய விடங்கள் சென்று காந்தி பஹிஷ்காரப் பிரகாரம் செய்துவிட்டு 15-2-34ந் தேதி ஈரோடுவந்து சேர்ந்தார்கள்-

ஈரோட்டில் காந்திபகிஷ்காரக்கூட்டம்.

10-2-34 உமாலை6-மணிக்குஈரோடு அலிசவுககில் "காந்தியை ஏன்பகிஷ்கரிக்க வேண்டும்" என்பதைப்பற்றி ஒரு கூட்டம் நடைபெறுமென சுயமரியாதை வாலிபர்சங்கத்தார் துண்டு விளம்பரம் செய்திருந்தார்கள். அதேஇடத்தில் அதேதேதியில் 6-மணிககு காநதியை வரவேற்பவாகள் கூட்டம் நடைபெறுமென்றுதுண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தனர். பின் இருவரும் சமாதானமாகி ஒரே கூட்டத்தில்அவரவர்கள் கொள்கைகளைக் கூறலாமெனககூறியபினதோழர்கே சவலால்காளிதாஸ் அவர்களின் தலைமையில்நடைபெற்றது.பின்முறையே தோழர்கள் ப. ஜீவானந்தம, எஸ். வி லிங்கம், அ. இரத்தினசபாபதி, ஆர். அன்னபூரணி, அ- இராகவன், டாக்டர் எம். கிருஷ்ணசாமி முதலியவர்கள் காந்தியை பகிஷ்கரிககவேணடியஅவசியத்தைப்பற்றி மிக விளக்கமாகவும், தெளிவாகவும் பேசினர்கள். காந்தியை வரவேற்க வேண்டியதைப்பற்றி தோழர்கள் எஸ்- டி- சுப்பிரமணியம், வேலுசாமி, காவேரி, கிரித்திவாஸ், வெங்கிடாசலம் முதலியவர்கள் பேசினர்கள்தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 11மணிக்குக் கலைந்தது.

மறுநாள்

மறுநாள் 11-2-34ந்தேதி மாலை 6மணிககு இங்கு தோழர் காந்தியார் வருகிறார். இவ்வூர் பார்க்கில பொதுக்கூட்டம் நடைபெறு மென்பதை யறிந்த இவ்வூர் சுயமரியாதை வாலிபர் சங்கத்தார் நகர் முழுதும் காந்தி பகிஷ்காரத் துண்டுபிரசுரஙகளும,பொதுக் கூட்டங்களுமசில தினங்களாகப் பிரசாரஞ் செய்து வந்தார்கள். 11-2-34ந் தேதி காலை இவ்வூர் சுயமரியாதை வாலிபர் சங்கத்திலும், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மாளிகையிலும், இன்னும்முக்கியமான பல விடங்களிலும் கருப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தது.

அன்று மாலை 3-மணிக்கு தோழர்கள் மாயவரம் சி நடராஜன், ப. ஜீவானந்தம் ஆகிய இருவரின் தலைமையின் கீழ் சுயமரியாதை வாலிபர்கள் பெருங் கூட்டத்துடன் கருப்புக்கொடியுடன் நகரில பல விடங்களிலும் "காந்தியம் வீழ்க"

"மதம் மாய்ந்து மடிக" "புரட்சி பொங்குக" "பொதுவுடமை தோணுக" என்பதுபோன்ற பல வாக்கியங்களைக் கூறிக்கொண்டு ஊர்வலமாக இவ்வூர் பார்க்குக் கடுத்த இடத்திற்கு வந்தார்கள். (பார்க்கில் தோழர் காந்தியை வரவேற்கும் கூட்டம் நடைபெற்றது.) அங்கே இரண்டு பெரிய கருப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தது. கோவை தோழர் ராமதாஸ் அவர்கள் "சமதர்மப் பாடல்" கள் பாடினர்.

பின் இவ்வூர் சுயமரியாதை வாலிபர் சங்கத் தலைவா டாக்டர் எம. கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம கூடியது. அக் கூட்டத்திற்கு சுமார் 500 பேர்கள் கூடியிருந்தார்கள் தாழர்கள் திருப்பூர் டி. பி. ராமசாமி, சேலம் நடேசன், சேலம் பாலுசாமி, ஆர். கிஸன், எஸ். வி. லிங்கம், ப. ஜீவானந்தம் முதலியவர்கள் "காந்தியும், சமதர்மமும" என்பது பற்றி மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் பேசினர்கள்.

தோழர் ஜீவானந்தம் அவாகள் பேசிக்கொண்டிருக்கும்போது காந்தி வரவேற்புக் கூட்டத்திலிருந்து வந்த சிலர் கூட்டத்தைக் கலைக்க வேணடுமென்ற நோக்கத்துடன் சத்தம் போட்டுக்கொண்டு வந்து தோழர் ஜீவானந்தம் அவர்களைசில கேள்விகளை கேட்டார்கள், அவர் அவைகளுக்குத் தக்க பதில் கூறிவிட்டு தொடர்ந்து பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப பின் கூட்டம் கலைந்தது.

கும்பகோணம்

முனனேற்றபாட்டின படி கும்பகோணம் சுயமரியாதைவாலிபசங்கப் பிரதிநிதிகளாக தோழர் கே. கே. நீலமேகம், கே. ஆர். சுப்பிரமணியம் எஸ். சுப்பராயன், சி. சாமிநாதன், டி. ஆர். வரதன் ஜி- ராமைய்யா ஆகிய அறுவரும் இந் நகருக்கு விஜயம் செய்த தோழர் காந்தியை டாக்டர் சாம்பசிவம் அவர்களுடைய ஆரோக்கியா சிரமத்தில் 10-10க்கு சந்தித்து சுமார் 25 நிமிஷங்கள் வரை பேசிக்கொண்டிருந்தார்கள்- ஷை சங்கத்தார் தயாரித்திருந்த ஆங்கில அறிக்கை யொன்றை காந்தியினிடம் கொடுத்தார்கள்.

தோழர் காந்தி ஷை அறிக்கையை வாசித்து அபிப்பிராயம் கூருகையில் அதில் கண்டுள்ள ஒவ்வொரு விஷயங்களையும் தாம்பூர்ணமாக ஒப்புக் கொள்வதாகச் சொல்லிக்கொண்டே வந்தார்- ஹிந்து மதமென்று ஒன்று இல்லை என்பதை தாம் முழுமனதுடன் ஒப்புக்கொள்வதாகவும், கடவுளும் மதமும் மறைந்து தீரவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதற்கு அவைகள் சம்மட்டியால் அடித்துத் தகர்க்கப்பட வேணடுமென்றும், நம் நாட்டிலுள்ள ஜாதி மதங்களெல்லாம் ஒழிந்து இந்தியர் எல்லோரும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகளைப்போல் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்பதைத்தாமும்சம்பூரணமாகஒப்புகொள்வதாகவும், யார் எதைச்சொன்னலும் அதைப் பகுத்தறிவு கொண்டு நடு நிலைமையிலிருந்து ஆராய்ந்தே ஒப்புக் காள்ள வேண்டுமென்பதைத் தாம் ஆதரிப்பதாகவும், பொருளாதார வித்தியாசங்களைப் போக்கி சமத்துவத்தை நிறுவ வேண்டுவது தான் தறகால அவசர வேலையும், உண்மையான சீர்திருத்தமும் ஆகுமென்பதை சந்தோஷததுடன் தாமும் ஆதரிப்பதாகவும் செல்வி தாழ்த்தப்பட்டவர்களிடம் உங்களுடைய அனுதாபமாக, 'என்னுடைய ஆதி இந்துநிதிக்கு பொருள் கொடுங்கள" என்று கேட்டார்- அதற்கு சு- ம- கோஷ்டியினர் "பணமில்லாமலே இன்னும இதைவிடப்பெரிய வேலைகள் செய்துகொண்டிருப்பதாகவும், அதற்கு மகாத்மா உதவி வேண்டுமென்றும் கேட்டதற்குத்தான் ஒரு ஏழை யென்றும் ஆகையால் வாய் அனுதாபம்தான் காட்ட முடியுமென்றும சொல்லி, ஓர் ஆரஞ்சுப்பழத்தைக்கொடுத்தார்- அறிக்கையில் கடைசியாகக் குறிப்பிட்டிருந்த 'உங்களுடன் எஙகளுடைய அபிப்பிராயபேதம் இதுதான்" என்றதற்கு அதை தாம் முழுமனதுடன் ஒப்புக்கொள்வதால், இனி அவ் விஷயத்தில் தகராறு எதுவும இல்லைஎன்றும் கூறினர்- மேற்கூறிய சம்பாஷணையை டாக்டர் ராஜன் தாக்கர் (மிஸ் ஸ்லேட்) மீராபாய் இவர்கள் கவனித்துககொண்டிருந்தனா- (த-நா)

காலண்டர்கள் வரப்பெற்றோம்.

கீழ்க்கண்ட இடங்களிலிருந்து 1934ம் வருடக்காலண்டர்கள் வரப்பெற்றோம். அதுமிக அழகாகவும், கணகவரத்தக்க வணப்புடையதாகவுமிருக்கிறது.

சென்னை சோல்டன் கம்பெனி.

திருச்சி ஆ. பெ. விஸ்வநாதம்.

ஈரோடு ஜெனரல் பிரஸ்,

கிணறுகள்—பள்ளிக்கூடங்களில் சமத்துவம்.

பம்பாயில் நடப்பதென்ன?

"பம்பாய் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் ஆபீசருக்கு வரும் செய்திகளிலிருந்து அவர்களின் சமூகத்தாரின் குறைபாடுகள், துன்பங்கள், துயரங்கள், வேண்டுகோள், விண்ணப்பங்கள் முதலியன வெளியாகின்றன. அதிலிருந்து இந்த டிபார்ட்மெண்டைத் தங்களுக்குப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளத் தாழ்த்தப்பட்டோர் துணிந்திருக்கிறார்களென்று தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் ஆபீசர் தனது முதலாவது 1932-33ம் வருஷத்திய நிர்வாக ரிப்போர்ட்டில் குறிப்பிடுகிறார்.

இதுபோன்ற ஒரு வேலைக்கு, முனிசிபாலிட்டி, தாலூக்கா, ஜில்லாபோர்டு போன்ற லோக்கல் போர்டார்களின் கூட்டுறவான ஒத்துழைப்புப் பெரிதும் அவசியம் வேண்டற்பாலதாகிறது என்பது வற்புறுத்தப்படவேண்டிய விஷயமாகும். இதுவரையில் மேற்சொன்ன லோக்கல் போர்டார்களிடமிருந்தும், மற்ற சர்க்கார் நிர்வாகஸ்தரிடமிருந்தும் திருப்திகரமான உதவி கிடைத்திருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருடையவும், புராதன வகுப்பார்களுடையவும் கமிட்டியின் சிபார்சுப்படி பம்பாய் சர்க்காரானது பொது நிர்வாக எல்லாக் கல்வி நிலையங்களிலும், எல்லா வகுப்புக் குழந்தைகளையும் சரிநிகர் சமத்துவமாக நடத்தப்படவேண்டுமென்றும், எல்லா மாணவர்களும் எவ்வித வகுப்புப் பேதமின்றி ஒரேவிதமாகவகுப்பில்உட்காரவைக்க வேண்டுமென்றும் உறுதி கூறுகிறது. ஆனால் இன்னும் கிராமாந்திரப் பள்ளிக்கூடங்களில் பள்ளி மாணவர்களை உட்காரவைப்பதில் உயர்வு தாழ்வு காட்டப்படுகிறது. இத்தகைய சம்பவங்கள் வெளிக்குக் கொண்டுவரப்படுவதால் இன்னும் சில வருஷங்களில் இவைகளில் நல்லவெற்றி ஏற்படுமென்று நம்பப்படுகிறது.

மாகாண முழுவதும் பல சர்க்கார் காரியாலயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் படித்த கூட்டத்தாருக்கு உத்தியோகம் தேடிக் கொடுக்கும் விஷயத்தில் உதவி செய்வதில் இந்த டிபார்ட்மெண்ட் தனது முக்கிய கடமைகளில் ஒன்றாகக்கொண்டிருக்கிறது. உத்தியோக நியமன விஷயங்களில் சரியான யோக்கிய தாம்சம் பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுடைய கோரிக்கைகளுக்குசலுகை காட்டவேண்டுமென்றும், குமாஸ்தா பதவிகளுக்கு அவசியம் பயிற்சி அளிக்கவும் விசேஷ உரிமை காட்டவேண்டுமென்றும் சர்க்கார் எல்லா உத்தியோக நியமன அதிகாரிகளுக்கும் வற்புறுத்தி இருக்கிறது.

பெருக்குகிற உத்தியோகத்தைத் தவிரக் கீழ்தர உத்தியோகப் பதவிகளுக்கு 10-விகிதம் ஒதுக்கப்படவேண்டுமென்றும் இந்த நிலையை அடையும்வரையில் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உத்தியோகமளிக்கவேண்டுமென்றும் சர்க்கார் வெளிப்படுத்தியிருக்கிறது.

பொதுப் பணத்தால் நிர்மாணிக்கப்படும் எல்லாப் பொது நீர் நிலையங்களையும், கிணறுகளையும், தர்மசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் உபயோகப்படுத்தும் விஷயத்தில் 1923, 1926, 1932 வருஷங்களின் சட்டசபைத் தீர்மானங்களின்படியும் சர்க்கார் உத்திரவுகளின்படியும் முற்போக்கு வெகு சிலவே ஏற்பட்டிருக்கின்றன.

இந்த டிபார்ட்மெண்ட் தாழ்த்தப்பட்டவர்களுடைய முற்போக்குக்காக பிரயோஜனகரமான திட்டங்கள் கொண்டிருப்பதால் அவர்களுக்கு முற்போக்கு தீவிரமாக இருக்குமென்று ரிப்போர்ட் கூறுகிறது.

ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் தாழ்த்தப்பட்ட வகுப்பாராக இருந்து எல்லா ஜாதி மாணவர்களுக்கும் போதிப்பதினாலும் ரிவின்யூ போலீஸ் போன்ற சர்க்கார் சர்வீஸ்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களின் பல உத்தியோகத்தினாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் கிராமக் கிணறுகளை உபயோகப்படுத்துவது போன்ற நியாயமான உரிமைகளைப் பெறுவதில் ஜாதி ஹிந்துக்கள் மறுப்பது கஷ்டமான காரியமாக முடியும்.

விதவா விவாகம்.

திருநெல்வேலி ஜில்லா மேலப்பாளையம் தோழர் ஆ லெ- ஆ. சாமிநாதனாசாரி அவர்கள் புதல்வி தோழர் ஆவுடையம்மாள் அவர்களுக்கும் பேட்டை தோழர் திரு முத்துச்சாமி ஆசாரி அவர்கள் புதல்வர் தோழர் அனந்தபாப்பநாதன் அவர்களுக்கும் திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்த சங்கத்தின் முயற்சியால் தூத்துக்குடி விஸ்வகர்ம மகாஜன சங்கம் பிரசிடெண்டு தோழர் பி. ராமையா (ஆசாரி) அவர்கள் தலைமையில் 4-2-34 பகல் 2மணிக்கு மேலப்பாளையம் மணமகள் இல்லத்தில்விதவாவிவாகம்நடைபெற்றது.

பெரியகுளம் சுயமரியாதைக் கூட்டம்.

11-2-34-ல் பெரியகுளம் வடகரையில் வாராந்திர சுயமரியாதைச் சங்கக் கூட்டம் தோழர் ஏ. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது அனேக பொது ஜனங்களும் இக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள் அதுசமயம் தோழர்கள் எல் ஆர். சங்கரையா, மருதமுத்து, இரு தோழர்களும் ஒருமணி நேரம்வரை சுயமரியாதைச் சமதர்மப் பாடல்கள் அங்கு கூடியிருந்த ஜனங்கள் களிக்குமாறு பாடினார்கள். பின்பு தோழர் எல். கிருஷ்ணசாமி அவர்கள் சுயமரியாதை என்றால் என்ன? என்பதைப்பற்றி சுமார் ஒன்றரை மணி நேரம்வரை மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் பேசினார்கள். பின்பு அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

தீர்மானங்கள்.

1. இம் மாதம் பெரியகுளம் வடகரையில் நடக்கப் போகும் பகவதியம்மன் திருவிழாவில் பலியிடப் போகும் எருமைக் கிடாக்களை வெட்டாமல் ஏலத்தில்விட்டு அப் பணத்தை பொதுஜன நன்மைக்கு உபயோகப்படுத்துமாறு வடகரை, தொட்டப்பநாயக்கனூர் ஜெமீன்தாரும், முனிசிபல் சேர்மனுமான லெப்டினண்ட் தோழர் என். ஸ்ரீராமபத்ர நாயக்கர் அவர்களை இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

2. பீஹார் மாகாணங்களில் ஏற்பட்ட பூகம்பத்தின் பயனால் அங்கு கஷ்டப்படும் மக்களுக்குப் பணஉதவி செய்யும்படியாய் இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானங்கள் நிறைவேறியதும் தலைவர் முடிவுரையுடன் இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது என சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

துடுப்பதி.

செங்குந்த வாலிப சன்மார்க்க சங்கம்:— ஷை சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழா 9-2-34 வெள்ளிக்கிழமை திருகளார் தப்பிச்சிமார்மடம் மடாதிபதியும், தாலூகா ஜில்லா போர்டு அங்கத்தினரும், ஜில்லா அர்பன் பாங்கு உபதலைவருமாகியதோழர் எம். ஏ. ஆண்டமுத்துக்கவுண்டர் அவர்களின் தலைமையின் கீழ் மிக்க சிறப்பாக நடந்தேறியது.

உள்ளூரிலிருந்தும், ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பல பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் தலைவர் அவர்களுக்கு சங்கத்தலைவர் தோழர் மா. மாரியப்ப முதலியாரால் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்ட பின்னர் சங்கக்காரியதரிசி தோழர் சி. கெ. நா. கெவுர முதலியார் அவர்களால் சங்க அறிக்கைப் பத்திரம் வாசிக்கப் பட்டது.

பிறகு பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து தலைவரவர்கள் தமது தலைமைப் பிரசங்கத்தை மிகவும் தெளிவாகவும்,விளக்கமாகவும் சுமார் 1 மணி நேரம் நிகழ்த்தினார். பிறகு தோழர் கிர்த்திவாஸ் 'வாலிடரும் ஜனசமூகமும்' என்பதுபற்றியும், தோழர் பி எஸ் நாகேஸ்வரன் 'கிராமவாழ்க்கை' என்பதுபற்றியும் தோழர் எஸ். வேலுசாமி 'வாலிபரும், வையகமும்' என்பதுபற்றியும் தோழர் எஸ். ஏ கணேச முதலியார் 'வாலிபர் கடமை' என்பதுபற்றியும் விளக்கமாகச்சொற்பொழிவாற்றினார்கள்.

பிறகு கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

பூகம்பத்தினால் மடிந்தும், கஷ்டப்பட்டுக்கொண்டுமிருக்கிற பீகார் மாகாண வாசிகளுக்கு இச்சங்கம் அனுதாபங்காட்டுவதுடன் ஷை மக்களை கஷ்டத்தினின்று பரிகாரம் செய்து வைக்கும் பூகம்ப தேச நிவாரண சேவையை இச்சங்கம் பூரணமாக ஆதரிக்கிறது.

இந்தத்தீர்மானத்தைத் தோழர் டி. ஜி. வெங்கடாசலம் அவர்கள் பிரேரேபிக்கையில் பூகம்ப சேதத்தைப்பற்றி மிக விரிவாகப்பேசி பூகம்ப நிதிக்குப் பணம் உதவிசெய்யவேண்டிய அவசியத்தையும் கூறி பண உதவி கோறினார். உடனே அந்த இடத்திலேயே ரூ. 17-4-0 வசூலாயிற்று.

பிறகு தோழர் டி. ஜி. வெங்கடாசலம் அவர்களால் தலைவர் அவர்களுக்கும், உபன்யாசகர்களுக்கும், பிரமுகர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தனதாம்பூலம் வழங்கியபின் இனிதுமுடிந்தது (ஒரு நிருபர்)

சமதர்ம விளக்கம்.

சுயராஜ்யமா? சமதர்மராஜ்யமா? என்ற வினாவிற்கு விடையாக சுயராஜ்யம் யாருக்கு என்ற நூலின் மூன்றாம் பாகம் சமதர்ம பிரசுரங்களில் ஒன்றாக இந்த மாத 25ந் தேதிக்குள் வெளியாகும். அதில் மூன்று அத்தியாயங்களும், இரண்டு அனுபந்தங்களும் அடங்கியுள்ளன.

முதல் அத்தியாயத்தில் சுயராஜ்ய லக்ஷணம் தேசியம், உலகப்போர் அரசுகளால் மதங்களால் ஆதரிப்பு, பொருளாதார வித்தியாசங்கள், தனி சொத்துரிமை முதலிய விஷயங்கள் விபரமாக எழுதப்பட்டுள்ளன.

இரண்டாவது அத்தியாயத்தில் சமதர்மலக்ஷணம், சமதர்மவாழ்க்கை முதலிய விஷயங்களைப்பற்றி விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை இரண்டணாவாகும். 100—காப்பிகள் வாங்குவோருக்கு ரூ. 10 ஆகும். 100-காப்பிகள் வாங்குவோருக்கு 10- பர்சண்ட் கமிஷன் கொடுக்கப்படும். வேண்டுவோர் சமதர்ம பிரசுரநிலையத்திற்கு எழுதவேண்டும். கிடைக்குமிடம்:—

மானேஜர்,
22-செளத்பீச் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

மதிப்புரைகள்.

தென்னாப்பிரிக்கா ... ... சத்தியாக்கிரகம்.

காந்திஜீயால் எழுதப்பெற்ற "தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்" என்ற நூல் தமிழில் வெளியாக்கப் பட்டிருப்பது நமது பார்வைக்குக் கிடைத்திருக்கிறது- கோவை தோழர் டி. என்- அவிநாசிலிங்கம் பி. எ பி எல். அவர்களும் மதுரை என் எம். ஆர். சுப்பராமன் அவர்களும் மேற்கண்ட புத்தகத்தைத் தமிழில் எழுதிய பெருமைக்கு பாத்திரமானவர்களாவார்கள். காந்தீயத்தில் அளவற்ற மதிப்புக்கொண்டு இருவரும் கடலூர் சிறையில் சென்ற 1932-ம் ஆண்டில் சிறைபட்டிருந்த காலையில் இதனை எழுதத் துணிந்தது அவர்களின் போக்கின் நன்முயற்சியேயாகும்.

இன்றைய நாட்டின் விடுதலைக்கும் கஷ்டப்படும் ஏழைப் பாட்டாளி மக்களின் சுதந்திரத்திற்கும் காந்தீயம் கொடிது—கொடிது. என்பது இரகசியமானாலும் காந்தி சகாப்தத்தை உணரவும், அன்று ஆரம்பித்த அவரின் தோல்வி தொடர்ந்து இன்னும் நடப்பதை உணரவும் இந் நூல் தமிழ் நாட்டார் ஒவ்வொருவரும் படித்துப் பார்க்கவேண்டியது மிக அத்தியாவசியமாகும்.

"காலடியிலிருக்கும் தூசுக்கும் எளியவன் என்று தன்னை நினைப்பவனுக்கே கடவுள் உதவி செய்கிறார். பலஹீனமானவர்களுக்கும் உதவியற்றவர்களுக்குந்தான் ஈஸ்வரன் உதவி கிடைக்கும் இவ்வுண்மையை நாம் இன்னும் அனுபவத்தில் அறியவேண்டியிருக்கிறது. ஆதலால் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகத்தின் சரித்திரம் நமக்கு உதவியாயிருக்குமென நினைக்கிறேன்" என்றமோக. காந்திஜீயே முதல் நூலில் முன்னுரை தந்துள்ளார்.

முதல் நூலின் முழு சுவையும் சிறிதும் மாறுபடாது தேனினும் இனியதமிழ் நடையில் சமர்ப்பித்த மேற்கண்ட மொழிபெயர்ப்பாளர்கள் தக்க உயரிய நூல்களைத்தமிழ் நாட்டாருக்கு தந்து உதவப் பெரிதும் வேண்டுகிறோம்.

இந் நூலில "தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகத்தில்" சம்பந்தப்பட்ட பலருடைய படங்கள் அழகிய கிளேஸ் கடிதத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 250-பக்கங்களுக்கு அதிகமானது. நல்ல முறையில் அச்சிடப்பட்ட அழகிய புஸ்தகமாகும்.

பிரசுரக்கர்த்தா:—

தோழர் டி எஸ். சொக்கலிங்கம் அவர்கள்.

"காந்தி" காரியாலயம், சென்னை.

விஸ்வபந்து.

காரைக்குடியினின்று தோழர்கள் த. ராமகிருஷ்ணன், தி. ம. நடராஜன் ஆகிய இருவர்களை ஆசிரியராகக் கொண்ட "விஸ்வபந்து" என்ற செந்தமிழ் மாத வெளியீட்டின் இரண்டு இதழ்கள் வரப் பெற்றோம்.

விஸ்வகர்மர்களின் முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் உயரிய சீர்திருத்த நோக்கங்கொண்ட இப் பத்திரிகையானது காலமாறுதலின் உத்வேகத்திற்கேற்ப சார்லஸ் பிராட்லா போன்ற பெரியார்களின் வரலாறுகளையும் பத்திரிகா உலகத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்களின் கட்டுரைகளையும் தாங்கி வெளிவருதல் பெரிதும் குறிப்பிடத் தக்கது. ருசிகரக் கதைகளும். சமத்துவப் பாட்டுகளும் பெண்ணுலக அறிவுரைகளும் இதில் நன்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. விஸ்வகர்மர்கள் மட்டுமன்றி எல்லோரும் இப் பத்திரிகையைப் பெரிதும் ஆதரிக்கவேண்டுகிறோம்.

55.பக்கங்கள் கொண்டது. வருட சந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ 2-0-0. தனிப்பிரதி அணா 2.

விலாசம்:—

மானேஜர்,
"விஸ்வபந்து" ஆபீஸ்,
நாபுதூர், காரைக்குடி.

நாகை சுயமரியாதை சங்கப் பொதுக்கூட்டம்.

8-2-34-ம் தேதி மாலை 5-30 மணிக்கு நாகை டவுன் போலீஸ்ஸ்டேஷன் மைதானத்தில் தோழர் டி பி ஆறுமுகம் அவர்கள் தலைமையில்கூடியது தலைவர் முகவுரைக்குப்பின்தோழர் அ.பொன்னம்பலனார் அவர்கள் காந்தியின் ஹரிஜனப்பிரசாரம் என்பது பற்றி பேசுகையில் திலகர்நிதி முதலியவைகளுக்கு வசூலித்த பணங்கள் எங்கேயோ யாயிற்றோ அதேபோன்று தான் இதுபோது வசூலிக்கும் தொகையும் பேய்ச்சுரைமென்றும், ஆலயங்களையெல்லாம் தொழிற்சாலைகளாகவும், கண்காட்சிசாலைகளாகவும் மாற்றவேண்டுமெனக் கூறிக்கொண்டு வரும் இக்காலத்தில் ஹரிஜனங்களை ஆலயங்களுக்குச் செலவிடைப்பதானது. மீண்டும் அடிமைப்புத்தியைப் பலப்படுத்துவதாக இருக்கிறதென்றும், மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு ஆஸ்பதமாகவும், தன் நம்பிக்கைக்கு விரோதமாகவும் இருப்பது ஆலயமேயாகையால் மதத்தைப் பாதுகாப்பதாகவும், வர்ண பேதங்களை நிலை நிறுத்துவதாகவும் சொல்லி தீண்டாமையொழிக்க முயற்சிக்கும் காந்தியின் வருகையால் யாதொரு பயனும் அடையமுடியதென்றும் பேசினார்- தலைவர் முடிவுரையுடன்கூட்டம இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

அடுத்தவாரம்.

முத்துப்போட்டை தோழர். தர்மலிங்கம் அவர்களால் நமக்கு அனுப்பட்டுள்ள பாடல் அடுத்தவாரம பிரசுரிக்கப்படும். (ப-ர்)

ரெட்டியூர், கோடியூர், நாட்டாரம்பள்ளி, ஜோலார்பேட்டை எருதுவிடும் திருவிழா.

ஆயிரக்கணக்கான பாமர ஜனங்கள் காயம்பட்டும், நூற்றுக்கணக்கான மாடுகளுக்கு பலத்த காயம், காயம் பட்டவர்களில் சிலர் மாண்டதாக வதந்தி. கவர்ன்மெண்டார் கவனிப்பார்களா?

21-1-34-ந் தேதி கோடியூர், 28-1-34 ரெட்டியூர், 9-2-34 நாட்டாரம்பள்ளி, 11-2-34 ஜோலார்பேட்டை முறையே மேல்கண்ட தேதிகளில் மேல்கண்ட கிராமங்களில் எருதுவிடும் திருவிழா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பாமர ஏழைத் தொழிலாளர்கள் கூடியிருந்தனர். நூற்றுக்கணக்கான தோழர்களுக்கு கண்கள் போயின, மண்டைகள் உடைந்தன, கால்களும் கைகளும் முறிந்தன இந்த இருபதாவது நூற்றாண்டில் பொது ஜனங்களுக்கு கஷ்டமுண்டாகாதவாறு தங்கள் புது புது சட்டங்களும், செக்ஷன்களும் கவர்ன்மெண்டார் போட்டு வருவது யாவரும் அறிந்த விஷயமாகும். ஆனால் மூடப்பழக்க வழக்கங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு முன்று பணக்காரர்களால கையாளப்பட்டுவரும் எருதுவிடும் திருவிழாவில் அடிபட்டு சிலர் மரணமடைந்து அவர் பெண்டு பிள்ளைகள் தெருவில் திரிவதும், பலர் உடல் சின்னப்பட்டு தங்களுடைய வாழ் நாளை பிறவி முடவர்களாய் காலம் கழித்து வருவதையும் கவர்ன்மெண்டார் கவனியாது வருவது விசனிக்கத்தக்கது. நாடக மேடைக்கும், மொகரம் பண்டிகையில் புலி வேஷம் போடுவதற்கும்லைசென்ஸ் வாங்குவது போல எருதுவிட முதலாளிகளாக இருப்பவர்கள் இவ் விழாவில அடிப்பட்டு மரணமடைந்து போகிற குடும்பத்துக்கும், உடல் சின்னபட்டு முடவர்களாய் போகும் குடும்பத்துக்கும் நஷ்டயீடு கொடுக்க ஒரு சட்டம் செய்து அதன் கீழ் லைசென்ஸ் கொடுக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்வதுடன்; வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள சுயமரியாதைத் தோழர்கள் ஒவ்வொரு கிராமத்துக்குப் போய் அநியாயமும், அநாகரீகமுமான எருதுவிடும திருவிழாவை நிறுத்த முயற்சி செய்ய வேணுமாய்கேட்டுக்கொள்ளுகிறேன். கவர்ன்மெண்டார் பொங்கலுக்காக ஒரு நாள் தான் விடுமுறை நாளாக விடுகிறார்கள். இந்த பணக்கார கனவான்களோ பொங்கல் போய் ஒரு மாதம் வரையில எருதுவிட்டு நூற்றுக்கணக்கான ஏழை தொழிலாளிகளை கஷ்டபடுத்த காரணஸ்தர்களாயிருக்கிறார்கள். இப்படி செய்ய எந்த சட்டம், எந்த சாஸ்திரம் இடம் கொடுக்கிறதோ தெரியவில்லை.

காவேரிப்பட்டு, எலரப்பட்டி சென்ற மூன்று வருஷமாக மிருகத்தனமான எருதுவிடுவதைநிறுத்தி விட்டதோடு, இவ்வருஷம திருப்பத்தூரில் நிறுத்திவிட்டதும் குறிப்பிடத்தக்கது. சென்ற மூன்று நான்கு வருஷமாக நிறுத்திவிட்டதை இவ்வருஷம நாட்டாரம்பள்ளில் எருதுவிட்டது விசனிக்கத்தக்கது.

வி. பார்த்தசாரதி,
காரியதரிசி, சுயமரியாதைச் சங்கம,
ஜோலார்ப்பேட்டை.

ஓர் வேண்டுகோள்.

அன்புமிக்கத் தோழர்களே!

இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த தேவபட்டு என்ற கிராமத்தில் வசிக்கும் ஏழைத் தொழிலாளர்களாகிய தாழ்த்தப்பட்ட மக்களை மேல் ஜாதி என்று தங்களைப்பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும். கள்ளர், மறவர்கள் என்றகூடி 6-2-34-ல் நடந்தேறிய மஞ்சுவிரட்டு (பொங்கல் சம்பந்தமான உற்சவம்) அன்று பிற்பகல் தாழ்த்தப்பட்டவர்களின் சேரியில் புகுந்து ஆடுமாடு. நகை. பணம் இன்னும் மனேகமான பொருட்களையும் கொள்ளையிட்டதோடு மேற்படி கிராமத்துத் தாழ்த்தப்பட்ட பெண்களையும். பெரியார்களையும் விருந்துண்ணச் சென்றிருந்த அடுத்த கிராமத் தோழர்களையும் அடித்ததில் தாழ்த்தப்பட்ட தோழர்களில் பலருக்குக் காயமேற்பட்டு திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்னும் சிலர் தாம் அணிந்திருந்த கந்தைத்துணியோடு அடுத்த கிராமங்களுக்குச் சென்று ஆதரிப்பாரின்றி அலைகியுறுகின்றனர் இவர்களின் பரிதாபநிலைமையை கண்டு எழுதக் என் மனம் இடந்தருகிறது விடு தனன் ஆகையால் தோழர்களே கண்கொண்டு பார்க்கமுடியாத நிலையிலிருக்கும். மேற்படி கிராமத்தாழ்த்தப்பட்ட மக்களை இரட்சிக்கவேண்டியது ஒவ்வொரு சுயமரியாதைச் சங்கத்தார்களுடையவும். தோழர்களுடையவும் முக்கிய கடமையாகுமென்று நம்புகின்றோம்.

ஆ. அ. பழனிநாதன்
110 சிவபுரம் லெற்ஸ்ரோடு
கொழும்பு

சமணேசன்-உதயம்.

சென்னை ஆழ்வார்பேட்டை சுயமரியாதைத் தொண்டன் எம். பி. தங்கவேலர் அவர்கள் சகோதரியும், எஸ். வீரசாமி அவர்கள் வாழ்க்கைத் துணைவியுமாகிய எஸ். அம்மாக்கண்ணம்மாள் 11-2-34 காலை 3-மணிக்கு ஓர் ஆண்மகவை ஈன்றனா. அக் குழந்தைக்கு சமணேசனென்ற திருநாமம் சூட்டப்பெற்றது.

சேலம் டவுன் தென்னிந்திய நலவுரிமை சங்கம்.

திறப்பு விழா.

4-2-34-ந் தேதி சென்னையிலிருந்து இரவு மெயிலில் வந்த தோழர்கள கே. எம். பாலசுப்பிரமண்யம் அவர்களைச் சேலம் தோழர்களான எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல்., ஆர். நடேசன், அப்புலு ஆகியவர்கள் காரில் அழைத்து வந்தார்கள். 4—2—34 காலை 9-மணிக்கு செவ்வாய்ப்பேட்டை வள்ளிவிலாஸ் கட்டிடத்தில் ஒரு பிராமணரல்லாதார் கூட்டம் ஒன்று நடந்தது. அது சமயம் சேலம் தாலூகா போர்டு பிரசிடெண்டு ராவ்சாகிப் எஸ். பி. ராஜமாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்களான கே. எம். பாலசுப்ரமணியம் அவர்களுக்கும், தோழர் எஸ். பி ராஜமாணிக்கம் அவர்களுக்கும் வரவேற்பு பத்திரங்கள் வாசித்துக கொடுக்கப்பட்ட பிறகு, தலைவர் முகவுரையாகசில வார்த்தைகள் பேசி தோழர் கே.எம். பாலசுப்ரமணியம் அவர்களை திறப்பு விழா வாற்றும்படி கேட்டுக்கொண்டார். தோழர்பாலசுப்ரமணியம் அவர்கள் பிராமணல்லாத கட்சியின் கேவலமான நிலைமையை எடுத்துக்காட்டி பிராமணரல்லாதார்ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் இப்படிப்பட்ட சங்கங்கள் எவ்வளவு அவசியமென்றும் எடுததுக்கூறி சங்கத்தைத் திறந்து வைத்தார். இதுசமயம் தோழர் எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல்., அவர்களும் தோழர் எஸ். கனேசசங்கர் அவர்களும் விஜயம்செய்து ஊக்கம் காட்டியது பாராட்டத்தக்கது. பிறகு ஆர். நடேசன் வந்தனோபசாரம் கூற கூட்டம் 11-மணிக்குக்கலைந்தது.

தெ. இ. ந. ச. ஜில்லா கிளை சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

சேலம் தாலூகா போர்டு ஆபீஸ் ஹாலில் சேலம் ஜில்லா தென்னிந்திய நல உரிமைச சங்க கிளை சங்கததைச் சேலத்தில் ஸ்தாபிக்க மாலை 5மணிக்கு ஓர் பிராமணரல்லாதார் கூட்டம் கூடியது. அதற்கு தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் தலைமை வகித்து பிராமணரல்லாதார் கட்சியான ஜஸ்டிஸ்கட்சி ஒரு ஜனநாயகக் கட்சியாக இருந்து வராமல் ஜமீன் தார்கள் கூடிக்கொண்டிருக்கும் எதேச்சாதிகாரக் கட்சியாகமாறி விட்டதாகக்கூறி வாலிபர்கள் இனி எவ்வாறு நமது கட்சியைக்காபபாற்ற வேண்டு மென்பதைப்பற்றி இரண்டு மணிநேரம் பேசினர். அதை ஒட்டியே தோழர்களான எஸ். பி. ராஜமாணிக்கம், எஸ். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல் ஏ. கனேசசங்கர் பி. ஏ. பி. எல்., எஸ். பெரியசாமி, ஆர் நடேசன், தாமஸ்மாலையா சுந்தரராஜுலு ஏ. கெ. சந்திரையா ஆகிய வர்களும் வருத்தத்தோடும், கவலையோடும் பேசினார்கள்.

பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) இக் கூட்டம் ஜஸ்டிஸ் கட்சித்தலைவரை ஒத்திவைக்கப்பட்ட பிரமணரல்லாத மாகாண மகாநாட்டை வருகிற ஏப்பிரல் மாதத்திற்குள் கூட்டக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்க வேண்டி அடுத்த பிராமணரல்லாதார் கூட்டததைக் கூட்ட ஏ. எம் பாலசாமிக்கும் ஆர். நடேசனுக்கும் இக்கூட்டம் அதிகாரம் கொடுக்கின்றது.

(3) பிராமணரல்லாதார் இயக்கத்திற்கு உழைத்து காலம்சென்ற தோழர்களான ஓ. சி. சீனிவாசன், சிவப்பிரகாசமுதலியார் ஆகியவர்கள் மரணத்திற்காக இக்கூட்டம் தன் அனுதாபத்தை அவர்கள் குடும்பத்தார்களுக்கு தெவித்துக் கொள்ளுகிறது.

செவ்வாய்ப்பேட்டை.

4-2-34 மாலை 7-30மணிக்கு சுயமரியாதைப் பார்க்கில் தோழர் எஸ். ஏ. அய்யாசாமி எம். எ பி. எல், தலைமையில் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் சுயமரியாதையும், மக்கள் கடமையும் என்னும் பொருள் பற்றி பேசினர். தோழர் ஏ. சிதம்பரையா அவர்கள் வந்தனோபசாரம் கூற கூடடம் 9-30மணிக்கு இனிது கலைந்தது.

ஓமலூர்.

6-2-34ந்தேதி மாலை 5-30மணிக்கு ஓமலூர் கணக விலாஸ் ரைஸ் மில் மைதானத்தில் ஓர் சமதர்மப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் உள்ளூர் தோழர் அர்த்தனாரி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்களான கே எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல், ஆர். நடேஜன், என். எம். பாலசாமி ஆகியவர்கள் பேசினார்கள். தோழர் கே ஜெயராமன் அவர்கள் வந்தனங் கூற 8மணிக்குக் கூட்டம் கலைந்தது. உடனே தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம், எஸ். ஏ. அய்யாசாமி அவர்களோடு காரில் புறப்பட்டு சேலத்தில் மெயிலேறி அன்றிரவே சென்னை கருப்புறப்பட்டார்.

மாணவர் கூட்டம்

5-2-34 மாலை 4-30 சேலம் முனிசிபல் காலேஜ் மாணவர் வாக்குவாத சபையின் ஆதரவில் தோழர் ஏ. கனேசசங்கர் பி. ஏ. பி. எல்., அட்வகேட் அவர்கள் தலைமையில் கல்வி என்னும் பொருள் பற்றி ஓர் ஆங்கில உபன்யாசம் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு மணிநேரத்திற்கு மேலாகப் பேசினர். தலைவர் முடிவுரையில் பிரசங்கம் செய்தவர் மிகுந்த ஆராய்ச்சியோடு அழகாகப் பேசியதாகக் கூறினர். ஷை சங்கக் காரியதரிசி எஸ். ஏ. குருநாதன் வந்தனம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

சமதர்மிகள் சுற்றுப்பிரயாணம்.

தமிழ் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுயமரியாதைச் சங்கங்களையும் சமதர்மச் சங்கங்களையும் சோசியலிஸ்ட்லீக்ஸ் Socialist Leagues களையும் நேரிற்பார்த்து ஷை சங்கங்கள் சரிவர நிறைவேறுமாறு யோசனை கூறுவதற்கு தோழர்களான எம். சிங்காரவேலு பி. எ. பி எல். இராமனுதன் எம். ஏ. பி. எல். இவர்கள் தோழர் எம். கே. அழகப்பாவுடன் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வதறகாக ஏற்பாடு செய்து வருகின்றபடியால் அந்தந்த சங்கங்களின் காரியதரிசிகள் தாங்கள் செய்துவந்த வேலைகளைக் குறித்தும், தங்கள் சங்கங்களின் அங்கத்தினர்களைக் குறித்தும் தயார் செய்து வைக்கவேண்டுமெனக் கோரப்படுகின்றது.

சுற்றுப்பிரயாணத்தில் நாளிது பிப்ரவரி மாதம் 20 திகதி சென்னையை விட்டுப் புறப்பட்டு வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், சேலம் ஈரோடு, கோயமுத்தூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, பொன்மலை, தஞ்சாவூர், மன்னார்குடி, நாகபட்டணம், மாயவரம், கும்பகோணம், கூடலூர் காஞ்சிபுரம் முதலிய இடங்களைப் பார்த்துவரஉத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சுற்றுப்பிரயாண ஏற்பாட்டுக்குத் தக்கபடி அந்தந்த சபையார்கள சுற்றுப்பிரயாணிகளை அங்கங்கு வரவழைத்து அங்கத்தினர்களைக் கூட்டி இனி நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி யோசிக்கலாம்.

மேற்கண்ட சுற்றுப்பிரயாணம் 10, 15 நாட்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டியதிருப்பதனுல், காலதாமதம் செய்யாது சுற்றுப்பிரயாணிகள் வந்தவுடன் தாங்கள் யோசிக்க வேண்டியவைகளையோ வேறு கிராமணத் திட்டத்தையோ? வேண்டியவைகளை முடித்துக்கொள்ள வேண்டியது. பொதுச் சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டுமானல் பிரயாணிகள் வரும்திகதிகளில் வைத்துக்கொள்ள வேண்டியதுடன் பிரயாணிகட்கு வேண்டிய சௌகர்யங்களையும் செய்து கொடுக்க வேண்டுமாகஅந்ததந்த சபையார்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிரயாண நிகழ்ச்சிக் குறிப்புகள் பின்னர் வெளியிடப்படும். (ஒரு நிருபர்)

மரணம்.

நாகை சுயமரியாதைசங்கத்தலைவர் தோழர் எஸ். பி. கிருஷ்ணனின் தந்தையார் தோழர் பெரியசாமி அவர்கள் சென்ற 2-2-34 வெள்ளி இரவு 8மணிக்கு 77 வயதில் தனது இலலத்தில் தேக வியோக மானார். மறுநாள் பகல் 1மணிக்கு பிரேததகனக்கிரியை நடந்தது. சுயமரியாதைத் தோழர்கள் பலரும் பிற பிரமுகர்களும் வந்திருந்தார்கள். (ஒரு நிருபர்)

பொன்மலை சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

காந்தி பகிஷ்காரம்.

5-2-34 தேதி மாலை 5-30 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நாகை தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்கள் தலைமை வகிததார். அவ்வமயம் புதுக்கோட்டை தோழர் கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். எம். எல். சி, அவரது மனைவியார், திருச்சி தோழர் எஸ். நீலாவதி அம்மையார் முதலியவர்கள் காந்திபகிஷ்காரம் என்பதுபற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்கள். எல்லாத்தோழர்களும் உற்சாகத்துடனும், அமைதியாகவும் கேட்டுக்கொண்டிருந்தனர். இக்கூட்டத்திற்கு சுமார் 600 தோர்களுக்கு மேல் விஜயம் செய்து இருந்தனர். இதற்கு திருச்சி தோழர்களான ச. ம. சி. பரமசிவம், சம்பந்தம் இன்னும் மற்ற சுயமரியாதைத் தோழர்களும், கிராமவாசிகளும் விஜயம் செயதிருந்தனர்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) தோழர் காந்தியார் இப்பகுதிக்கு தீண்டாமை சாக்கில் இந்து மத வருணச்சிரமப் பிரசாரம் செய்ய வருவதையும், உயர் ஜாதிக்காரர் பிழைப்புக்கு தீண்டாமையின் பேரைச் சொல்லிக்கொண்டு பணம் திரட்டுவதையும் இக்கூட்டம் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(2) பொன்மலை தொழிலாளரில் ஒருவரான தோழர் டேவிட்சன் அவர்கள் 31.1-34 தேதியன்று அகால மரணமானதைக் குறித்தும், பூவாளூரில் தோழர் அ. மாணிக்கம் அவர்கள் அகால மரணம் ஆனதைக் குறித்தும் இக்கூட்டம் அனுதாபம் தெரிவிக்கிறது.

(3) தோழர் ஈ. வெ. ரா. அவர்களையும், தோழர் சா. ரா கண்ணம்மாள் அவர்களையும் சிறைப்படுத்தியதற்கு இக்கூட்டம் வருந்துகிறது.

(ஒரு நிருபர்)

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றததின் கூட்டமொன்று 11-2-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு 221 தங்கசாலை வீதியில் தோழர் டி. ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர் உ. லூயிஸ் அவர்களால் கீழ்காணும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

தீர்மானம்.

இக்கூட்டம் பம்பாயிலிருந்து வெளியாகும் "பகுத்தறிவு" பத்திரிகை ஆசிரியர் மீது கத்தோலிக்கர்களால் தொடரப்பட்ட வழக்கை விசாரித்து முடிவு கூறிய கனம பம்பாய் பிரதம மாஜிஸ்டிரேட் அவர்கட்கு நன்றியைச்செலுத்துகிறது.

(ஒரு நிருபர்)

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

ஒருவருக்கு நஷ்டம் நஷ்டம் தானே.

9. கேள்வி:- நீங்கள் கூட்டுறவு ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசிய மென்பதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? அப்படியானால் சுயராஜ்யமடைவதற்கு சாதனமாக நீங்கள் கையாளும் க்தர்த்திட்டம் அத்தகைய கூட்டுறவை நிலை நாட்டக்கூடியதா?

பதில்:- ஆம். கூட்டுறவு நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசிய மென்பதையும் கதர்த்திட்டம் கூட்டுறவையே; அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என் அபிப்பிராயம்.

10, கேள்வி:- உலகத்தில் ஏற்படும் யுத்தங்களின் மறைவிற்கு என்ன செய்யவேண்டும். தேசிய உணர்ச்சி என்ற தன்மை தான் யுத்தத்திற்கு மனிதனைத் தூண்டுகின்றதென்ற உண்மையை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

பதில்:- ஆம். யுத்தங்களெல்லாம் ஒழிய வேண்டுவது தான். ஆனால் தேசிய உணர்ச்சி மனிதனுக்கு இருக்க வேண்டுவது தான்.

10. (a) கேள்வி:- தாங்கள் பொதுவுடமைத்திட்டத்தை வெறுக்கின்றீர்களா? அப்படியானால் இந்தியாவிற்கு எத்தகைய ஆட்சி முறை வேண்டுமென்பது உங்கள் அபிப்பிராயம்.

பதில்:- நான் பொதுவுடமையை வெறுப்பவன் என்று நீங்கள் கூறுவது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. என் நண்பர்கள் பலர் என்னைப் பொதுவுடமைக் காரனென்று கேலியும் செய்கிறார்கள்! உண்மையிலேயே நான் ஒரு பொதுவுடமைக் காரனே! ஆனால் பொதுவுடமைக்காக பலாதகார முறையைக் கையாள வேண்டுமென்பது என்கொள்கைக்கு முரண்பட்டது. இந்தியாவுக்கு பொதுவுடமைத் திட்டமே அவசியமானதென்பதை நான் மறுப்பதற்கில்லை.

11. கேள்வி:- வட்ட மேஜை மகாநாட்டில் இந்தியாவின் ஏக ஜன நாயகத்தலைவர் தாங்கள் தான் என்று கூறிய நீங்கள் இந்தியாவில் ஒரு பகுதியினராகிய இந்துக்களுக்கு மட்டும் உழைப்பதின் நோக்க மென்ன?

பதில்:- நான் இந்து வானதினால் முதலில் என்மதத்தைப் பரிசுத்தப் படுத்த வேண்டுவது என் வேலை என்று நினைக்கின்றேன். இக்காரியம் முடிந்து விடுமேயானால் மற்ற மதங்களைப் பற்றியும் கவலை எடுத்துக்கொள்வதில் ஆட்க்ஷேபணையில்லை. மற்ற மதங்களையும் சீர்திருத்தப் பல மற்ற மதத்தலைவர்கள் தயாராய் இருப்பதாகவும் எனக்கு கடித மெழுதியிருக்கிறார்கள். அவர்கள் காரியங்கள் கைகூடுமானால் எனக்கு மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

12. கேள்வி:- நீங்கள் அடிக்கடி உங்களுடைய கோரிக்கையைமாற்றிக்கொள்கிறீர்களென்பதையும் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. என்பதையும் ஒப்புக்கொள்ளுகின்றீர்களா?

பதில்:- இல்லை. நான் என் கொள்கையை மாற்றிக் கொண்டதாகவோ மாற்றிக்கொள்ள வேண்டியதாகவோ என்றும் ஏற்பட்டதில்லை. என்றும் என்கொள்கை ஒரே கொள்கை தான்.

12. (a) கேள்வி:- சுயராஜ்யம் வந்த உடனேஒரு சட்டத்தின்மூலம் தீண்டாமையை இந்த நாட்டை விட்டு அடியோடு ஓட்டி விடக்கூடுமென்று கூறிய நீங்கள் இன்றுதீண்டாமையை நீக்குவதற்கு வேறுமார்க்கத்தைக் கையாள நினைத்து, வருவது எதனால்?

பதில்:- அப்பொழுது நான் நினைத்த அது சரி. இப்பொழுது இருக்கும் இந்த நிலைக்கும் நான்கையாளும் முறை சரி.

13, கேள்வி:- கடவுளிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கின்ற நீங்கள் பல காரியங்களிலும் தோல்வி யடைந்தீர்கள் என்பது உண்மை தானே? இல்லையானால் வட்ட மேஜைமகாநாட்டிலும், தண்டி உப்பு சத்தியாக்கிரகத்திலும் நீங்கள் அடைந்தது தோல்வி என்பதை நீங்கள் மறக்கின்றீர்களா?

பதில்:- தோல்வி என்பதையே நான் அறியேன் நான் வட்டமேஜை மகாநாட்டிலும் தண்டி சத்தியாக்கிரகத்திலும் தோல்வி யடைந்தேன். என்பதை நீங்கள் நிரூபிக்க முடியுமா?

13. (a) கேள்வி:- வட்டமேஜை மகநாட்டில் தாங்கள் தோல்வி யடையவில்லை என்றால் எர்வாடா ஜெயிலில் உயிர் விடுவேனென்று உண்ணாவிரதம் இருந்தது எதற்கு?

பதில்:- என் தோல்வியைக் குறித்து நான் உண்ணாவிரத மிருக்கவில்லை. தோழர் ராம்சே மாக்டொனல்ட் அவர்கள் தனித்தொகுதி திட்டத்தைப்போக்கவே உண்ணாவிரதமிருந்தேன். நான் வட்டமேஜை மகாநாட்டில் தோல்வியுற்றேன். என்று கூறுவதிற்குப் பதிலாக நான் வெற்றியடைந்தேன் என்றும் என்னை வட்டமேஜை மகாநாட்டினர் நன்கு பயன் படுத்திக் கொண்டார் என்றும் கூறுவீர்களானால் அது மிக்கப் பொருத்தமுடையதாயிருக்கும்.

மேற்கண்டகேள்விகளைக்கூறிதோழர் காந்தியாரிடம் வந்தனம் பெற்றுத திருப்புகையில் அவர் கூறியதாவது:- தோழர்களே என்னிடம் இதுகாறும் வார்த்தை யாடியதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உஙகளுக்குப்போதிய நேரம் அளிக்கப்பட்டதால் நீங்கள் திருப்தி அடைந்திருப்பீர்களென்று நம்புகிறேன். என்னை எத்தகைய கேள்விகள் கேட்பதற்கும் உரிமையிருப்பதோடு, அதற்குப்பதில் சொல்லநான் கடமைப்பட்டிருக்கிறேன். என்பதை நான் நன்கு உணருகிறேன்.

நீங்கள் கேட்ட கேள்விகளும், நான் அதற்கு விடுத்த பதில்களும் ஒருபுறமிருக்க, தீண்டாமை என்ற பேயை இந்நாட்டிலிருந்து ஓட்டுகின்ற வகையில் சுயமரியாதையுள்ள வாலிபர்களும், பெண்களுமாகிய நீங்களும், நாங்களும் ஒரே நிலையிலிருக்கிறோம் என்ன பாடு பட்டும் தீண்டாமையை ஒழிப்பதற்கு நீங்கள் முன் வாருங்கள் என்று நான் உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன். இதே வேண்டுகோளைத்தான் நான் மதுரை, கொல்லம் முதலிய சுயமரியாதை நண்பர்களிடம் தெரிவித்தேன். அவர்களும் விருப்பத்திற்கு இணங்குவதாக கூறினார்கள். நீங்களும் இவ்வாறு செய்வீர்களென்று நம்புகின்றேன்.

கீழ ஈரால்.

தோழர் தங்கவேல் ஷண்முகம் அவர்கள் தலைமையில் சமுதாய சீர்திருத்தச் சங்கத்தின் அவசரக்கூட்டம் ஒன்று நடைபெற்று அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

27, 28-1-34ல் நடைபெற்ற கோவிற்பட்டிதாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டை நடத்தி வைத்த தோழர் கரு. நா. மு. வெ. பொன்னுசாமி அவர்கள் பொதுஜன ஒத்துழைப்பை உண்டுபண்ணி மகாநாட்டை வெற்றிகரமாய் நடத்திவைத்ததற்காகவும், இராஜா ஸ்கூல் கமிட்டியார்கள் மகாநாடு நடைபெறுவதற்கு வேண்டிய இடவசதியை அழித்ததற்காகவும் அன்னவர்களைப் பாராட்டுகிறது.

சமதர்ம இயக்கத்தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் சகோதரர் மாணிக்கம் அவர்கள் அகால மரணத்தையறிந்து வருந்துவதுடன் எங்கள் அனுதாபத்தை அவர்கள் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

தூத்துக்குடியிலுள்ள நமது கிளைச் சங்கத்திற்கு ஊக்கமூட்டி இயக்கத் தோழர் பலரை அழைத்து வந்து மகாநாட்டைச் சிறப்பித்த தோழர் வைகுண்டம் அவர்களைப் பாராட்டுகிறது.

திருச்செங்கோடு.

9-2-34 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சங்கோடு உண்மை நாடுவோர் சங்கத்தின் ஆதரவின் கீழ் நாற்பதுகால் மண்டபத்தின் முன்னுள்ள மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்தில் "காந்தியமும், சமதர்மமும்" என்னும் பொருள்பற்றி தோழர்கள் ப. ஜீவானந்தம், எல். வி. லிங்கம், ஆர். நடேசன் முதலியவர்கள் அறிய சொற்பொழிவாற்றினார்கள். கூட்டம் இரவு 9-மணிக்குக் கலைவுற்றது. கூட்டத்தில் சில விஷமிகள் கல் எறிந்தும் கூட்டம் கலையாமல் கடைசி வரையும் உறுதியுடனிருந்தது குறிப்பிடத்தக்கது.

சூலூர் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

மதம் ஒழிப்புப்பிரசாரம்.

இவ்வூர் சுயமரியாதை இளைஞர் சங்கத் தோழர்கள் சி. எஸ். அங்கப்பா, கே. கிருஷ்ணன், எஸ். பி. கருப்பணன், எஸ். டி. சம்பந்தம் முதலானவர்கள் 24, 25, 26-1-34 தேதிகளில் காலை 6 மணியிலிருந்து 7 மணி வரையும், மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரையும் தாழ்த்தப்பட்டவர்களின் சேரிகளில் மதம் ஒழியவேண்டுமென்று பிரசாரம் செய்ததுடன் நூற்றுக்கணக்கானவர்களிடம் எங்களுக்கு மதம் வேண்டாம், ஹரிஜனப்பட்டம் வேண்டாம், பொருளாதார சமதர்மமும், உழைப்புக்குத் தக்க ஊதியமுமே வேண்டுமென்று அச்சிட்டிருந்த பாரத்தில் கையெழுத்து வாங்கினார்கள்.

சமதர்மக்கீதப் பாட்டுக்கச்சேரி.

29-1-34 தேதி மாலை 6 மணிக்கு இவ்வூர் சுயமரியாதை வீரர் தோழர் யு. கே. நஞ்சப்பா அவர்களின் கட்டிடத்தில் சங்கீதத்திலகம் ராஜபார்ட் தோழர் எஸ். கே. முத்தப்பா அவர்கள் கேட்போர் மனதில் சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் பசுமரத்தாணிபோல் பதியுமாறு ராகதாளங்களோடு, பக்க மேளங்களோடும் மிக உருக்கமாகப்பாடி மகிழ்வித்தார். தோழர்கள் எஸ். எல்.எஸ். மணியம், யு. கே. நஞ்சப்பா, கே. கிருஷ்ணன், அங்கப்பா, கருப்பணன், கந்தசாமி முதலானவர்களும் நூற்றுக்கணக்கான ஆண் பெண்களும் குழுமியிருந்து இரவு 8 மணி வரையும் இருந்து கலைந்து சென்றார்கள்.

தோழர்கள் ஈ. வே. ராமசாமி, சா. ரா. கண்ணம்மாளுக்கு பாராட்டுக்கூட்டம்.

3-2-34 தேதி மாலை 5 மணிக்கு சுயமரியாதை இளைஞர் சங்கமெம்பர்களின் கூட்டமொன்று மாரியம்மன் கோவில் கட்டிடத்தில் தலைவர் தோழர் எஸ். எல். மணியம் அவர்கள் தலைமையில் கூடியது.

சமதர்மப்பிரசாரஞ் செய்ததற்காக சிறை சென்ற தோழர்கள் ஈ. வெ. ரா. அவர்களையும், கண்ணம்மாள் அவர்களையும் இச்சங்கம் பாராட்டுகிறதென்றும், லக்ஷக்கணக்கான மக்களை மதத்திலிருந்து விடுதலையடையச் செய்த வீரர் தோழர் ஒ. சி. சீனிவாசன் அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்ட மரணத்தைப்பற்றி இச்சங்கம் மிகத் துக்கமடைகிறதென்றும், சுயமரியாதை இயக்கத் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களின் சகோதரர் அ. மாணிக்கம் அவர்கள் மரணமடைந்தமைபற்றி வருந்துவதுடன் சகோதரரை இழந்த தோழர் பொன்னம்பலம் அவர்களுக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேறி கலைந்தது.

(ஒரு நிருபர்)

[4-ம்பக்கத்தொடர்ச்சி]

விருக்கும் போபபுகூட இப்படிப் பேசத் துணியமாட்டார்.

ஆகையால்தான் உலக முன்னேற்றம் படிப்படியாகத்தான் ஏற்படவேண்டுமென்று நான் பூரணமாய் நம்புகின்றேன். சரியான முன்னேற்றம் சற்று பொருமையுடனும், சற்று மெதுவாகவும், சற்று சப்தமில்லாமலும் ஏற்படும். ருஷியாவைப் பின்பற்ற பலருக்கு இருக்கும் ஆசை, சீக்கிரம் இக் கஷ்டங்கள் நிரம்பிய மாற்ற வேண்டும் என்பதாலும், கரகோஷத்துடன் உலகை சீர்திருத்தவேண்டும் என்ற புத்தியால் ஏற்படுகின்றது. ஆனல் அது முடியாத காரியம். ருஷியாவிலேயே இப்பொழுதுதான் புள்ளிவிவரங்கள் தெளிவாய் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றன. பல காரணங்களால் அவர்கள் நினைத்ததை நடத்த முடியவில்லை.

தோழர் நியரிங் சொன்னது போல் பெரும் புயல்காற்றுகள் நம் நாகரீகத்தைத் தாக்கினல், ருஷ்யாவைப்போல் போல்ஷ்விக் காரர்கள் கையில் நம் தேசங்கள் அகப்படா. பொது உடமையாவது, முதலாளித்வமாவது உயிருடனிருக்க முடியாது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த ஸ்திதிக்கு ஐரோப்பாவும், அமெரிக்காவும் வந்துவிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை. நம்மில் சிலர் அம்பும், வில்லும் வைத்துக்கொண்டு பறவைகளையும், மிருகங்களையும் கொன்று தின்று கொண்டு வாழ்வர்.

ருஷியா புத்துயிருடன் எழுந்ததற்குக் காரணம் மற்ற தேசங்கள் ஒருவாறு அத்யாவசிய சாமான்களைச்சிறிது காலத்திற்கு உதவியதால்தான் இவ்வுதவி மிகவும் கொஞ்சமென்று ரஸ்சல் ஒப்புக்கொள்கின்றார்.] நாகரீக தேசங்களெல்லாம் ஓர் பெரும் யுத்தத்தில் கலந்து ஒருவரையொருவர் மாய்த்துக்கொண்டால் யார் இவர்களுக்கு உதவி புரிய முடியும்?

ஆம். இரண்டாயிர வருட முன்னேற்றத்தைச் சில பைத்தியம் பிடித்த அசடுகள் நாசமாக்க நாம் விட்டிருக்கின்றோம். கரகோஷத்துடன், பார்க்க கண் பறிக்கத் தக்க விமரிசையுடன், வெகு சீக்கிரம் முன்னேற்றமடையும் காலத்தைநாம் தாண்டிவிட்டோம். தற்பொழுது சிறிது, சிறிதாக அவசரமில்லாமல் நாம் மனித வாழ்க்கையை மேம்படுத்தவேண்டும். அதுதான் என் கொள்கை.

மதுரை நாடார் மஹாஜன சங்கம்.

கவுன்ஸில் மீட்டிங்கு.

4—2—34௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு சங்கம் ஆபீஸில் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் தூத்துக்குடி, முனிஸிபல் கவுன்சிலரும், துறைமுகச் சபையின் சங்கத்தினருமான, தோழர் கே. கே. ஏ. பெரியசாமி நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் அடியிற்கண்ட சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றது.

1. 1933 ௵ டிசம்பர்-௴ 1௳ முதல், இரண்டு மாதத்திய வரவு செலவு கணக்குகளை வாசித்து ஒப்புக் கொள்ளப்பெற்றது.

2. சங்கத்தின் அடுத்த வருடாந்தர ஜெனரல் மீட்டிங்கு வரை நாமினேஷனில் கவுன்ஸில் மெம்பர்களாக தேர்ந்தெடுக்கப்பெற்றது.

தோழர்கள், நா. சு வி. சுப்பையா நாடார் அவர்கள் மதுரை, எஸ். வி. ராமலிங்க நாடார், அ. சி. வே. சிதம்பர நாடார், வ. மு. கந்தசாமி நாடார், கே. சி. டி. குருசாமி நாடார், வே. அ. சிதம்பர நாடார், கே. எம். ஏ. வி. ஷண்முக நாடார், கே. பி. சங்கரலிங்க நாடார், டி. சி. கே. மாரியப்ப நாடார் விருதுநகர், வி. முத்திருள நாடார் திருப்புவனம், வி. எம். வி. சுப்பையா நாடார் வத்திராயிருப்பு.

பாரிஸ்டர் தோழர் எஸ். பி. ஆதித்த நாடார் எம். ஏ. அவர்களிடமிருந்து காரைக்குடியிலிருந்து வந்த 1-2-34௳ லெட்டரை வாசிக்கப்பெற்று கீழ்கண்டவாறு தீர்மானிக்கலாயிற்று.

சென்னையில் நடைபெற்ற நாடார் மஹாஜன சங்கம், 14-வது காண்பரன்ஸின் வரவுசெலவில் மீதிய தொகை ரூ. 809—1—2ஐ வட்டியுடன் உடனே அனுப்பித்தர வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பி அதன்படி பணம் வராதபக்ஷத்தில் கோர்ட்டில் பிராது தாக்கல்செய்து வசூல் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது.

ஏழைமாணவர்கள் காலர்ஷிப் 3-வது லாட்டரியின் டிக்கெட் விற்பனை பிரசாரத்திற்காக 700-ரூபாய்க்குள் ஒரு பிளஷர்கார் வாங்கவும்.

10-6-34௳யில் லாட்டரி பிரைஸ் எடுப்பதற்கு ஹேதுவாக டிக்கெட் விற்பனைசெய்ய கமிட்டியும் நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

நமது குலப்பெண்கள் குடிசைக் கைத்தொழில் சம்பந்தமான தையல் பின்னல் முதலிய தொழில்களை கற்றுக்கொள்வதற்கு அவசியமான நான்கு இடங்களில் மாதம் 1-க்கு 15-ரூ யக்கு மேற்படாமல் கிராண்டு கொடுத்து சங்க மேற்பார்வையில் அத் தொழில்களை நம் குலப்பெண்மக்களுக்குக் கற்றுக்கொடுக்க உதவி செய்வதென்றும்,

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள முக்கிய நகரங்களுக்குப்புதிய அங்கத்தினர்களைச் சேர்த்தல் முதலியன.

பின் இரவு 10-30மணிக்கு வந்த ஜேப்சார்த்துடன் மீட்டிங்கு முடிவு பெற்றது.

P. S. சிதம்பர நாடார்,
A. A. ஆறுமுக நாடார்,
பொதுக் காரியதரிசிகள்.

மதுரை

சுயமரியாதை வாலிபர் சங்கம்.

டை சங்கத்தினுதரவில் 31-1-34 புதன்கிழமை மாலை 6-மணிக்கு சங்க கட்டிடத்தில் தோழர் எம். பாண்டியன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

சுயமரியாதை இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களையும், அவரது சகோதரி தோழர் சா. ரா. கண்ணம்மாள் அவர்களையும் அரசாங்கத்தார் சிறைப்படுத்தியது எத்தன்மையதாயினும், எவ்விதஎதிர்ப்புக்கும் அஞ்சாது உண்மையை உறைத்து வீர உணர்ச்சியுடன் சிறை சென்றதற்காக அவர்களைப் பாராட்டுகிறது.

சுயமரியாதை இயக்க தீவிர உழைப்பாளியும், வீரருமானதோழர் ஓ. சி. சீனிவாசன் அவர்களின் அகாலமோரணத்திற்குவருந்துவதுடன். அவர் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

கொள்ளபட்டி

ஆதித்திராவிட வாலிப சங்கத்தின் முதல் மகாநாடு.

2-2-34ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு சேலம் வக்கீல் தோழர் கே. வி. சுப்பராவ் பி. ஏ. பி. எல்., அவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஆண்களும், பெண்களும் சுமார் 500க்கு மேல் குழுமியிருந்தார்கள் பின் தோழர்களான உஞ்சனை கே. மாரிமுத்து, கூத்தம்பூண்டி ஆர் வருதப்பன் இவர்களால் ஆதித்திராவிடர்களின் சுதந்திர கீதம் பாடப்பட்டு தோழர்கள் ஏழுர் முத்து, மரப்பரை கே. குப்புசாமி, மல்லசமுத்திரம் உதவி உபாத்தியாயர் ஏ. அருணாசலம், சொக்கலே கே. எஸ். சுந்தரேசன், பி. ராமசாமி, கே. எஸ். கந்தசாமி இவர்களால் ஆதித்திராவிடர்களின் முன்னேற்ற விஷயமாய் அரியபெரிய சொற்பொழிவாற்றினர்கள். பின் அக்ராசனர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரங்கூறி பல தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறப்பட்டு கூட்டம் 8-30மணிக்கு கலைந்தது என எ. அருணாலமழுதுகிறார்.

புலியூரில் கூட்டம்.

11-2-34௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4½-முதல் 7-மணிக்குள் இராகுகால வேளையில் புதுக்கோட்டை சட்டசபை (EX.) அங்கத்தினரும், பல பொது ஸ்தாபனங்களில் உழைத்து வருமாகிய சம்தர்மத் தோழர் புலியூர் ஆர். எஸ் சிவம் அவர்கள் பலசரக்கு மண்டியை திருச்சி இந்தியஒளி பத்திரிகாசிரியர் ஜனாப் கே ஏ. அப்துல் ஹமீத் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதுசமயம் சிறைபட்ட தோழர் ஈ. வெ. ரா. அவர்களை பெரிதும் பாராட்டி பேசினர். அன்னரின் தலைமையில் சூரியூர் பொதுஜன ஊழிய சங்கக் காரியதரிசி தோழர் எம். பி. சாமி அவர்களும், சில அறிஞர்களும் சொற்பொழிவாற்றினர்கள்.

நெ. 16

மணமகன் தேவை.

16வயதுடையவரும், 5வகுப்பு வரை பயின்றவரும், சைவ வேளாளவகுப்பைச் சேர்ந்தவரும், மாநிறமும் தக்க உடலமைப்புமுடைய கன்னிப்பெண்ணுக்குமணமகன் தேவை.

மணமகன்:— 25வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் 25ரூபாய் சம்பாத்திய முடையவரும் வேளாளர், நாயுடு, ரெட்டியார் ஆகிய வகுப்பைச் சார்ந்தவரும், திடகாத்திர சரீர முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நெ. 17

மணமகள் தேவை.

21 வயதினையுடையவரும் ஹைபர் கிரேடும், தேகப்பயிற்சி டிரெயினிங்கும் பாஸ்செய்தவரும், ஹெட்மாஸ்டர் வேலையில்மாதவருவாய் ரூபாய் 25யுடையவரும், மாநிறமும் 5,6 அடி உயரமுள்ளவரும்மணமாகதவரும் கம்பீரத்தோற்றமுள்ள வருமான முஸ்லீம் சமதர்ம நாஸ்திக வாலிபருக்கு மணமகள் தேவை.

மணமகள்:—18வயதிற்குட்பட்டவராகியும் ஹைபர் கிரேட் பாஸ்செய்தவராகவோ அல்லது மருத்துவ டிரெயினிங் பாஸ் செய்தவராகவோ இருப்பவராயும் விதவை அல்லது கன்னியராகவும் எம்மதம் சாதியினராகவும் வனப்பினராயும் இருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் 0-1-3 தபால் தலைகளுடன் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

காரியதரிசி தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம் நெ. 22, வாணபஜார் உறையூர், (திருச்சி)

கோவை ஜில்லா சூலூரில் காந்தி பகிஷ்காரம்.

இவ்வூர் காங்கிரஸ்காரர்களால் 6-2-34ந் தேதி சூலூருக்கு காந்தி விஜயம் செய்வாரென்றும் சத்திரத்திற்குப் பக்கத்தில் பணமுடிப்புக் கொடுத்து வரவேற்கப்படுமென்றும் விளம்பர நோட்டீஸ் பொதுஜனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தபடியால் இவ்வூர் சுயமரியாதை இளைஞர் சங்கத்தாரால் தோழர் காந்தியைப் பகிஷ்கரிப்பதென்று 13-1-34-ந் தேதி தீர்மானித்திருந்ததற்கிணங்க 6-2-34-ந் தேதி மாலை தோழர் காந்தி வருகிறபோது கருப்புக் கொடி பிடிக்கவும், ஊரெங்கும் பகிஷ்கார விளம்பரம் நோட்டீஸ்கள் ஒட்டுவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்: 6-2-34-ந் தேதி காலை இவ்வூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்கள் சுயமரியாதைத் தோழர்களைக் கூப்பிட்டு கருப்புக் கொடி பிடித்தால் கூட்டத்தில் குழப்பம் உண்டாகுமென்று எச்சரித்து வேண்டாமென்று சொல்லியும் விளம்பர நோட்டீஸ்கள்மட்டும் ஊரெங்கும் குறிப்பிட்ட இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது. தோழர் காந்தியாருக்கு மிகச் சிலரால் கொடுக்கப்பட்ட பணமுடிப்பை துண்டு நோட்டீசில் தெரிவித்திருந்த இடத்தை மாற்றி ஊருக்கு சுமார் அரை மைலுக்கு அப்பால் கிழக்கே சென்று கொடுத்து இரண்டு நிமிஷத்திற்குமேல் நிற்க வேண்டாமென்று கோவைக்கு அனுப்பிவிட்டார்கள்.

தோழர் காந்தியாரைப் பார்க்க வந்திருந்த பெருந் திரளான ஜனங்களும், இவர் சங்கராச்சாரி போல் அதிகப் பணம் கொடுத்த இடத்தில்தான் தங்குவாரென்றும் பேசிக்கொண்டு சென்றார்கள். கூட்டத்திற்குப்போலீஸ் பந்தோபஸ்து ஒவ்வொரு இடங்களிலும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

புதுப்பாளையம் சமதர்மவாசகசாலை.

28-1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு தோழர் நாஸ்திக கே. கோபால்சாமி அவர்கள் தலைமையில் வாராந்திரக் கூட்டம் நடைபெற்றது. தோழர் பி. கிருஷ்ணன் அவர்கள் "தேசமுன்னேற்றம்" என்பதுபற்றிப்பேசினார். அதைப் பின்பற்றி தோழர்களான வி. தங்கவேலு, ஆர். வெங்கிடகிருஷ்ணன், ஏ. முத்துக்கிருஷ்ணன், கு, ஆறுமுகம், பி. ஆர். குப்புசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இரவு 8-30 மணிக்குக் கலைந்தது.

4-2-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு திருவருணை தோழர் என். சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் வாராந்தரக் கூட்டம் நடைபெற்றது. "இந்தியாவின் குறைபாடுகள்" என்பதுபற்றித் தோழர்களான வி. தங்கவேலு ஏ. முத்துகிருஷ்ணன், பி. கிருஷ்ணன், ஆர். சபாபதி, பி. ஆர். குப்புசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சுயமரியாதை இயக்க ஸ்தாபகராகிய தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், தோழர் எஸ். ஆர், கண்ணம்மாள் அவர்களையும் அரசாங்கத்தார் சிறைபடுத்தியதற்கு இக் கூட்டம் விசனிக்கிறது. சிறையிலிருக்கும் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, எஸ், ஆர். கண்ணம்மாள் இருவர்களையும் இக் கூட்டம் பாராட்டுகிறது.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 8-மணிக்குக் கலைந்தது.

சென்னை பகுத்தறிவாளர் கழகம்.

மேற்படி கழகத்தின் ஆதரவில் சென்ற ஞாயிறு 11-2-34 பிற்பகல் 4-மணிக்கு நாகை ஈ. திருஞான சம்பந்தம அவர்கள் தலைமையில் 221-தங்கசாலை வீதியில் ஒரு கூட்டம் கூடினபோது கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறினது.

இக் கூட்டம் பிரபல பத்திரிகாசிரியரான தோழர் அ. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் மரணமுற்றதைக் குறித்து வருந்துவதுடன்; மேற்படி வருத்தத்தை அவர் குடும்பத்தினருக்கும் ஹிந்து சொந்தக்காரர்களுக்கும் தெரிவிக்கின்றது.

பிறகு தோழர் கே எஸ். நாதன் அவர்களால் சென்னை பகுத்தறிவாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதின் அவசியத்தையும், உலகெங்கும் பகுத்தறிவாளிகள் நாளடைவில் பெருகதுவருவதைக் குறித்தும் இளைஞர்கள் ஏன் பகுத்தறிவு இயக்கங்களில் கலந்துகொண்டு தொண்டாற்றவேண்டுமென்பதையும் பகுத்தறிவுப் பத்திரிகைகள் பல பாஷைகளில் பெருகவேண்டியதின் அவசியத்தைக் குறித்தும் பேசியபின்னர் கூட்டம் சுமார் 5- மணிக்குக் கலைந்தது.

(ஒரு நிருபர்)

திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

10-2 34 சனிக்கிழமை மாலை 5மணிக்கு ராமனாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் ஆலோசனைக் கூட்டம் தென்மாப்பட்டு சமதர்மச் செந்தமிழ்க் கலாசாலையில் தோழர். அ. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது. பல அங்கத்தினர்கள் குழுமியிருந்தனர். மகாநாட்டை மார்ச்சுமாத முதல் வாரத்தில் திருப்புத்தூரில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஒரு நிருபர்)

சுயமரியாதைத் திருமணங்கள்.

ஈரோட்டில் கத்தோலிக்கர் சுயமரியாதைத்திருமணம்.

சென்ற 3-2-34ந்தேதி மாலை5-30 மணிக்கு திருச்சி தோழர் எஸ். பிச்சைமுத்து அவர்களின் புதல்வி தோழர் பி. செல்லம் மாளுக்கும், திருச்சி தோழர் ஆரோக்கியசாமி அவர்களின் புதல்வர் உண்மை நாடுவோர் வாசகசாலை காரியதரிசியுமான தோழர் எ.எல் இருதயராஜனுக்கும் ஈரோடு சுயமரியாதைச் சங்கக்கட்டிடத்தில் ஷை சங்கத்தலைவர் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இவ்வொப்பந்த நிகழ்ச்சியைக் காண்பதற்கு ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். உள்ளூரிலிருந்த கத்தோலிக்க வாலிபர்களும், திருச்சியிலிருந்து பல கத்தோலிக்க ஆண்களும், பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமாக தோழர்கள் பி- பிச்சையப்பன், பி- ஏ- யோவான் முதலியவர்களாகும்- மணமக்கள் இருவரும் தங்கள் ஒப்பந்ததைச் சொல்லி மாலை மாற்றிக்கொண்டதுடன், தங்களிருவருக்கும் தங்கள்மதமாகியரோமன் கத்தோலிக்மதத்தில் நம்பிக்கை இல்லையென்றும் தாங்கள் சுயமரியாதைக் கொள்கையை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வதாக ஒரு அறிக்கை முன்பே எழுதிக் கொடுத்திருந்தார்கள். பின்தோழர்கள் எ. இராகவன், எஸ். வி. லிங்கம், ஈ. பி வெங்கிடாசலம், டி. என் ராமச்சந்திரன் முதலியவர்கள் திருமணத்தை ஆதரித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

(ஒரு நிருபர்)

மதுரை.

மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகாவிலுள்ள கொட்டாணிப்பட்டி கிராமத்தில் 4-2-34 பகல் 12-30 மணிக்கு தோழர் நடேசன் அவர்களுக்கு சுயமரியாதைத் திருமணம் நடந்தது. அதுசமயம் "சுயமரியாதைத் தத்துவங்கள்" என்பது பற்றி பட்டுக்கோட்டை தோழர் டி. வி. டேவிஸ் பி. ஏ. அவர்கள் 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்; சுற்றத்தார் மற்றவர்களின் எதிர்ப்பிற்கிடையில் சுயமரியாதை மணம் இனிது நிறைவேறக்காரணமாயிருந்தவர் முத்துராமலிங்கபுரம் தோழர் எஸ். வி. சுப்பையா அவர்களாவார்கள். திரளான நண்பர்களும், ஏனையோரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னை.

சென்னை சிந்தாதிரிப் பேட்டைப் பாலகிருஷ்ணன் பிள்ளை தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆதிலக்ஷிமி கொட்டகையில் தோழர் ம. மதுரைக்குமாரன் ம. கெங்காதரத்திற்கும் தோழர் தணிகாசலம் குமாரத்தி டி. மகாலக்ஷிமிபாய்க்கும் சுயமரியாதைத்திருமணம் 11-2-34 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடந்தேறியது. சுமார் ஆயிரம் தோழர்கள் வரையில் வந்திருந்தார்கள். அதில் முக்கியமான தோழர்கள் டி. வி. சுப்பிரமணியம், எஸ். குருசாமி பி. ஏ., பண்டிட் திருஞான சம்பந்தம், பார்த்தசாரதி, நடேசன், வித்வான் வி. ஏ. முனுசாமி, பி. வரதராஜ பாகவதர், வி. வி. முருகேசபாகவதர், எஸ் பி. ஐ பாலகுருசிவம், டி. சுந்தரராவ் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அமிர்தவாசகம் முதலியவர்கள். நோட்டீசில் குறிப்பிட்ட பிரகாரம் தோழர் ம. சிங்காரவேலு தலைமை வகிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவர் திடீரென உடம்பு ஆசௌக்கிய மேற்பட்டதினால் தோழர் பண்டிட் என். முனுசாமி தோழர்பார்த்தசாரதியை தலைமைவகிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அதன்பிறகு டி. வி சுப்பிரமணியம் அவர்களைத் திருமணத்தை நடத்துமாறு தலைவரவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டார். மண நிகழ்ச்சி முடிந்தது. அதன் பிறகு எஸ். குருசாமி முதலியவர்கள் திருமணத்தைப் பற்றியும், சுயமரியாதைத் தத்துவங்களைப்பற்றியும் விரிவாக எடுததுக் காட்டினார்கள். பின்னர் தலைவர் முடிவுரை கூறி பகல் பன்னிரண்டு மணிக்கு விருந்து நடந்தது. அன்றைய இரவு 9 மணிககு தோழர் வி. வி சி. முருகேசபாகவதர் சமதர்ம கீதமும், உபந்யாசமும் நடைபெற்றது என எ. எ. கபால்மூர்த்தி எழுதுகிறார்.

நாகை.

9-2-34ந் தேதி இரவு 8 மணிக்கு நாகை அக்கரை குளம் ரோடு தோழர் எம். ரங்கசாமி அவர்களின் இல்லத்தில் தோழர்கள் ரெத்தினத்திற்கும் உடையப்பா அவர்களுக்கும் சீர்திருத்ததிருமணம் தோழர் எஸ். முருகேசம் அவர்கள் தலைமையின் கீழ் நடந்தேறியது.

அவ்வமயம் தோழர்கள் வி. சாமிநாதன், எஸ். பி. கிருஷ்ணன், கே. எஸ். முஜிபுல்லா, எம. ஆர். பதி ஆகியவர்கள் சீர்திருத்தத்திருமணத்தின் அவசியத்தைபபற்றிப்பேசினார்கள். வந்திருந்த தோழர்களுக்கு வெத்திலை சந்தனம் முதலியன வழங்கிய பின் திருமண வைபவம் இனிது முடிந்தது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

பொதுவுடமைத்தத்துவங்கள்.
விலை அணா 0—3—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னுட்ஷா.
விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
இதன் விலை அணா 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்தககாட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

கடவுள்.
(இங்கர்சாலின் சொற்பொழிவுகள்)

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 5.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—
பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.

இங்கிலீஷ்
குதிரைப்பந்தய
பரிசு டிக்கட்டுகள்

ம்யூட்சுவல்
டிஸ்டிரிப்யூஷன்ஸ்.

சுவிட்ஜர்லாந்துக்கு பக்கத்திலுள்ள லீச்டென்ஸ்டன் கவர்ன்மெண்டின் லைசென்ஸ் பெற்று கவர்ன்மெண்ட் பிரதிநிதி, போலீஸ் இவர்கள் மேற்பார்வையில் பத்திரிகை பிரதிநிதிகள், பொது ஜனங்கள் முதலியவர்கள் முன்னிலையில் நடைபெறுவது. 13-வருஷமாக நடைபெறுகிறது. வருடத்தில் மும்முறை மார்ச்சு, ஜூன், அக்டோபர் அல்லது நவம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறுகிறது.

ஒவ்வொரு சந்தாதாரருக்கும் டிக்கட் நம்பர் லிஸ்டு, தலைமை ஆபீஸ் ரசீது, டிராலிஸ்டு முதலியவை அனுப்பப்படும்.

டிக்கட் 1-க்கு விலை.	நடைபெறும் பந்தயத்தின் பெயரும், தேதியும்.	அடுத்த நிகழ்ச்சி.
ரூ. **4-0-0** 6க்கு ரூ. 20.	**கிரான்ட் நேஷனல்** லிவர்பூல் இங்கிலாண்ட் 23—3—34. டிக்கட்டிற்கு பணம் பெறும் கடைசி தேதி. 26—2—34.	**டெர்பி** 6—6—34.

1-வது, 2-வது, 3-வது பிரைஸ் வந்தவர்கட்கு தந்தி கொடுக்கப்படும்

ஓர் முக்கிய பத்திரிகையில் வெளியான விஷயம். (மொழிபெயர்ப்பு)

ஈவினிங் நியூஸ்.

லண்டன் செவ்வாய் 18—3—1931.

லண்டன் பட்டணத்தில் அதிர்ஷ்டப்பெண்.

தன்னுடைய வேலையை விட்டு வேற்றிகாணச் சென்றார்.

9,000 பவுனுடன் ஒரு புருஷன்.

அடியிற்கண்டது லண்டன்மா நகரத்தைச் சேர்ந்த கிளாப்பம் ஹாமன் தெற்கு பாகத்தில் வசிக்கும் "மிஸ். ரோசினா கத்திலீடவுட்" என்ற அதிர்ஷ்டப் பெண்ணின் சரித்திரம்:—

சுமார் 3-வருடத்திற்கு முன் லண்டனில் மேற்கண்ட மாது வேலைக்காரியாகவிருந்தார். பிறகு உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடன் தன் வேலையை விட்டு தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். செல்லும்போது கையில் 50-பவுன் முதலுடன் சென்றார். சென்றதும் அங்கு ஓர் வேலை கிடைத்தது. பிறகு அங்கு வசிக்கும்போது ருடீசியா தேசத்தில் சாலிஸ்பரி பட்டணத்தில் வசிக்கும் ஓர் கணக்குவேலை பார்ப்பவர்மீது காதல் கொண்டு அவரை மணக்க நிச்சயித்தார். மணம் செய்து கொள்வதற்குமுன் பெற்றோர்களைப் பார்த்துவர லண்டன் திரும்பினார். அப்போது அவர் கையிலோ 3 பவுன்தானிருந்தது. ஆனால் கப்பலைவிட்டிறங்கியவுடன் ஓர் மகிழ்ச்சி தரும் விஷயம் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தது. எப்படியென்றால் ஆப்பிரிக்காவிலிருக்கும்போது ம்யூட்சுவல் லிமிடெட் "மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப்" குதிரைப் பந்தய லாட்டரியில் ஓர் டிக்கட் வாங்கியிருந்தாள். அந்த டிக்கட்டிற்கு முதல் பிரைஸ் கிடைத்தது 9,000 டவுன் தனக்குக் கிடைக்கப்போகும் விஷயத்தை அறிந்து மகிழ்ச்சியடைந்தார். அவரை மணக்கப்போகும் புருஷனும் அதிர்ஷ்டசாலிதான். அவர்தான் டிக்கட் வாங்கிக்கொடுத்தவர். அவர் வாங்கிக் கொடுத்த டிக்கட் முதல் பிரைஸ் வந்ததால் அவருக்கும் 800 பவுன் கிடைத்தது. பிறகு மிஸ் டவுட் கலியாணம் செய்து கொண்டு ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய எத்தனித்து விட்டார். அவர் புருஷனும், இங்கிலாந்து தேசத்தையே கண்டிராதவராதலினால் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்பியைக்காண ஆவலாயினர்.

எல்லாவிடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா **S. I.**

டிக்கட்டிற்கு பணம் அனுப்புதல் பதில் கோருதல் முதல் எல்லா விஷயத்திற்கும் S. K. வரதராஜுலு, திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கே அனுப்புதல் வேண்டும்.

இந்தியாவிற்கு 1-வது, 2-வது, 3-வது பிரைஸ்கள் கிடைத்திருப்பதோடு — இவ்வளவு முறையும் பல ஜனங்களுக்கும் கிடைத்து வருகிறது.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.